சிலம்புச் செல்வி

இமயப்பதிப்பகம்
நாகப்பட்டினம்

சிலம்புச் செல்வி

புலியூர்க்கிழான் சொக்கலிங்கன்

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்

முதற் பதிப்பு பிப்ரவரி, 57

விலை: ரூபாய் ஒன்றரை

எவரெடி அச்சகம், சென்னை-17

பதிப்புரை

தமிழரின் மிகச் சிறந்த காப்பியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும். இளங்கோவடிகள் சிலப்பதிகாரமும், அவர் நண்பரும் பெரும் புலவருமான சீத்தலைச் சாத்தனார் மணி மேகலையையும் ஆக்கியருளினர்.

கோவலனின் வாழ்வைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களே இரண்டு நூல்களிலும் வந்துள்ளன. முன்னது கோவலன் கண்ணகியுடனும் மாதவியுடனும் வாழ்ந்த இன்ப வாழ்வும், சிலம்பு காரணமாகக் கொலையுண்ட நிலையும்,பிறவும் விரித்துக்கூறும்.

பின்னது, கோவலனின் காதற் கிழத்தியாகிய மாதவி துறவியானதையும், கோவலன் மாதவி இருவருக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலை புத்த தர்மத்தை ஏற்று உயர் நிலை பெற்றதையும் விளக்கும்.

சிலம்பு காரணமாகக் கோவலன் மறைவும், கண்ணகியின் தெய்வீக நிலையும், மாதவியின் துறவும் ஏற்பட்டதோடு மணிமேகலையின் உலகை வெறுத்த துறவற வாழ்வும் ஏற்படலாயிற்று. எனவே, கண்ணகி வரலாறும், மணிமேகலை வரலாறும் இணைந்த இந்நூலைச் சிலம்புச் செல்வி என்ற பெயராலேயேவெளியிடுகின்றோம்.

தமிழினிமையை நுகர்வதில் ஆராத விருப்பம் உடைய தமிழகம் அதற்கு இனிமை சேர்க்கும் இந்நூலையும் விரும்பி வரவேற்கும் என்பது எங்கள் நம்பிக்கை.

பதிப்பாளர்.

1. திருமணமும் இல்வாழ்வும்

பண்டைத் தமிழ்நாடு சேர சோழ, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சேர நாட்டை ஆண்ட மன்னர்கள் சேரர் எனவும், சோழ நாட்டை ஆண்ட மன்னர்கள் சோழர்கள் எனவும், பாண்டிய நாட்டை ஆண்ட மன்னர்கள் பாண்டியர்கள் எனவும் வழங்கப்பெற்றனர். சேரநாடு என்பது சேலம், கோயமுத்தூர், ஜில்லாக்களும் மலையாளப் பகுதியுமாகும். சோழ நாடு திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் அடங்கிய பகுதியாகும். மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் அடங்கிய பகுதி பாண்டியநாடு ஆகும்.

சிலப்பதிகார காலத்தில் சேர நாட்டை அரசாண்டு வந்த மன்னன் சேரன் செங்குட்டுவன் ஆவான். அவன் தம்பி இளங்கோவடிகள்தான் சிலப்பதிகாரத்தை எழுதியவர் ஆவார். சேரன் செங்குட்டுவன் வீரச் செயல் புரிந்த மன்னன். வடநாட்டில் உள்ள அவனது பகைவர்களை வென்றவன்; வஞ்சியைத் தன் தலைநகராகக் கொண்டிருந்தான். அப்போது சோழ நாட்டை அரசாட்சி செய்துவந்த மன்னன் கரிகால் வளவன் ஆவான். அவனது ஆற்றல் அளவிட முடியாதது. புகார் நகரம் அவனது தலைநகராயிருந்தது. அச்சமயம் பாண்டிய நாட்டை அரசு செய்த

மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். அந்நாளில் தென்னாட்டில் புகுந்து. இன்னல் தந்த ஆரியப் படையை வென்றமையால் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் என்ற பட்டப் பெயரை அடைந்தான். இவன் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு அரசு செய்துவந்தான்.

சிலம்புச் செல்வியான கண்ணகி வாழ்ந்த காலத்தில் தான், மேலே சொன்ன மூன்று மன்னர்களும் வாழ்ந்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். சிலம்புச் செல்வியின் வாழ்க்கை வரலாற்றில் இந்த மூன்று முடி மன்னர்களுக்கும் பெரும் பங்கு இருந்தது.

சோழ மன்னரின் தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினத்தில் பெரிய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய கப்பல் வியாபாரி ஆனதால் அவனை எல்லோரும் மாநாய்கன் என்றே அழைத்தனர். அவனுக்குக் கண்ணகி என்ற பன்னிரண்டு வயதுடைய பெண் ஒருத்தி இருந்தாள். அவள், வடிவில் இலட்சுமி என்றும், கற்பில் அருந்ததி என்றும் பெண்களாலேயே புகழப்பட்டாள். அவள் ஒழுக்கத்தின் உறைவிடமாக இருந்தாள்.

அதே நகரில் மன்னன் கரிகாலனுக்குச் சமமாக வைத்து எண்ணப்படுகின்ற அளவுக்குச் செல்வம் படைத்த மாசாத்துவான் என்ற மற்றொரு வணிகன் இருந்தான். அவனது செல்வ வளம் குறித்து, அவனை இரு நிதிக்கிழவன் என்று மக்கள் சிறப்பாக அழைத்தனர். அவனுக்கு, பதினாறு வயதே நிரம்பிய கோவலன் என்னும் மைந்தன் ஒருவன் இருந்தான்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் செய்து வைக்க இருவரது பெற்றோரும் எண்ணினர். ஒரு நல்ல நாளில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் சிறப்

பாக நடந்தேறியது. அவ்வூர்ப் பெண்கள் எல்லாம் புது மணமக்களை, 'எந்தக் காலத்திலும் அன்பு குறையாமல் வாழ் வீர்களாக,' என்று, வாழ்த்தினர்.

பின்னர், கண்ணகியும் கோவலனும் தமது வீட்டில் ஒருவரை ஒருவர் நேசித்து இன்பமாகக் காலம் கழித்து வந்தனர். கோவலன் கண்ணகியின் அருங்குணத்தையும் அழகையும் மிகவும் மெச்சினன்; அவளைப் பாராட்டி மகிழ்ந் தான்.

இவ்வாறு இவர்கள் இனிமையாய்க் காலங்கழித்து வருகின்றபோது ஒருநாள் கோவலனது தாயார், இவர்களைத் தனியே ஒரு மாளிகையில் வசிக்க வைத்தனள். அவர் களும் மன ஒற்றுமையோடு இல்வாழ்க்கை நடத்தினர். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன.

2. கோவலனும் மாதவியும்

அவ்வூரில் மாதவி என்னும் கணிகை ஒருத்தி இருந் தாள். அவள் அழகு, ஆடல், பாடல் முதலியவற்றிற் சிறந்து விளங்கினள். அவள் மிகச் சிறுவயதிலேயே பரத நாட்டியம் கற்றுத் தேர்ந்தவள்; தன் குல ஆசாரப்படி, தனது பன்னிரண் டாவது வயதில், சோழன் கரிகாலனுக்குமுன் தன் பரதநாட் டியத்தை அரங்கேற்ற முயன்றாள். ஒரு நல்ல நாளில் அவ ளது அரங்கேற்றம் நடைபெற்றது. மன்னன் மனமகிழ்ந்து தனது பசும்பொன் மாலையையும், ஆயிரத்தெட்டுப் பொன் கழஞ்சையும் அவளுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

மாதவியின் தாய் சித்திராபதி, மன்னன் கொடுத்த மாலையை, தோழி வயந்தமாலையிடம் கொடுத்து நகரத்தின் பெரிய தெருவில் விற்கும்படி சொன்னாள். அந்த மாலையின் விலை ஆயிரம் பொற்கழஞ்சுகள் என்றும், அதை வாங்கு

பவன்தான் தன் மகள் மாதவிக்குக் கணவன் ஆவான் என்றும் அவள் சொல்லியனுப்பினாள். அரச சபையில் மாதவியின் நடனத்தைக் கண்டதிலிருந்து அவளது அழகில் ஈடுபட்ட கோவலன் அப்பரிசு மாலையை விலைகொடுத்து வாங்கினான். வயந்தமாலையுடன் மாதவி வீட்டுக்குச் சென்றான். கண்ணகியை மறந்து மாதவியின் வீட்டிலேயே அவன் தங்கிவிட்டான். மாதவியும் கோவலனுடன் இன்புற்று வாழ்ந்து வந்தாள். அருமைக் கணவனைப் பிரிந்ததால் கண்ணகி மிகவும் மனம் வருந்தினாள். தாலி ஒன்று தவிர ஏனைய அணிகலன்கள் எதையும் அவள் அணிந்துகொள்ளவில்லை. தலை வாரிக்கொள்வதைக்கூட அவள் கவனிக்கவில்லை. தன்னைப்பற்றிய அக்கறையே இல்லாமலிருந்தாள் அவள்.

இந்திர விழா

அன்று சித்திரா பௌர்ணமி. அது இந்திர விழாவிற்குக் கொடியேற்றம் செய்யவேண்டிய நாள். அதனால், மறவர் பெண்கள் முதிரைப் பண்டம், எள்கசிவு, புலால், பூ, புகை, கள் முதலியவற்றை, நாளங்காடியிலுள்ள பூதத்தின் பலி பீடிகையில் படைத்து. "எங்கள் கரிகால்வளவனுடைய நாடு முழுவதும் பசி, பிணி, பகை நீங்குக; மழையும் வளமும் சுரக்க" என்று வாழ்த்திக் குரவைக் கூத்து ஆடினர்.

வச்சிரக் கோட்டத்தில் உள்ள வீரர்கள் பல பலவிதங்களில் கொண்டாட்டம் ஆடினர். வீதிகளை எல்லாம் பல விதத் தோரணங்களால் அலங்கரித்தனர்.

இவ்வாறு, இந்திரவிழா புகாரில் தொடங்கியதிலிருந்து வேத ஆகமங்களில் கூறிய விதமாய் வேள்விகள் நடந்தன. ஆலயங்களில் விழாக்கள் நடைபெற்றன. தோல்வியடைந்து சிறைப்பட்ட பகைமன்னர்களும், ஏனைபோரும், மன்னனின் கருணையால் விடுதலை செய்யப்பட்டனர். ஆடல்

வல்லோர் ஆடி அகமகிழ்ந்தனர்: பாடல் வல்லோர் பாடிப் பிறரை மகிழ்வித்தனர்.

இவ்விதமாகப் புகார் முழுவதும், பகல் இரவு வேற்றுமை யில்லாமல், இந்திர விழாவால் சிறப்புற்றது. இத் தகைய சிறப்புப் பொருந்திய இந்திர விழா நாட்களில் கணவனைப் பிரிந்திருந்தமையால் கண்ணகி கண் கலங்கினுள். கோவலனோடு இருந்தமையால் மாதவி மகிழ்வு கொண்டாள்.

கடலாடியது

இமயமலைப் பகுதியில் உள்ள உத்தர சேடியில் வித்யாதரன் ஒருவன் தனது காதலியுடன் ஒரு பூங்காவில் இருந்தான். தென்னுட்டில் இந்திர விழாவிற்குக் கொடியேற்றுவது தெரிந்து, அவன் தன் காதலியுடன் செல்லத் தீர்மானித்தான். இருவரும் ககனமார்க்கமாய் வந்தனர். வரும் வழியில், கங்கை ஆறு, அவந்திப் பட்டணம், காவிரி நாடு ஆகியவற்றைத் தன் காதலிக்குக் காட்டினுன். இருவரும் புகார்நகரம் வந்து சேர்ந்தனர். இந்திர விழா நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர். இந்திர விழாவிலே மாதவி நடனம் ஆடியதைப் பார்த்த, அந்த இருவரும் அதிசயப்பட்டார்கள்.

இந்திர விழாவும், மாதவியின் ஆட்டமும், பாட்டும், மாதவியின் அலங்காரமும் முடிவுபெற்றது. மேற்கொண்டு, மகிழ்ச்சிதரக்கூடியது எதுவும் இல்லை. அதனுல், கோவலன் மனவெறுப்போடு இருந்தான். அதைக் கண்ட மாதவி அவனை மகிழ்விக்க நினைத்தாள். அவனை வாசனை நீரில் குளிக்கச் செய்தாள். அவனுக்கு நல்லாடை, நல்லணி முதலியவை அணிவித்தாள். தன்னையும் அலங்காரம் செய்து கொண்டாள். அவனுடன் அன்பாக, அளவளாவி இருந்தாள்.

இந்திர விழா முடிந்த மறுநாளில், கடற்கரையில் நடைபெறும் விளையாட்டுக்களைக் காண விரும்பினாள் மாதவி.

கோவலனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். மறுநாட் காலை வைகறையில் கோவலனும் மாதவியும் கடற்கரையை அடைந்தனர். அங்கே, மாதவி தன் தோழியருடன் விளையாடத் தங்கினாள்.

அரசகுமாரர், அவர்களது உறவினர், பணியாள், வணிகர் அவர்களது பெண்டுபிள்ளைகள், ஆட்டம் ஆடும் அணங்குகள் யாவரும் தத்தமது கூடாரங்களில் தங்கியிருந்தனர். அந்தக் கூடாரங்களிலிருந்து கிளம்பிய ஒலி, பேரிரைச்சலாக இருந்தது.

இத்தகைய சிறப்புப் பொருந்திய கடற்கரையின் ஒரு புறத்தில், சித்திரச் சீலைபால் அலங்கரிக்கப்பட்ட கூடாரத்தில், ஒரு தந்தக் கட்டிலில் கோவலனும் மாதவியும் ஆனந்தமாய் வீற்றிருந்தனர்.

மாதவி, தன் தோழி வயந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கி மீட்ட ஆரம்பித்தாள். யாழிலே சுரபேதம் இருப்பதை உணர்ந்தாள். அதைக் கோவலனிடம் கொடுத்து வாசிக்கும் இடம் யாதென்று கேட்டாள். யாழை வாங்கிய கோவலன், மாதவி மனம் மகிழும்படி வரிப்பாடல்களை வாசித்தான். அவன் வாசித்த வரிப்பாடல்களை மாதவி தவருகப் புரிந்துகொண்டாள். கோவலன் தன்னை மறந்து வேறு யாரோ ஒரு பெண்மீது ஆசை கொண்டுவிட்டதாக எண்ணிவிட்டாள். கோவலனிடமிருந்து யாழை வாங்கிய மாதவி, விளையாட்டாக, தானும் சில வரிப்பாடல்களை வாசிக்கத் தொடங்கினாள். அந்தப் பாடல்கள் கோவலனின் மனத்துக்கு ஐயத்தைத் தந்தன. மாதவி வேறு யாரோ ஒரு வாலிபன்மேல் காதல் கொண்டுவிட்டதாக எண்ணிவிட்டான் கோவலன். "பொழுது போய்விட்டது; எழுந்

திருப்போம்'' என்று சொல்லி எழுந்தவன் தான்மட்டும் தனியே தன் ஏவலாட்களுடன் புறப்பட்டுவிட்டான். மாதவி தனது ஆயமகளிருடன் வண்டியேறித் தனியாக வீடு திரும்பினுள்.

கோவலனுடைய விதி பலிக்குந் தருணமாக இருந்த தால் அந்த யாழ்ப்பாட்டு அவன் பிரிந்து சென்றதற்கு ஒரு காரணமாயிற்று.

3. புகாரை நீங்குதல்

விளையாட்டு வினையாகிவிட்டது. கோவலன் மனம் வருந்தி வீடு திரும்பினதால் வாட்டமுற்ருள் மாதவி. நிலா முற்றத்தில் வீற்றிருந்தாள்; தென்றல் வீசியது; இயற்கையின் வனப்பு அருமையாக இருந்தது. மாதவி, சகோட யாழை மீட்டி, இனிமையாகச் சில பண்களைப் பாடினுள். மருதப் பண் வாசிக்கும்போது, கோவலனைப் பிரிந்த காரணத்தால் மயங்கிவிட்டாள். தன் தவறை ஒப்புக்கொண்டு, தன்னை மன்னித்துவிடும்படி கோவலனுக்கு நிருபம் எழுதினுள். அதை வயந்தமாலையிடம் கொடுத்தனுப்பினுள்.

வயந்தமாலை, கோவலனைக் கண்டு அவனிடம் கடிதத் தைக் கொடுத்தாள். அதைப் படித்தான் கோவலன், "எல்லாம் நடிப்பு! நான் நம்பமாட்டேன் அவளது போலித் தனத்தை" என்று சொல்லி, வர மறுத்துவிட்டான். மனம் வருந்திய வயந்தமாலை அந்தச் செய்தியை மாதவியிடம் சொன்னுள். 'இன்றைக்கு வராவிட்டாலும் நாளைக்காவது வந்துவிடுவார்' என்று எண்ணினுள் மாதவி. அன்றிரவு முழுதும் அவள் தூங்காமல், மனம் வருந்திக்கொண் டிருந்தாள்.

கண்ணகிக்குத் தேவந்தி என்ற ஒரு தோழி இருந் தாள். கண்ணகியின் வாழ்க்கை நிலையை எண்ணி, வருத்த

முற்ற அவள், ஒரு நாள் கோயிலுக்குச் சென்று கடவுளை அருச்சித்து வந்தாள். கண்ணகியிடம் வந்து, "நீ உனது கணவனைப் பெற்று மகிழ்வாயாக" என்று ஆசி கூறினாள். அதைக் கேட்ட கண்ணகி, அவளைப் பார்த்து, 'நான் நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். அதில் நானும் என் கணவரும் ஒரு பெரிய நகரத்துக்குள் நுழைந்தோம். அங்கு அடாத ஒரு அபவாதத்தை என் கணவர்மேல் சுமத்தினதால் என் கணவருக்குத் தீங்கு நேர்ந்தது என்று பக்கத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அதைக் கேட்ட நான் அரசன்முன் சென்று வழக்கைச் சொன்னேன். அதனால் அரசனுக்கும் அந்த ஊருக்கும் தீங்கு ஏற்பட்டது" என்று சொன்னாள்.

அதைக் கேள்வியுற்ற தேவந்தி, வருந்தவேண்டாம் என்று கண்ணகிக்கு ஆறுதல் சொன்னாள். மன்மதன் ஆலயம் சென்று தொழுதால் நன்மையுண்டு என்று சொன்னாள் தேவந்தி. கண்ணகி 'அது எங்கள் குலத்துக்கு வழக்கமில்லை' என்று சொல்லி மறுத்துவிட்டாள்.

இவ்வாறு, இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது, பணிப்பெண் ஒருத்தி வந்து, "கோவலன் வருகிறார்" என்று அறிவித்தாள். கோவலன், கண்ணகி அமர்ந்திருந்த அறையினுள் நுழைந்தான். அவளது வாடிய மேனி கண்டு உள்ளம் வருந்தினான். பரத்தையால் தன் பொன், பொருள் யாவும் பாழானது என்று சொன்னான். அதைக் கேட்ட கண்ணகி, மாதவிக்கு மேலும் கொடுக்கப் பொருள் இல்லை என்று கோவலன் வருத்தப்படுவதாக எண்ணித் தனது காற்சிலம்புகளைத் தருகிறாள். அவற்றைப் பெற்றுக்கொண்ட கோவலன், கண்ணகியைத் தன்னுடன் மதுரை நகருக்கு வரவேண்டும் என்று அழைத்தான். இழந்த பொருளை வாணிகம் செய்து மீட்டலாம் என்று கூறி அவளை அழைத்தான். கண்ணகியும் அதற்கு ஒப்புக்கொண்டாள்.

4. வழியில் நடந்தது

முன் செய்த ஊழ்வினையின் பயனாய் கோவலனும் கண்ணகியும் ஒருவரிடமும் சொல்லாமல், அதிகாலையில் புகார் நகரை விட்டுப் புறப்பட்டனர். செல்லும் வழியில் பல ஆலயங்களைக் கண்டு தொழுதனர். பல ஊர்களைக் கடந்து வந்தனர். இவ்வாறு ஒரு காதத் தூரம் நடந்து சென்ற களைப்பினால் கண்ணகி வருந்தினாள். அதுகண்ட கோவலன், மனம் வருந்தினான். இளைப்பாறுவதற்காக ஒரு சோலையில் கண்ணகியுடன் தங்கினான். அப்போது கண்ணகி, "மதுரை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று கோவலனை வினவினாள். அவனும் 'ஐந்தாறு காதங்கள்' என்று இரு பொருள்படும்படியாகக் கூறினான்.

பின்னர் இருவரும் சென்று அருகில் தவக்கோலத்துடன் இருந்த கவுந்தியடிகளைக் கண்டனர்; அவரது அடி தொழுதனர். அவர்களைப் பார்த்த அடிகள், "நல்ல குடியிலே பிறந்தவர்களாகத் தெரியும் நீங்கள் தீயசெயல் செய்தவர்களைப்போல ஊரைவிட்டு ஓடி வந்திருக்கிறீர்களே இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்குக் கோவலன், "மதுரைமாநகர் சென்று பொருள் தேட எண்ணியிருக்கிறேன்" என்று பதிலிறுத்தான்.

கண்ணகியின் மென்மையான கால்கள் கல்லிலும் முள்ளிலும் நடந்தால் வருந்துமே என்று எண்ணினார், கவுந்தியடிகள். சொந்த ஊருக்குத் திரும்பிப்போகச் சொன்னாலும் அவர்கள் போகமாட்டார்கள் என்றும் எண்ணி, அதனால் தாமும் அவர்களுடன் மதுரைக்கு வருவதாகக் கூறினார். அது கேட்ட கோவலனின் மகிழ்வுக்கு எல்லையே இல்லை. அடிகளை வாழ்த்தினான். நன்றி தெரிவித்தான்.

வரும் வழியில் காவிரி நதி கடலிலே கலக்கும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். வயற் பரப்பிலே நெற்கதிர்கள் தலையாட்டி ஆடுவதைக் கண்டு ஆனந்தப்பட்டனர். இயற்கையின் வனப்பு அவர்களது இதயத்தைக் கவர்ந்தது. உழவர்களின் பாடல் அவர்களது உள்ளத்துக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டும், கேட்டுக்கொண்டும் வந்ததனால், மூவரும் நடையினால் ஏற்பட்ட வருத்தம் தெரியாது நடந்தனர்.

மூவரும், இவ்வாறு ஊர் ஊராய், காதங் காதமாய் கடந்துவந்தனர். வழியிலே பல நாள் களைப்பாறத் தங்கினர். ஒரு நாள் அவர்கள் ஒரு சோலையில் தங்கியிருந்தபோது, சில சாரணர்கள் அங்கு வந்தனர். அவர்கள் அருகக்கடவுளால் இயற்றப்பட்ட ஆகமங்களை உணர்ந்து பிறருக்கு ஓதுபவர்கள். அவர்களைக் கண்டதனால் தங்களது பாவங்கள் யாவும் ஒழிந்தன என்று எண்ணி, அவர்களை இம்மூவரும் வணங்கினர். அந்தச் சாரணர்களில் மூத்தோன் கவுந்தியடிகளிடம், ஊழ்வினையின் வலிமையை எடுத்துச் சொன்னான். பின்னர் அச்சாரணர் வானவெளியில் பறந்து சென்றனர்.

அதன் பின்னர் அச்சாரணர்களைத் துதித்துப் பிறகு மூவரும் ஓடத்தில் ஏறிச் சென்றனர். காவிரி நதியைக் கடந்தனர். தென் கரையில் உள்ள அழகான ஒரு பூங்காவை அடைந்து, அதில் தங்கினார்கள். அதே சமயத்தில் வம்பர்களான ஒரு ஆணும் பெண்ணும் அந்தச் சோலையை அடைந்தனர். கோவலனையும் கண்ணகியையும் கண்ட அந்த வம்பர்கள், அவர்கள் யாரெனத் தெரிந்துகொள்ள விரும்பினர். கவுந்தியம்மையை நாடி, அவர்கள் யாவர் எனக் கேட்டனர். கவுந்தியடிகள், "அவர்கள் என் மக்கள்" என்று சொன்னார். அது கேட்ட அந்த வம்பர்கள் தங்களது இயல்பான குணத்தைக் காட்ட ஆரம்பித்தனர். கவுந்தியம்

மையை நோக்கி, "அம்மையே அவர்களைத் தங்கள் மக்கள் என்கிறீர்கள். அவர்கள் பழகும் முறை சகோதர சகோதரியர் மாதிரி இல்லையே" என்று, கிண்டலுடன் கேட்டனர். இந்தக் கேலிப் பேச்சைக் கேட்ட கவுந்திக்குக் கோபம் வந்துவிட்டது. தனது அருமைச் செல்வியை இகழ்ந்த அந்த வம்பர்களை, நரியாகும்படி சபித்துவிட்டார். சாபம் உடனே பலித்துவிட்டது. அந்நரிகளின் ஓலத்தைக் கேட்ட கோவலனும் கண்ணகியும் நடுங்கினர். அவர்கள் இருவரும் கவுந்தியம்மையை நோக்கி, வம்பர்கள் நெறியில்லாதன சொன்னாலும் அதை அறியாமை என்று எண்ணி மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அந்த வம்பர்களுக்குச் சாப விமோசனம் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களது வேண்டுகோளைக் கவுந்தியடிகள் ஏற்றுக்கொண்டார். 'அந்த வம்பர்கள் உறையூருக் கடுத்த நொச்சிக்காட்டில் ஒதுங்கி, ஒரு வருடம் நோயினால் அவதிப்பட்டுப் பின்னர் தம் சுய உருவம் பெறுவார்களாக" என்று, சாப விமோசனம் செய்தார்.

அதன்பின்னர் கோவலன், கண்ணகி, கவுந்தி மூவரும் உறந்தை என்னும் நகரை அடைந்து அங்கு தங்கினர்.

காடு கண்டது

மூவரும் மறுநாள் வைகறையில் உறந்தையை விட்டுப் புறப்பட்டனர். சூரியன் உதயமாகிவிட்டமையால், அவர்கள் வளமான சோலை ஒன்றில் உள்ள மண்டபத்தில் தங்கினர். அவ்விடத்தில் ஒரு மறையவன் பாண்டியனைப் பலவாறு வாழ்த்திக்கொண்டிருந்தான். பாண்டிய மன்னனின் குலப் பெருமையைப் பலபடப் பாராட்டிக்கொண்டிருந்தான். தென்னவன் வாழ்க என்று வாழ்த்துப் பாடிகொண்டிருந்தான். கோவலன் அவனை அணுகி, அவனது ஊர் எது,

அவன் அங்கு வந்த காரணம் என்ன என்று கேட்டான், அதற்கு அம்மறையவன் பின்வருமாறு கூறினன்;

" நான் மாங்காடு என்னும் ஊரைச் சேர்ந்தவன். திரு அரங்கத்திலே சயனித்துள்ள திருமாலின் திருக்கோலத்தையும், திருவேங்கட மலையில் உள்ள திருமாலின் நின்ற திருக்கோலத்தையும் காண விரும்பினேன். அதற்காக இங்கு வந்தேன். வரும் வழியில் பாண்டிய நாட்டிலுள்ள சிறப்பையும், பாண்டிய மன்னனின் கொடை வளத்தையும் பிறர் சொல்லக் கேட்காது, என் கண்ணாலேயே கண்டேன். அதனால் அம் மன்னனை இவ்வாறு வாழ்த்தினேன். இதுதான் என் வரலாறு" என்றான். இதைக் கேட்ட கோவலன் மதுரைக்குப் போகும் வழியைத் தயவு செய்து சொல்லவேண்டும் என்று அந்த மறையவனிடம் கேட்டான். மறையவனும் வழியைச் சொன்னான். வழியில் உள்ள ஆலயங்களின் அற்புதத்தையும், இயக்கிகளின் தன்மையையும் சொன்னான். வனங்களில் உலவும் தேவதைகளிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; அவை மனிதர்களை மயக்கவரும் என்றும் எச்சரிக்கை செய்தான் அவன். அந்த மறையவனை அனுப்பிவிட்டு, அம்மூவரும் அன்றைய தினம் ஓர் ஊரில் தங்கியிருந்தார்கள்.

மறுநாட் காலை அந்த ஊரை விட்டுப் புறப்பட்டனர். வழியில் ஓரிடத்தில் கண்ணகியும் கவுந்தியும் சிறிது களைப்பாற உட்கார்ந்தனர். தண்ணீர்த்தாகம் அதிகமாக இருந்தது கோவலனுக்கு. அருகில் உள்ள நீர் நிலையில் நீரருந்தச் சென்றான். அவன் அதன் கரையில் நின்று கொண்டிருந்த போது, மறையோன் சொன்ன வன தெய்வம் கோவலனைக் கண்டது. அவன் மேல் காதல் கொண்டது. அவனை மயக்குவதற்காக, மாதவியின் தோழி வயந்தமாலையின் உருவம் எடுத்தது;. அவனது காலில் விழுந்து அழுதது. மாதவியைப் பற்றிப் பலவாறு எடுத்துரைத்தது. மாதவி

வாட்டமாக இருக்கிருளென்றும், தன்னிடம் கோவலனை அழைத்து வரும்படி சொன்னுள் என்றும் சொல்லி ஏமாற்ற முயன்றது.

வழிப்போக்கர்களை இவ்விதமான நடிப்பினல் மயக்கும் வனதேவதை அக்காட்டில் உண்டு என்று மறையவன் சொன்னது கோவலனுக்கு நினைவுக்கு வந்தது. அந்தப் போலிப் பெண்ணின் உண்மையை அறியும் பொருட்டு கோவலன் அந்தரி மந்திரத்தைச் செபித்தான். உடனே அந்த வனதேவதை நடுங்கி உண்மையை ஒப்புக்கொண்டது. தான் செய்த பிழையைக் கண்ணகியிடமும் கவுந்தியிடமும் கூறவேண்டாம் என்று கோவலனை வேண்டிக் கொண்டு, மறைந்தது.

பிறகு, கோவலன் அந்தப் பொய்கையிலிருந்து நீர் முகர்ந்து கொண்டுவந்து, கண்ணகிக்குத் தந்தான். அதன் பின்னர் மூவரும் பயணத்தைத் தொடர்ந்தனர். வெப்பம் அதிகரிக்கவே, கண்ணகியின் பாதங்களில் கொப்புளங்கள் கண்டுவிட்டன. மேலும் அந்தக் காட்டில் செல்வது அரிது என்று உணர்ந்தனர். அதனுல் குளிர்ந்த பூஞ்சோலையில் மனிதர் நடமாட்டமில்லாத இடத்தில் தங்கி இளைப்பாறினர்.

வேட்டுவர் பூசை

அந்தச் சமயத்தில் மறவர் வாழும் பகுதியில் அவர்கள் குடியில் பிறந்த சாலினியின் மீது ஆவேசம் வந்தது. அவள் ஆவேசத்தில் பின்வருமாறு கூறினுள் !

" மறவர் குடிமக்களே ! நீங்கள் முன்பு கொடுப்பதாகச் சொன்ன பிரார்த்தனையை இதுவரை செலுத்தவில்லை. கலைமானை வாகனமாகக் கொண்ட குமரி தனக்குத் தர-வேண்டிய உயிர்ப் பலியைப் பெற்றுக்கொள்ளாமல் உங்க

ளுக்கு வெற்றிதரமாட்டாள். அதனால் நீங்கள் உடனே பலியைக் கொடுக்கவேண்டும்."

அதைக் கேட்ட மறவர்கள், உடனே தங்கள் குடியில் பிறந்த ஒரு குமரியைப் பலி கொடுக்கத் தீர்மானித்தனர். பலி கொடுப்பதற்குண்டான சடங்குகள் யாவும் நிறைவேற்றப்பட்டன. அப்போது, களைப்பினால் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த கண்ணகியைச் சாலினி நோக்கினாள். ஆவேசங்கொண்டு, கண்ணகியை, "கொங்கச் செல்வி, குடமலையாட்டி—தென்தமிழ்ப் பாவை; செய்தவக் கொழுந்து, ஒரு மாமணியாக உலகிற்கு ஓங்கிய திருமாமணி" என்றெல்லாம், கூறினாள். இந்தப் புகழுரையைக் கேட்ட கண்ணகி, வெட்கப்பட்டுத் தன் கணவனின் பின்புறம் ஒடுங்கி நின்று மெள்ளச் சிரித்தாள். அதன் பின்னர், அந்தக் குமரி, மறவர்களுக்கு வரம் தந்து மறைந்தாள்.

5. புறஞ்சேரியிறுத்தது

வேடுவர்களின் வரிக்கூத்து முடிந்தது. சாலினியும் அவ்விடம் விட்டுச் சென்றாள். பின்னர் கோவலன் கவுந்தியடிகளை நோக்கி, "பருக்கைக்கற்கள் தரும் துன்பத்தால் கண்ணகி பகலில் நடக்க முடியாமல் வருந்துகிறாள். பாண்டிய மன்னனின் நல்லாட்சியினால் காட்டு மிருகங்கள்கூட மனிதர்களைத் தொல்லை படுத்தா. அதனால் நாம் இரவு நேரத்தில் பயணம் செய்வோம். பகலில் தங்கி இளைப்பாறுவோம்" என்று, சொன்னான். கவுந்தியடிகளும் ஒப்புக்கொண்டார். நிலவின் உதயத்தை மூவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். கற்களால் அவதிப்பட்ட கண்ணகிக்கு ஆறுதல் சொல்லிக் கைகொடுத்து அழைத்துச் சென்றான் கோவலன். வேனிற்காலத்தின் வெப்பத்தால் காட்டுக்கோழிகள் கூவின. சூரியோதயத்தின் வரவை அவை சொல்லின. அருகிலே இருந்த, அந்தணர் வாழும் பகுதியை அடைந்தனர். அதற்

குப் பக்கத்தில் உள்ள ஆலயத்தில் பகற்பொழுதைக் கழிக்கத் தங்கினார்கள். கவுந்தியம்மையையும் கண்ணகியையும் ஒதுக்கமான ஓரிடத்தில் வைத்துவிட்டு, காலைக் கடன்களை முடிக்கச் சென்றான் கோவலன்; அவன் ஒரு பொய்கையை அடைந்தான். அங்கே கௌசிகன் என்ற ஓர் அந்தணன் வந்து சேர்ந்தான். அவன் மாதவிபால் அனுப்பப் பட்டான். கோவலனது உருவம் மாறுபட்டிருந்ததைக் கண்டு அடையாளந் தெரியாமல் தவித்தான் அவன். அவன் கோவலனா இல்லையா என்பதை அறிந்துகொள்ள ஒரு வழியைக் கையாண்டான். மாதவிக்கொடி ஒன்றை நோக்கி,' கோவலனது பிரிவினால் எய்திய மாதவியைப்போல் நீயும் வெய்யிலினால் துன்பப்பட்டு வருந்தினாய்போலும்'' என்று, கூறினான். இதைக்கேட்டதும் கோவலன் " இவ்வாறு கூறியதன் பொருள் என்ன ? " என்று கௌசிகனைக் கேட்டான். உடனே கௌசிகன் அவன்தான் கோவலன் என்று தெரிந்துகொண்டான். இவர்களது வெளியேற்றத்தால் கோவலனது பெற்றோர் துயருற்றதையும் மாதவி மனம் வருந்தியதையும் எடுத்துச் சொன்னான்.

கோவலனுக்காகத் தன்னிடம் மாதவி ஓலை கொடுத்தாளென்றும், அதைக் கையில் வைத்துக்கொண்டு ஊர் ஊராய் அலைந்ததாகவும் கடைசியில் அங்கு வந்ததாகவும் சொன்னான். அந்த ஓலையைக் கோவலனிடம் கொடுத்தான். அந்தக்கடிதத்தைப் படித்ததில் மாதவியின் நல்ல பண்பு தெரிந்தது. அதைப் படித்த கோவலன், " மாதவி நல்லவள் ; எனது தீவினைதான் எங்களைப் பிரித்துவிட்டது '' என்று சொல்லித் தேர்ச்சி கொண்டான். " இந்த ஓலையைத் என் பெற்றோருக்குக் காட்டி அவர்களது துயரத்தைத் தீர்ப்பாயாக " என்று சொல்லிக் கௌசிகனை அனுப்பினான்.

பின்னர், அவ்விடத்தில் வந்த பாணர் கூட்டத்தோடு இம் மூவரும் சேர்ந்து மதுரை நோக்கிப் புறப்பட்டனர்.

கோவலன் அவர்களுடன் கூடி, பல பண்களை வாசித்தான். மதுரை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்று பாணர்களை வினவினன். அவர்கள் அங்கு வந்துகொண்டிருந்த, அகிற்புகை, சுருதிப்புகை, அட்டிற்புகை, மோதகப் புகை ஆகிய பலவிதமான புகையைக்கொண்டு, மதுரை அருகில்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். இம் மூவரும் வழக்கம்போல் அன்று பகல் அங்குத்தங்கி, மறு நாளிரவு மதுரையை நோக்கிப் புறப்பட்டனர்.

வைகறைப் பொழுதில் மதுரையை அடைந்தனர். ஆலயங்களில் வேதியர்கள் ஓதும் வேதஒலியும், வீரர்கள் வாசித்த முழவின் ஒலியும் கேட்டுத் தங்களது வருத்த மெல்லாம் ஒழித்துக் களிப்புற்றனர்.

வைகையை அடைந்தனர். அதை வணங்கினர். மரப்புணையில் ஏறி வைகையைக் கடந்தனர். பலர் நடமாட்ட மில்லாத தென்கரையை அடைந்தனர். நகரை வலம் வருவது நல்லது என்று எண்ணி அப்படியே செய்தனர். அதன்பின் தவம் செய்யும் தபோதனர்கள் வசிக்கும் புறஞ் சேரியினுள் புகுந்தனர். கண்ணகியும் கோவலனும் அடையப் போகும் துன்பத்தை அறிந்து ஓங்குவது போலக் குவளை மலரும், தாமரை மலரும் கண்ணீருகுத்து ஆடின. கோட்டைச் சுவரில்கொடி மடிந்து ஆடுவது, அவர்களை இந்நகரத்துக்குள் வரவேண்டாம் என்று சொல்வது போலத் தோன்றியது.

6. அடைக்கலம் தந்தது

மதுரை மாநகரின் புறஞ்சேரியில் உள்ள பண்ணைகளிலெல்லாம் பறவை இனங்கள் துயில் எழுந்து ஆரவாரம் செய்தன. புகழ்நிறைந்த கூடல் பதியை ஆதவன் தன் வருகையால் துயில் எழுப்பினன். திருமால் கோயில், பல

தேவர் நகரம், முருகன் கோயில், அரண்மனை முதலிய பல இடங்களிலும் முரசு, சங்கு, கொம்பு, பேரிகை முழங்கின.

அப்போது கோவலன், தியானத்திலிருந்த கவுந்தியை வணங்கி, " தவம் செய்பவரே! நான் பரத்தையுடன் சேர்ந்து, நெறியிலிருந்து விலகினேன். என் அன்பு மனையாள் கண்ணகிக்கு ஆருத் துன்பத்தைக்கொடுத்துவிட்டேன். நான் இந்த நகரிலுள்ள வணிகர்களுக்கு என் நிலைமையை உணர்த்தி வருமளவும் இவளுக்கு யாதொரு துன்பரும் வராது காத்தருள வேண்டுகிறேன்" என வேண்டிக் கொண்டான்.

அதுகேட்ட கவுந்தியடிகள் கோவலனுக்குச் சில தத்துவங்களை உணர்த்தினர். "உலகத்தில் இன்பமும் துன்பம் ஏற்படுதல் இயல்பு. அதைச் சரிசெய்து ஏற்றுக் கொள்ள வேண்டியது மக்கள் பொறுப்பு. எத்தனையோ மன்னர்கள் தங்கள் மனையாளைப் பிரிந்து திண்டாடி யிருக்கின்றனர். நீயோ துன்பத்திலும் உன் மனையாளைப் பிரியாமல் இருக்கிருய். இதனால், அவர்களை விட நீ மேன்மையானவன். ஆதலால் இனிமேல் நீ வருந்தவேண்டாம். மதுரை நகருக்குள் சென்று ச்ராவக நோன்பு இயற்றுவதற்கு ஏற்ற இடத்தை அறிந்துவா" என்று சொல்லி அவனைத் தேற்றி அனுப்பினர்.

கோவலனும் அவ்வாறே புறப்பட்டான். கோட்டை வாயிலைக் காப்பவர்கள் இவனைப் புதியவன் என்று சந்தேகம் கொள்ளாதபடி நகருக்குள் நுழைந்தான். சூரியனின் வெப்பம் அதிகமா யிருந்தது. யானைகள் கூட வெய்யில் தாளமுடியாமல் சோர்ந்தன. மலை நாடுகளில் உள்ள மூங்கிற் காடுகள் தீப்பற்றிக்கொண்டன. இதனால் கோவலன், வெய்யில் படாதபடி, கொடிகள் சூழப்பட்ட பந்தலின் நிழலிலேயே வீதி தோறும்சென்று சுற்றிப் பார்த்தான். கடை வீதிகளில் கவசமும், கவரியும் கணக்கிட முடியாத பலவகைப்

பண்டங்களும் இருந்தன. இரத்தினக் கடை வீதியில் நவ ரத்தினங்களும் இருந்தன. அவற்றின் சிறப்பை அறிந்த வணிகப் பெருமக்களும் இருந்தனர். தங்கக் கடைகள் ஒருபுறம்; துணிக் கடைகள் ஒரு புறம். வீதியின் ஒரு ஓரத்தில் தானியக் கடைகள் இருந்தன. நகரம் இவ்வித மாய் அழகு பொருந்தித் திகழ்ந்தது. இதையெல்லாம் கண்ட கோவலன் மகிழ்ச்சிகொண்டு, புறஞ்சேரிக்குத் திரும்பினுன்.

7. மறையவன் கூறியது

பாண்டியருடைய செங்கோலின் சிறப்பால் மக்களின் பசி நீங்கியது. அவனது வெண் கொற்றக் குடையின் தன் மையால் நாட்டில் பிணி நீங்கியது. அவனது வேலின் ஆற் றத்தால் பகை நீங்கிப் பண்பு மேம்பட்டது. அத்தகைய மதுரையின் பல வளங்களையும் கண்டு திரும்பிய கோவலன் அதன் சிறப்பைக் கவுந்தியடிகளுக்குக் கூறிக் கொண்டிருந் தான். அப்போது காந்தியடிகளிருந்த அறப்பள்ளியில் இளைப்பாறிக் கொண்டிருந்த தன் நண்பன் மாடலனைக் கண் டான். அவன் குமரி தீர்த்தத்தில் நீராடி, தன் ஊருக்குத் திரும்பிய வழியில் அந்த அறப்பள்ளியில் தங்கியிருந்தான். மறையோனுகிய அந்த நண்பனைக் கண்ட கோவலன் வணங்கினுன். அப்போது அந்த மறையவன், கோவலனும் கண்ணகியும் அவ்விடம் வருவதற்குக் காரணம் என்ன வென்று விளக்கமாகச் சொன்னுன்.

"முன்பு, மாதவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் பெயர் சூட்ட வேண்டுமென்று பெரியவர்கள் நினைத்திருந்தார்களல்லவா? அந்தச் சமயம் நீ சென்று உன் முன்னோர்களில் ஒருவன் கப்பலுடைந்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தானென்றும், சில நாட் கழித்து,

மணிமேகலை என்னும் தெய்வம் அவன் எதிரில் தோன்றி, அவன் புண்ணியம் செய்திருந்தால் அவனைக் காப்பாற்றுவ தாகவும் சொல்லி அவனைக் கரையிற் சேர்த்துவிட்டது என் றும், அதனால் அப்படிப்பட்ட உங்கள் குல தெய்வமான மணி மேகலையின் பெயரைத்தான் உனது குழந்தைக்குச் சூட்ட வேண்டுமென்றும் நீ சொன்னாய். பெரியவர்களும் அப்படியே செய்தனர்.

"அன்றைய தினம் நீயும் மாதவியும் ஏழை எளியவர் களுக்குப் பொன்னும் பொருளும் பரிசாகத் தந்தீர்கள். அந்தச் சமயத்தில் ஓர் ஏழை அந்தணன் முதுமையால் தள் ளாடி வந்தான். பாகனைமீறி வேகமாக தெருவில் வந்து கொண்டிருந்த யானை அந்த முதியவனைத் தன் துதிக்கை யால் வாரிக்கொண்டது. அதைக் கண்ட நீ உடனே அந்த யானையின்மேல் பாய்ந்து அம்முதியவனை விடுவித்தாய். அந்த யானையின் கொம்பினைப்பற்றி, அதன் தலைமேல் ஏறி அதன் மதத்தை அடக்கினாய். நீ கருணை வீரன் என்பதில் சந்தேகமே இல்லை.

"ஒரு கீரிப்பிள்ளை தன்னை வளர்க்கும் அந்தணனுடைய குழந்தையைக் காத்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒரு பாம்பு அந்தக் குழந்தையை அணுகப்போகும் சமயத் தில், கீரி அதைப் பார்த்துவிட்டது. அம்பாம்பைத் துண் டித்து இரத்தம் கொட்டிய வாயுடன், தன் எசமானியைக் காணச் சென்றது. குடத்தில், நீர் கொண்டுவரும் அந்தப் பார்ப்பனப் பெண், கீரியின் வாயிலுள்ள இரத்தத்தைப் பார்த்தவுடன் பயந்துபோனாள். கீரி தன் குழந்தையைக் கொன்றுவிட்டது என்று எண்ணி, அதன் தலைமேல் தண் ணீர்க் குடத்தைப் போட்டுக் கொன்றுவிட்டாள். பின்னர் தான் கீரி குற்றமற்றது என்று தெரிந்தது. அது கண்ட அந்தப் பெண் வருந்தினாள். அந்தத் தவறைப் பொறுக்கமுடியாத அவளது கணவன், அவளுடன் வாழ விருப்பம் கொள்

ளாமல் எங்கேயோ போய்விட்டான். வடமொழி வாசகம் உள்ள ஓலையை அவளிடம் கொடுத்து, 'அதன் பொருள் உணர்ந்தவர்களிடம் கொடு' என்று சொல்லி பாப விமோசனம் செய்வதற்காகக்கங்கைக்குச் சென்றுவிட்டான். அவள் அந்த ஓலையைக் கையில் வைத்துக்கொண்டு வீதி வீதியாக அலைந்தாள்.

"அவளை நீ கண்டாய். அவளது துன்பம் என்ன என்று கேட்டாய். அவள் அந்த ஓலையை உன்னிடம் தந்தாள். நீ அதைப் படித்தாய். அவளது துயரை நீக்குவதாகச் சொன்னாய். அதன்படி பாபத்தை விமோசனம் செய்வதற்குரிய பொருளைத் தானம் செய்தாய். அத்துடன், அவளது கணவனை வரவழைத்து, அவர்களது இல்வாழ்க்கை மறுபடியும் நடக்க ஏற்பாடு செய்து, ஏராளமான பொன்னும் பொருளும் அவர்கட்குக் கொடுத்தாய்.

"ஒரு பத்தினிப் பெண்மீது அடாத பழி சுமத்திய பொய்யன் ஒருவனைச் சதுக்க பூதம் கொலை செய்ய அழைத்துச் சென்றது. அப்போது அந்தப் பொய்யனின் தாயார் அழுதது கண்டு நீ மனமிரங்கினாய். அந்தப் பூதத்திடம் சென்று உன்னுயிரை ஏற்றுக்கொண்டு, அவனை விட்டுவிடுமாறு கேட்டாய். பூதம், "தவறு செய்தவனைத்தான் தண்டிப்பேன்" என்று சொல்லி, அவனைக் கொன்றுவிட்டது. பின்னர் அவனது தாயாருக்கும், சுற்றத்தாருக்கும் தேறுதல் கூறி நீ வேண்டிய பொருள் கொடுத்தாய்.

"இந்த விதமாக, இந்தப் பிறவியில் நீ செய்ததெல்லாம் நல்ல செயல்கள். அப்படியிருக்க, உன் அன்பு மனையாளுடன் கானகத்துக்குத் தனித்து வந்தது முன்வினைப் பயனாகத்தான் இருக்கும்." என்று சொல்லி, அனுதாபப்பட்டான்.

இதைக் கேட்ட கோவலன், தான் அதற்கு முந்திய நாள் புலர்காலைப்பொழுதில் ஒரு தீக்கனவு கண்டதாகச் சொன்னான். யாரோ ஒருவனால், மதுரை நகரில், கண்ணகி

நடுங்கித் துயரம் அடைந்ததுபோலவும், தான் எருமைமீது ஏறிச் சென்றதுபோலவும் கனவு கண்டதாகக் கூறினன் கோவலன். வைகறையிற் கண்ட கனவானதால் பலித்து விடும் என்றும் சொன்னன்.

மாதரியுடன் செல்லுதல்

பின்னர், கவுந்தியம்மையும் மாடலனும், "புறஞ்சிறைப் பகுதி இல்லற வாழ்க்கை நடத்துவார்க்கு ஏற்ற இடமில்லை ஆதலால், அன்று மாலையே கண்ணகியும் கோவலனும், மாடமதுரைநகர் சேர்ந்துவிடவேண்டும்" என்று கூறினர்கள்.

இவ்வாறு இவர்கள் உரையாடிக்கொண்டிருக்கும் போது, மாதரி என்ற வயது முதிர்ந்த ஆயர்மகள் அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்தாள். அவள் கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினள். அவளது குணநலத்தை அறிந்து, கவுந்தியடிகள் கண்ணகியை அவளிடம் அடைக்கலமாக ஒப்பிக்க நினைத்தார். கண்ணகியின் பெற்றோரைப்பற்றி அவளிடம் விளக்கிச் சொன்னர். அந்தப் பெண்ணை அன்றைக்கு அடைக்கலமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று, மாதரியிடம் கவுந்தியடிகள் கூறினர். மாதரியும் மன மகிழ்ந்து கோவலனையும் உடன் அழைத்துச் சென்றாள். கண்ணகியின் பேரழகைக் கண்ட சில இடையரும் இடைச்சியரும் அவளைச் சூழ்ந்துகொண்டனர். மாதரி, கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு அவளுடைய வீட்டிற்குச் சென்றாள்.

8. விதியும் பழியும்

பெறுதற்கு அரிய கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி, மிகவும் அகமகிழ்ந்தாள். அவர்கள் இருவரையும் தம்முடன் வைத்துக்கொள்ளாமல், ஒரு புதிய வீட்டிலே இருக்கச் செய்தாள். கண்ணகியைப் புது நீரால் மஞ்சன நீராட்டினள். மாதரியின் மகள் ஐயையைக் கண்ணகிக்குத் தோழியாக ஏற்படுத்தினுள். சமைத்தற்குரிய காய்கறிகள், முதலியன உடனே கொண்டுவரப்பட்டன. கண்ணகி காய்கறிகளை அரிவாள் கொண்டு அரிந்தாள். அவள் கைவிரல்கள் சிவந்தன ; முகத்தில் வியர்வுகள் அரும்பின ; கண்கள் சிவந்தன ; சமையல் செய்து, முறைப்படி உணவு படைத்து, கோவலனை உண்ணுமாறு வேண்டினள். அவன் வணிகர்களுக்கு வகுத்துள்ள ஆசாரங்களின்படி அமர்ந்து உணவினை உண்டான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஐயையும், அவளது தாயும் உவகை கொண்டனர். கோவலனையும் கண்ணகியையும் பலபடப் புகழ்ந்து பாராட்டினர்.

அதன்பின்னர் கோவலன் தாம்பூலம் தரித்தான். அப்போது, கண்ணகியைத் தன் அருகில் வருமாறு சொல்லி அன்போடு அழைத்தபடி சில சொற்கள் கூறினுன் கோவலன், பொருள்களை இழந்து வேற்றூர் வர நேர்ந்ததை எண்ணி வருந்தினுன். மதுரைக்கு வருக என்று சொன்னவுடன், கண்ணகி ஏதும் மறுத்து உரையாதவளாகப் புறப்பட்டுவந்ததை எண்ணிப் பாராட்டினுன். ஆனுல், அவளது இளமைப் பருவத்தில் அவள் துயர்கள் பல அடைந்ததை எண்ணி வருந்தினுன். உற்ருர் உறவினர்களையெல்லாம் மறந்துவிட்டு, தன்னுடன் வந்த கண்ணகியைப் பலவாறு புகழ்ந்தான். "பொன்னே! கொடியே! கற்பின் கொழுந்தே"

என்றெல்லாம் வருணித்தான்; அவள் நலங்களைப் பாராட்டினன். பின்னர் கண்ணகியிடம் விடைபெற்று, அவளது, காற்சிலம்பு ஒன்றினை விற்றுப் பொருள் பெற்றுவரப் புறப்பட்டான். தன் கண்களில் மல்கிய கண்ணீரைக் கண்ணகி அறியாமல் மறைத்து, ஆயர்பாடியை விட்டுச் செல்ல, வெளியே காலடி வைத்ததும் ஒரு காளை எதிர்த்துப் பாய வந்தது. அதைக் கெட்ட சகுனம் என்று எண்ணமலே அவன் சென்றுகொண்டிருந்தான். நகரின் பல வீதிகளையும் கடந்து, கடைத்தெருவில் செல்கின்றபோதில், பொற்கொல்லன் ஒருவனைச் சந்தித்தான். அவன் மன்னனிடம் சிறப்புப்பெற்றவன்என்று எண்ணி, அவனை நாடினன் கோவலன், "மன்னனின் தேவி அணியத் தகுந்த காற்சிலம்பு ஒன்று உள்ளது; அதை உம்மால் விலை மதிக்கமுடியுமா?" என்று கேட்டான். சிலம்பையும் எடுத்துக் காட்டினன். சிலம்பின் அமைப்பைப் பொற்கொல்லன் கண்டான். அதில் மாணிக்கம், வயிரம் முதலியவை பதிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தான். பாண்டிய மன்னரின் மனையாளான கோப்பெருந்தேவிக்குத்தான் அந்தச் சிலம்பு ஏற்றதென்று கூறினன் பொற்கொல்லன். தான் மன்னனை அணுகி, அதைப் பற்றி உரைத்துவருவதாகச் சொன்னன். அதுவரை கோவலனைத் தனது வீட்டில் இருக்குமாறும் சொன்னன். அவனது பேச்சைக் கோவலன் உண்மையென நம்பினன். பொற்கொல்லன், மன்னனிடமிருந்து முன்னர் ஒரு சிலம்பைத் திருடியிருந்தான். அந்தச் செய்தி வெளியாவதற்குமுன் அயல்நாட்டிலிருந்துவந்த புதியவனை கோவலன்மீது அப்பழியைச் சுமத்தத் திட்டமிட்டவாறே அரண்மனை நோக்கிச் சென்றான்.

பொற்கொல்லன் சென்ற சமயத்தில் மன்னனுடன் அவனுடைய தேவி ஊடல் கொண்டிருந்தாள். அம் மன மாற்றத்தைத் தணிக்க எண்ணி, மன்னன் தன் தேவியின்

அந்தப்புரத்தை நாடிச் சென்றுகொண்டிருந்தான். மன்னனைக் கண்ட பொற்கொல்லன், அவனது கால்களில் விழுந்தான். "கோப்பெருந்தேவியின் சிலம்பை, கன்னக்கோலில்லாமற் களவாடிய திருடனைக் கண்டுபிடித்து என் வீட்டில் வைத்திருக்கின்றேன்" என வஞ்சகமாக உண்மைபோற் சொன்னான் அதைக் கேட்ட அரசன், பொற்கொல்லனது வார்த்தையின் உண்மையினை ஆராயாமல், 'சிலம்பு திருடிய கள்வனைக் கொன்று அந்தச் சிலம்பைக் கொண்டுவருக' என்று தன் காவலாளர் சிலருக்குக் கட்டளையிட்டான்.

தனது எண்ணம் ஈடேறியது என்று எண்ணிய பொற்கொல்லன், அகமகிழ்ந்தான். கோவலன் இருக்குமிடத்தை அடைந்தான். மன்னரின் கட்டளையால் சிலம்பைச் சோதிக்கக் காவலாளர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்லிச் சிலம்பைப் பெற்றான். அதன் வேலைப்பாட்டைப் புகழ்வது போல, மன்னரின் சிலம்புக்கும் இந்தச் சிலம்பிற்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துச் சொன்னான். காவலாளர்கள் கோவலனது தோற்றத்தைக் கண்டு, அவன் கள்வன்போலத் தோன்றவில்லை என்று கூறி மறுத்தனர். ஆனால், அந்தப் பொற்கொல்லன், களவு நூல்களிலுள்ள கள்வர் இலக்கணங்களை எல்லாம் எடுத்துரைத்து, காவலாளர்களை நம்பச் செய்தான். காவலரில் ஒருவன் அறிவு குறைந்தவன்; அத்துடன் சற்றுப் பதட்டமும் உடையவன். அவன் வாளால் எறிந்து கோவலனைக் கொன்றான். கோவலன் உடலிலிருந்து இரத்த வெள்ளம் பெருகி ஓடிற்று; ஆறுகப் பெருகியது. இவ்வாறு ஊழ்வினையின் பயனால், பொற்கொல்லன் சதியால் கோவலன் வெட்டுண்டு இறந்தான். பாண்டியன் நெடுஞ்செழியனது வளையாத செங்கோலும் வளைந்தது.

9. ஆய்ச்சியர் குரவை

பாண்டிய மன்னனின் அரண்மனையிற் காலை முரசு அதிர்ந்தது. உடனே மாதரி, அரண்மனையில் அன்று நெய் யளக்கும் முறை என்பதை நினைத்தாள். தன் மகளை அழைத் தாள்; கையில் கடைகயிற்றையும் மத்தையும் கொண்டு, தயிர்ப் பானையிருக்கும் இடத்திற்கு வந்தாள்.

அங்கே, மாதரி உட்கார்ந்து தயிர் கடைய ஆரம்பித் தாள். குடத்தில் உள்ள பால் உறையாமல் இருந்ததைக் கண்டாள். வெண்ணெய் உருகாமல் இருந்ததைப் பார்த் தாள். மாடுகளின் கழுத்தில் அணிந்துள்ள மணிகள் கழன்று விழுவதையும் கண்டாள். அதையெல்லாம் ஆராயும்போது, ஏதோ துன்பம் ஒன்று வர இருக்கின்றது என்றும் உணர்ந் தாள். அதனைத் தன் மகள் ஐயையிடமும் சொன்னாள். அதற்காகக் குரவையாட்டம் ஆடலாம் என்று எண்ணினாள்.

மாதரி, ஏழு இடைப் பெண்களைக் கூட்டிவைத்துக் குரவை ஆட்டம் ஆடினாள். குரவைக் கூத்தில் அவர்கள் கண்ணனைப் புகழ்ந்தனர்; பின்னையைப் புகழ்ந்தனர்; நாரத ரைச் சிறப்பித்தனர்; புள்ளூர்க் கடவுளைப் புகழ்ந்தனர்; கடல்வண்ணனைப் பாடினர்.

"இந்தக் குரவையினால் தொழப்பட்ட தெய்வம் நமது பசுக்களுக்கு ஏற்பட்ட துயரத்தைத் தீர்க்குமாக! பாண்டி யனின் வெற்றி முரசும் எப்போதும் பகைவரை வெல்லுவ தற்கு அருள்புரியுமாக" என்று வாழ்த்திக் குரவைக் கூத் தினை ஆடி முடித்தார்கள் இடைச்சேரியினர்.

அந்தக் குரவைக் கூத்தைக் கண்டு களித்த மாதரி, மாயவன் ஆடிய குரவைக் கூத்தின் பெருமையை எடுத்

துரைக்க ஆதிசேஷன்தான் வரவேண்டுமென்று வியந்து சொல்லிச் சென்ருள்.

குரவைக் கூத்து முடிந்ததும் மாதரி முதலியோர் வைகையாற்றில் நீராடி, திருமாலை வணங்கச் சென்றனர். அச்சமயத்தில் ஓர் இடைச்சி கோவலனைப்பற்றிய செய்தியைக் கேட்டு விரைந்து இடைச்சேரிக்கு வந்தாள். அவள், கண்ணகியின் அழகையும், இளமையையும், தனிமையும் கண்டு வருந்தினுள். அதனுல், தான் கேட்ட தீச்செய்தியைத் தன் வாக்கால் தெரிவிக்க மனம் வராது மறுகி நின்ருள். குரவை முடிந்து நீராடிவந்த மாதரி முதலியோரிடம், அதனைக் குறிப்பால் உணர்த்தினுள்; மனம் வருந்தி விம்மி விம்மி அழுதாள்.

இவற்றையெல்லாம் கண்ட கண்ணகி பதைபதைத்தாள். அவர்களை நோக்கி, "என் கணவர் இன்னும் வரவில்லையே? என் மனம் மிகவும் வருந்துகிறதே? அவரைக் காணுமல் என் நெஞ்சம் அலறுகிறதே? அதற்கேற்ருற்போல், அவரும் வரவில்லை. இது இப்படியிருக்கும்போது நீங்கள் எதையோ மறைத்துக் கூறுகிறீர்கள். அஃது என்ன? நீங்கள் என்னை மறைத்து ஏதோ பேசுவது என்னவோ? இனியும் என்னைச் சோதிக்காதீர்கள்; உள்ளதை உள்ளபடியே கூறுங்கள்; என் நெஞ்சம் புண்ணுகிறது" என்று, வருந்திக் கூறினுள்.

அதைக் கேட்டதும் அந்த இடைப்பெண், கோவலன் அரசியின் சிலம்பைத் திருடினுன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலைப்பட்டதைக் கூறினுள். அதைக் கேட்ட கண்ணகி, அப்படியே மயங்கிக் கீழே விழுந்துவிட்டாள். பின்னர் சினத்துடன் எழுந்தாள். மறுபடியும் விழுந்தாள். கையால் முகத்தில் அறைந்துகொண்டு அழுதாள்; பலவாறு புலம்பினுள்; கணவன் மடிந்தும் தான் இன்னும் மடியாமல் இருக்கும் நிலை குறித்து பெரிதும் வருந்தினுள். குற்றமற்ற

தன் கணவனைக் கள்வன் என்று மன்னன் கொன்றதை எண்ணி அரற்றினாள். "அறக் கடவுளே நீயும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தாயோ?" என்று கூவினாள்.

பிறகு கண்ணகி, கதிர்க் கடவுளை அழைத்து, "காய் கதிர்ச் செல்வனே! என் கணவன் கள்வனோ?" எனக் கேட்டாள். உடனே "உன் கணவன் கள்வனல்லன், அவனைக் கள்வனென்ற இவ்வூரை எரியுண்ணும்" என்ற அசரீரி எழுந்தது. அதை மாதரி முதலான ஆயர்பாடியினர் எல்லோரும் கேட்டனர்.

10. வழக்குரைத்தல்

பின்னர், கண்ணகி, தன்னுடைய மற்றொரு சிலம்பைக் கையில் எடுத்துக்கொண்டு, ஆயர்பாடியை விட்டு நீங்கினாள். நகருக்குள் சென்றாள். அங்குள்ள பத்தினிப் பெண்களை நோக்கி, "அரச நெறியிலிருந்து தவறிவிட்ட இவ்வரசனின் ஊரில் வாழும் உங்களுடைய புகழுக்கே கேடு வந்து விட்டது. நான் படாதபாடு பட்டுவிட்டேன். மரண வேதனையைவிடப் பெருந் துன்பம் அடைந்தேன். என் கணவன் கள்வன் இல்லை. என் காற்சிலம்பை விற்கவந்த காரணத்தால் கள்வன் என்று சாக்கிட்டுக் கொன்றுவிட்டார்களே, இது நியாயமா? கற்பிலே சிறந்த உங்கள் முன்பாக, என் கணவரை நான் மீண்டும் காண்பேனா? அவரைக் கண்டு அவருடைய வாயால் நல்ல உரையைக் கேட்பேனா? அவரது உரை எனக்கு நன்மை தரக்கூடியதாகும். அப்படி நான் கேளாவிட்டால், வருத்தம் தரும் செயலைச் செய்தாள் என்றெண்ணி என்னை இகழுங்கள்! இது உண்மை" என்று வருந்தி வீதி வழியாக துயரம் தாங்காமல் அழுதுகொண்டே சென்றாள். ஊர் மக்கள் பலர் அவளைப் பலவாறு தேற்றியும் பயனில்லை. அதைக்

கண்ட ஊரார், "ஐயோ! இந்தப் பெண்ணால் என்றும் நீங்காத துன்பம் உண்டாகும்படி மன்னனது வளையாத செங்கோல் வளைந்துவிட்டதே! மன்னர்க்கு மன்னனாக இருந்த பாண்டியனின் அரசியல் சிதைந்துவிட்டதே! தன் நாட்டு மக்களுக்கு அறத்தையும், பகைவர்களுக்கு வீரத்தையும் உண்டாக்கும் வேலை ஏந்திய மன்னனின் குளிர்ச்சியான குடை, வெப்பத்தை விளைவித்துவிட்டதே! நமக்குத் தீமை கொடுப்பதற்காகவே தெய்வம் போன்ற இந்தப் பெண் பொற்சிலம்பைக் கையில் ஏந்திவந்தாள் போலும். இவளைப் பார்த்தால் தெய்வம் வந்தவள்போல் தெரிகிறதே! இவளது கோபத்தால் என்னென்ன ஏற்படுமோ தெரியவில்லையே?" என்று வருந்திச் சொன்னார்கள். வீதியில் உள்ள காட்சிகளைக் கண்டு சூழஇருந்தவர்கள் கோவலன் வெட்டுப்பட்டு மண்மீது விழுந்து கிடந்தயிடத்தைக் கண்ணகிக்குக் காட்டினர். இரத்த வெள்ளத்தினிடையே நனைந்து கிடந்த கோவலனைக் கண்ட கண்ணகி வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அரற்றினள். அந்தக் காட்சியைக் காணச் சகிக்காத கதிரவன்கூட மலைச்சரிவில் ஓடி மறைந்து கொண்டான்.

"இன்று காலையில், தாங்கள் தந்த மாலையைத் தலையில் அணிந்துகொண்ட நான், மாலையில் இக்கடுந் துயரத்தைக் காண நேர்ந்ததே! வாசனைப் பொருள்களால் சிறப்பிக்கப் படும் உங்கள் உடல், தெருப் புழுதியிலே புரண்டு கிடக்க நேர்ந்ததே! என் கணவரை அநியாயமாகக் கொலை செய்த இந்த மன்னனின் மதுரை நகரில், பத்தினிப் பெண்களும், பிள்ளைப்பேறு உடைய சான்றோர்களும், தெய்வமும் உள்ளனரா?" என்று மனம் வருந்திப் புலம்பினாள்.

கண்ணகி அவ்வாறு அழுது, தன் கணவனுடைய மார்பைத் தழுவிக்கொண்டாள். அப்போது கோவலன் உயிர் பெற்று எழுந்து "முழு நிலவுபோன்ற உன் முகம்

வருந்தியதே!" என்று, இரங்கிக் கூறி, அவளது கண்ணீரைத் தன் கையால் துடைத்தான். கண்ணகி அவனது பாதங்களில் விழுந்து தொழுதாள். அவற்றைத் தன்தலைமீது வைத்துக்கொண்டாள். கோவலன் அவளைப் பார்த்து "நீ இங்கேயே இரு" என்று சொல்லி நிலையற்ற தன் உடம்பை விடுத்துச் சுவர்க்கம் சென்றான்.

இவ்வாறு, கோவலன் எழுந்து பேசி, மீண்டும் விழுந்ததைக் கண்ட கண்ணகி, "இது மாயமோ, அல்லது என்னை மயக்கிய தெய்வமோ" என்றும் தெரியவில்லையே! எங்கேயாவது தேடி என் கணவனை நான் அடைவேன் இது நிச்சயம். என்றாலும், என்னுடைய குறைகளை முதலில். இந்தத் தீய வேந்தனிடம் சொல்லுவேன். இதன் திறத்தைக் கேட்டு, என் கோபத்தைத் தணிக்காமல் நான் என் கணவனைக் கைகூடமாட்டேன்" என்று சபதம் செய்து எழுந்தாள். அந்தச் சமயத்தில், முந்திய நாள் இரவு அவள் கண்ட தீய கனவுகள் அவள் நினைவுக்கு வந்தன. உடனே, கண்ணீர் உகுத்தாள்; அடுத்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்(டு), அரண்மனையை நோக்கிச் சென்றாள்.

11. சினந்துஎழுந்தாள்

பாண்டிய மன்னனின் பட்டத்து அரசி கோப்பெருந்தேவி திடீரென்று ஒரு தீக்கனவு கண்டாள். அந்தக் கனவில் மன்னனது செங்கோலும், வெண் கொற்றக்குடையும் முறிந்து நிலத்தில் விழுந்தன; வாசலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணி அதிர்ந்தது; விண்மீன்கள் ஆகாயத்திலிருந்து உதிர்ந்தன; எட்டுத் திசையும் அதிர்ந்தன. இப்படிப்பட்ட இயற்கையல்லாத நிகழ்ச்சிகளைக் கனவில் கண்டதும் மன்னனின் மனைவி நடுங்கித் துயில் எழுந்தாள். இதனால் நிச்சயம் துன்பம் வரும் என்று எதிர்பார்த்தாள். முதல் நாள்

தான் கண்ட கனவினை, சிம்மாசனத்தில் வீற்றிருந்த பாண்டியனிடம் கூறிக்கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில் கண்ணகி அரசனுடைய அரண்மனை வாயிலை அடைந்தாள். வாயில் காப்போனை அழைத்து, "கணவனை இழந்த பெண் ஒருத்தி, கையிற் சிலம்பொன்றை ஏந்திவந்திருக்கிறாள் என்பதை உன் அரசனிடம் தெரிவி" என்று கூறினாள். சேவகன் அரசன்முன் ஓடோடிச் சென்று அவனைப் பன்முறை வணங்கிச் செய்தியைச் சொன்னான். கணவனை இழந்த பெண் ஒருத்தி சிலம்பொன்றைக் கையில் வைத்துக்கொண்டு வாசலில் நிற்கிறாள் என்றும், அவளைப் பார்த்தால் மிகவும் கோபம் கொண்டவள்போல் காணப்படுகிறாள் என்றும் அறிவித்தான். அது கேட்ட அரசன், அவளை உடனே அழைத்துவரச் சொன்னான். சேவகன் கண்ணகியிடம் அதை அறிவித்தவுடன் கண்ணகி கண்ணீரும் கண்ணுமாய் மன்னனின் எதிரே வந்தாள். அவளைக் கண்ட பாண்டியன், 'நீ யார்? எங்கே வந்தாய்?' என்று கேட்டான், கண்ணகி பின் வருமாறு பதில் சொன்னாள்:—

"ஓ! மன்னவனே, கேள்! தேவர்களும் அதிசயிக்கும்படி ஒரு புறுவுக்காகத் தன் சதையை வெட்டிக் கொடுத்த மன்னன் ஆட்சி செய்த நாடு என் நாடு. ஒரு பசுவின் கன்றிற்காகத் தன் அருமை மகனையே தேர்ச் சக்கரத்தின் கீழே போட்டுக் கொன்ற மன்னன் ஆட்சி செய்து பெரும் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினம் எனது சொந்த ஊர். அந்த ஊரில் பெருமரபைச் சேர்ந்த மாசாத்துவான் என்ற வணிகனுடைய மகனான கோவலன் என் கணவன். விதிப் பயன் துரத்தினதால், நானும் என் கணவரும் உனது நகருக்கு வந்தோம். என் காற்சிலம்பை விற்பதற்காக வந்துகொண்டிருந்த என் கணவர் உன் காவலாட்களால் கொலை செய்யப்பட்டார்."

கண்ணகி அவ்விதமாய்க் கூறியவுடன் மன்னன் 'கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோன்மையல்லவே' என்று, சொன்னான். மேலும் 'அவ்வாறு கொல்வதுதான் அரச நீதி' என்றும் கூறினான். அது கேட்ட கண்ணகி என் காற்சிலம்பிலுள்ள பரல் மாணிக்கங்கள். உங்கள் சிலம்பு எத்தகையது? என்று கேட்டாள். கோப்பெருந்தேவி, தனது சிலம்பின் பரல்கள் முத்துக்கள் என்று கூறினாள். அரசன் அக்கணமே கண்ணகியின் காற்சிலம்பை வாங்கித் தன் முன்வைத்து உடைத்துப் பார்த்தான். அதிலிருந்து மாணிக்கப் பரல்கள் தெறித்தன. மன்னன் தன் தவறையுணர்ந்தான்.

சிங்காதனத்தில் வீற்றிருந்த மன்னன், "பொற்கொல்லன் சொல்லைக் கேட்டு, நீதியைக் கொன்ற நானே அரசன்? நான்தான் கள்வன். மண்ணகத்தைக் கட்டிக் காத்து வரும் என் அரசியல், என்னால் மாசுண்டது. என் ஆயுள் இத்துடன் முடிக" என்று கூறி, அப்படியே அரியாசனத்தின் மீது மயங்கி விழுந்தான்; அவன் உயிர் பிரிந்தது. கோப்பெருந் தேவியும், "கணவனை இழந்த பெண்களுக்கு ஆறுதல் தர உலகில் எதுவும் இல்லை" என்று மன்னனடிகளில் விழுந்து உயிர் துறந்தாள்.

வஞ்சினம் (சபதம்)

கோப்பெருந்தேவி இறந்ததை அறியாத கண்ணகி, அவளைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னாள்:

"மன்னனின் தேவியே! நான் சொல்வதைக் கேள்; முந்திய பிறவியில் மற்றவர்களுக்குத் தீமை செய்தால், அது மறு பிறவியில் தனக்கே கேடாக முடியும் என்பது கண்கூடு. பல பத்தினிப் பெண்கள் பிறந்த புகார் நகரில் நான் பிறந்தவள். அவர்களிற் சிலருடைய வரலாற்றைக் கூறுகிறேன், கேள்: ஒருத்தி, முன்னொரு சமயத்தில், பகல் வேளையில் வன்னி மரமும், மடைப்பள்ளியும் தனக்குச் சான்றாக

நிறுத்திக் காட்டினுள். மற்ருெருத்தி, காவிரி நதிக்கரையில் சில பெண்களுடன் எப்போதும் விளையாடிக் கொண் டிருப்பாள். அந்தப் பெண்கள், அவளைப் பார்த்து, மணற் பொம்மை ஒன்றைச் சுட்டிக்காட்டி, அதுவே அவளுக்கு கணவன் என்று விளையாட்டாகக் கூறினர். அவளும் அதையே கணவனுக எண்ணி, அந்த இடத்தை விட்டு நீங்காமல், அந்த மணற் பொம்மையை ஆற்றுநீர் அடித்துப் போகாமல் பாதுகாத்து வந்தாள். இன்ஞெருத்தி, கரிகாற் சோழன் மகள் ஆதிமந்தியாவாள். அவள் கணவனுகிய சேரனை ஒரு காலத்தில் கடல் வெள்ளம் அடித்துக்கொண்டு போனபோது, தான் பின்னே சென்று கூப்பிட்டழைத்தாள். உடனே கடல் அவனை மீண்டும் கொண்டு வந்து நிறுத்தியது. இன்னுமொருத்தி, வர்த்தகத்திற்காக வெளிநாடு சென்ற தன் கணவன் மீண்டும் வருகின்ருனு, என்று கப்பல்களைப் பார்த்துக்கொண்டே கடற்கரையில் கல்லாய் இருந்து விட்டாள். அவன் மீண்டு வந்தபோதுதான் தனது கல் லுருவை நீக்கினுள். இன்னுமொருத்தி, தன் மாற்ருளின் குழந்தை கிணற்றில் விழுந்தபோது, தன் குழந்தையையும் கிணற்றில் போட்டு, இரண்டு குழந்தைகளையும் மீண்டும் வெளியில் எடுத்தாள். மற்ருெருத்தி, வேற்று மனிதன் தன்னைத் தொடர்ந்து பார்ப்பதைக் கண்டு, தன் அழகான முகத்தைக் குரங்கு முகமாக்கிக் கொண்டாள்; பின்னர், தனது கணவன் திரும்பி வந்ததும் குரங்கு முகத்தை மாற்றிக் கொண்டாள். இத்தகையச் சிறப்புப் பொருந்திய புகார் நகரத்தில் பிறந்த நான், பத்தினி என்பது உண்மை யானல், அழிந்த அரசனெடு மதுரையயையும் அழிப்பேன்' என்று வஞ்சினம் கூறி, அரண்மனையை விட்டு வெளி யேறினுள்.

பின்னர், கண்ணகி, மதுரை நகரின் தெருவழியே சென்று, "பெண்களே! பிள்ளைகளே! தேவர்களே!

கேளுங்கள்; என் கணவனைக் கொலை செய்த இந்த நகரத்தின்மேல் நான் கோபங் கொண்டேன். என் கணவன் குற்றமற்றவன்" என்று சொன்னாள். தனது இடது நகிலை வலது கையால் திருகி, மதுரை நகரத்தை மூன்று முறை வலம் வந்து விட்டெறிந்தாள். உடனே அவள்முன் அக்கினி பகவான் தோன்றினான். கண்ணகி அவனை நோக்கி, "பார்ப்பனர்கள், தருமவான்கள், பசுக்கள், பத்தினிப் பெண்கள், வயது முதிர்ந்தோர், சிறு குழந்தைகள் முதலியவர்களை விட்டுவிட்டு, தீச்செயல் புரிபவர்களைத் தீண்டு," என்று ஆணையிட்டாள். அவ்வாறே, மதுரை மாநகரில் நெருப்பு மண்டியது.

12 எதிர்பாரா முடிவுகள்

ஊர் தீப்பட்டது

தீ நகர் எங்கும் சூழ்ந்தது. நகரைக் காத்துக் கொண்டிருந்த நான்கு வருணப் பூதங்களும் கோட்டை வாயில்களைக் காவாது இருந்துவிட்டன. மன்னனும், அவனது தேவியும் மடிந்ததைக் கண்ட அரசியல் அதிகாரிகள், வாய் திறக்கமுடியாமல் திகைத்து விட்டனர். அரண்மனை வாயிலில் தீ மண்டியதைக் கண்ட குதிரை வீரர்கள், யானை வீரர்கள் முதலியோர் அரசனுடைய தேகத்தை எடுத்து அவ்விடத்தை விட்டு நீங்கினர்.

கண்ணகியின் சொற்படி, தீ தீயவர்களைத்தான் அண்டியது. பத்தினிப் பெண்கள், தீ தம்மிடத்தில் நெருங்காதது கண்டு கண்ணகியின் கற்பைப் புகழ்ந்துரைத்தனர். பிற மாதர்கள் எல்லாரும், "மன்னனைச் சிலம்பால் வென்றவளும், நகரத்தைத் திக்கிரையாக்கினவளுமான இந்தப்

பெண் எந்த நாட்டைச் சேர்ந்தவளோ? யார் பெற்ற மகளோ?'' என்று பரிதவித்துக் கூறினர். இந்த நிகழ்ச்சி யில், மாலை நேரம் வந்தும், வேதமோதுதல், முத்தீ வளர்த்தல், தெய்வத்தை வணங்கல், வீட்டு விளக்கேற்றுதல் முதலிய செயல்கள் நகரத்தில் இல்லாமற் போயின.

முரசின் ஒலி அடங்கிவிட்ட மதுரை நகரில், தன் அருங் கணவனை இழந்த வருத்தத்தோடு உள்ளம் வெதும்பி, தெருத் தெருவாக அலைந்தாள் கண்ணகி. அவள் முன்னர் மதுரை நகரின் காவல் தெய்வமான மதுராபதி தோன்றினாள்.

கட்டுரைத்தது

மதுரை நகரின் அதி தேவதை, கண்ணகியின் முன்–புறம் தோன்றாமல் அவளது பின்புறமாக வந்து நின்றது. "பெண்ணே! நீ வாழ்! உனக்கு என்ன துயர் ஏற்பட்டது?'' என்று, கண்ணகியைக் கேட்டது. பேச்சு ஒலி கேட்ட கண்ணகி திரும்பிப்பார்த்தாள். காவல் தெய்வத்தைக் கண்டு, "நீ யார்?'' என்று கேட்டாள். காவல் தெய்வம் அவளிடம் பின்வருமாறு பதில் சொன்னது, "பெண்ணே! உன் வரலாற்றை நான் அறிவேன். நான் மதுரையில் வாழ்கிறேன். என் பெயர் மதுராபதி. உனக்கு உறுதி மொழி கூற இங்கே வந்தேன். உன் கணவன் இறந்தது கேட்டு நான் மிகவும் கவலைப்பட்டேன். உன் கணவன் அநியாயமாகக் கொலை செய்யப்படுவதற்கும் பாண்டிய மன்னனின் வளையாத செங்கோல் வளைவதற்கும் காரண மான நிகழ்ச்சியை உனக்குக் கூறுகிறேன். கேட்பாயாக!'' என்று, கூறத் தொடங்கிற்று.

பாண்டிய மன்னன், அரண்மனை வாசலில் உள்ள ஆராய்ச்சிமணியின் ஓசையை என்றுங் கேட்டதில்லை. பகை யரசர்களைத் தவிர, வேறு எவராலும் அவன் தூற்றப்பட்ட தில்லை. அத்தகைய மன்னன் நீதியிலிருந்து தவறிவிட்டான்.

ஆடிமாதத்தில், கிருட்டிண பட்சத்தில், பரணி கார்த்திகையும் அட்டமியும் கூடிய வெள்ளிக்கிழமையன்று, இந்த மதுரை நகரத்துக்கும், அரசனுக்கும் கேடுவரும், என்ற, சோதிட வார்த்தையுண்டு,'' என்று சொல்லிவிட்டுக் கோவலனது வரலாற்றையுங் கூறினர்.

கோவலன் பழம்பிறப்பு

"கலிங்க நாட்டிற் சிக்கபுரம், கபிலபுரம் என்ற நகரங்கள் உள்ளன. அவற்றின் அரசர்களான வசு, குமரன் என்னும் இருவரும் தமக்குட் பகைமை கொண்டிருந்தனர். அந்த இரு நாட்டின் இடையேயுள்ள தூரம் ஆறுகாதம் ஆகும். இவர்களது தகராறு காரணமாக எவரும் அவ் இடைவெளியில் செல்வதில்லை. சங்கமன் என்னும் வணிகன், தன் மனைவியுடன் விலையுயர்ந்த நகைகளைச்சுமந்து சென்று சிங்கபுரம் அடைந்தான். அங்குள்ள ஒரு கடையில் அந் நகைகளை விலைபேசிக்கொண்டிருந்தான். சங்கமனது பகைவன் பரதன் எனப்படுபவன் அவனைப் பார்த்துவிட்டான். அவன் சங்கமனைப் பிடித்திழுத்துவந்தான். "அரசன் முன் சென்று, இவன்பகைவர்களுடைய ஒற்றன்" என்றுகூறிச் சங்கமனைக் கொலை செய்வித்தான். சங்கமனின் மனைவியான நீலி மனம் வெதும்பினாள். "ஊராரே! ஒரு குற்றமும் செய்யாத என் கணவனைக் கொன்றுவிட்டீர்களே ! இது நியாயமா!" என்று கதறினாள். அவள் அலைந்து திரிந்தாள் ; பதினான்கு நாட்கள் சென்ற பின்னர், ஒரு மலையுச்சியில் ஏறினாள். "எனக்குத் துயரம் தந்தவர்களும் மறுபிறப்பில் இதுபோன்ற துன்பம் அடைவார்களாக," என்று கூறி, அம் மலையிலிருந்து கீழே விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டாள். அந்தப் பரதன் தான் உன் கணவன் கோவலனாகப் பிறந்தான். ஆதலால், அச்சாபம் இப்பொழுது பலித்துவிட்டது. நீ உன் கணவ

லைப் பதினான்காவதுநாள் கடைசியில் காண்பாய். ஆனால், அவனை மனித வடிவில் காணமாட்டாய். வானோர் வடிவில் காண்பாய்," என்று, மதுராபதித் தெய்வம் கண்ணகி யிடம் தெரிவித்தது. அத்துடன் கண்ணகியின் சினத்தை யும் தணித்து, தீயையும் தணிக்கச் செய்து, சென்றது.

வானுலகு செல்லல்

அதன் பின்னர், கண்ணகி, "என் கணவனைக் காணா மல் ஓரிடத்தில் உட்காரவோ, நிற்கவோ மாட்டேன். அலைந்து கொண்டே இருப்பேன்;" என்று சொன்னாள். தனது கைவளையல்களைத் துர்க்கை கோயிலில் உடைத்து எறிந் தாள். "காலையிலே, ஊரின் கிழக்குவாயில் வழியாக நானும் என் கணவனும் இந்த ஊரினுள் நுழைந்தோம். இப்போது மாலையில் என் கணவனை இழந்துவிட்டு நான் தனியாக, மேற்குவாயில் வழியாகச் செல்லுகிறேன்," என்று மனம்வருந்திச் சொல்லிச் சென்றாள். இரவு பகல் தெரியா மல் எங்கெங்கோ அலைந்தாள். மேடென்றும் பள்ளமென் றும் பாராமல் திரிந்தாள். இறுதியில், திருச்செங்குன்றின் மேல் ஏறி, வேங்கை மரம் ஒன்றின்கீழ் நின்றாள்.

அவள் அங்குச் சென்றது கோவலன் மாண்டபின் பதினான்காவது நாளாகும். அன்று, பகல் வேளை கழிந்ததைக் கண்ட கண்ணகி, தன் கணவனை வணங்கவேண்டிய நாள் அது என்று எண்ணினாள். உடனே, கோவலன் வானத்தில் தோன்றினான். பின்னர், அவள் கோவலனுடன் வானவூர்தியில் ஏறி, விண்ணுலகுக்குச் சென்றுவிட்டாள். அந் நேரத்தில் தேவர்க்கரசனும், தேவர்களும், கற்பரசி கண்ணகியின் பெயரைப் புகழ்ந்து மலர்மாரி பொழிந்தனர்.

13. செங்குட்டுவன் கேட்டான்

கண்ணகி திருச்செங்குன்றிலே வேங்கை மரத்தடியில் நின்றுகொண்டிருந்தபோது, அவ்வழியே வந்த குறப் பெண்கள் சிலர் அவளைப் பார்த்தனர். அவர்கள் கண்ணகி யைக் கண்டு மனம் நடுங்கி, அவளைப் பார்த்து யார்? எனக் கேட்டனர். கண்ணகியும் தன் வர லாற்றை அவர்கட்கு உரைக்க முற்பட்டாள். ஒரு குற்றமும் செய்யாத தன் கணவன் பாண்டிய மன்னனால் கொலை செய்யப்பட்ட செய்தியைச் சொன்னாள்; பின்னர் நடந்ததையும் கூறினாள். அதுகேட்ட குறப்பெண்கள், கண்ணகியைக் கைகூப்பித் தொழுதார்கள். அந்தச் சம யத்தில்தான் தேவர்கள் மலர் பொழிந்தார்கள்; கோவலன் வானூர்தியில் வந்தான். அதன் பின்புதான் அவர்கள் இருவரும் விமானத்தில் ஏறி விண்ணுலகு சென்றனர். அந்த அதிசயத்தைக்கண்ட குறப் பெண்கள் திகைத்தனர். கண்ணகியைவிடத் தெய்வம் தங்கள் குலத்துக்கு இல்லை என்று எண்ணினர். கண்ணகியைக் குறித்துக் குறவைக் கூத்து ஆடவேண்டுமென்று கூறிச் சென்றனர். அதன்படி வெகு விரைவில் குரவைக் கூத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்து, கண்ணகியைப் புகழ்ந்துபாடி குரவைக் கூத்தாடி முடித்தனர்.

இது இவ்வாறு இருக்க, இமயத்தின்மீது விற்கொடி நாட்டிய சேரர் பரம்பரையில் தோன்றிய சேரன் செங் குட்டுவன், தன் மனைவி வேண்மாளுடனும் தம்பி இளங்

கோவுடனும் வஞ்சி நகரின் வெளியே உள்ள சோலையொன்றில் தங்கியிருந்தான். ஒருநாள் தனது மலைவளம் காண எண்ணிய அவன், பேரியாற்றின் கரையில் வந்து தங்கினான். அங்கே குறப் பெண்கள் ஆடிய குரவைக் கூத்தின் ஒலி கேட்டது. சில வேடர்கள் சேரமன்னனைக் காண்பதற்குக் காணிக்கைப் பொருள்களோடு வந்திருந்தனர். மன்னனை வாழ்த்தினர்; தாழ்ந்து பணிந்தனர். அவர்கள் மன்னனை நோக்கி, "மன்னரே! நாங்கள் ஓர் அதிசயம் கண்டோம்; எங்கள் மலையிலுள்ள ஒரு வேங்கை மரத்தடியில் ஒரு பெண் துயரத்தால் உளம்வெதும்பி நின்றுகொண்டிருந்தாள்; அப்பொழுது, தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள்! அவள் கணவனை அவள்முன் காட்டினார்கள்; பின்னர், இருவரையும் விண்ணுலகத்துக்கு அழைத்துச் சென்றார்கள்; அந்தப் பெண் எந்த நாட்டுக்காரியோ? தெரியவில்லை; அவள் யாருடைய மகளோ புரியவில்லை," என்று சொல்லி முடித்தார்கள்.

அச்சமயத்தில், சேரன் செங்குட்டுவனின் அருகில் இருந்த தமிழ்ப் புலவர் சாத்தனார், மன்னனை நோக்கிக் கண்ணகியின் வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்.

"வேந்தரே! அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட துன்பமெல்லாம் எனக்குத் தெரியும். அதைக் கூறுகிறேன், கேளுங்கள். தீவினையின் காரணமாகச் சிலம்பு ஒன்றினால், அவளது கணவன் பாண்டிய நாட்டிற் கொலை செய்யப்பட்டான். தன் கணவனை இழந்த அவள், துன்பம் தாங்காமல் அழுதாள்; அலறினாள்; கதறினாள். தனது மற்றொரு சிலம்பையும் எடுத்துக் கொண்டு பாண்டியன் சபையை நோக்கிச் சென்றாள். தன் கணவன் கள்வனில்லை என்பதை மன்னனிடம் நிரூபித்தாள். மன்னன் நெடுஞ்செழியன், தன் தவறை உணர்ந்தான்; தன் உயிரை நீத்தான். பாண்டிமாதேவியும் உயிர் துறந்தாள். கண்ணகி கோபம் கொண்டு

மதுரை நகரத்தைத் தீக்கு இரையாக்கினள். பாண்டிய மன்னனது கொடுங்கோன்மையை உங்களுக்குச் சொல்லுவதற்காகத்தான் அந்தப் பெண், தன் நாடான சோழ நாடு செல்லாமல், தங்கள் நாட்டை அடைந்தாற்போலிருக்கிறது,'' என்றும் சொல்லி முடித்தார்.

அந்த வரலாற்றைக் கேட்ட செங்குட்டுவன் மனம் வருந்தினன். பாண்டியன், தான் செய்த தவறு, பிற மன்னர்களுக்கு எட்டுவதற்குமுன், தன் உயிரைப் போக்கிக் கொண்டதை நினைத்துப் பாராட்டினன். தன் அருகில் அமர்ந்திருந்த மனைவி வேண்மாளிடம் ஓர் ஐயத்தைக் கிளப்பினன். "பாண்டிய மன்னன் உயிர் நீத்தவுடனே தானும் உயிர் நீத்தாளே கோப்பெருந்தேவி, அவள் சிறந்தவளா? அல்லது, கோபங்கொண்டு, நமது நாட்டின் எல்லைக்கு வந்த கண்ணகி சிறந்தவளா?'' என்று வேண்மாளிடம் கேட்டான். வேண்மாள், "நமது நாட்டையடைந்த பத்தினிக் கடவுளுக்குச் சிலை எடுத்து வணங்க வேண்டும்,'' என்று சொன்னாள். மன்னனும் ஒப்புக்கொண்டான். நூலறிந்த புலவர்களைக் கேட்டான். அவர்கள், "பொதிய மலையிலிருந்து கல் எடுத்து வந்து காவிரியில் நீராட்டிக் கொண்டு வர வேண்டும்; இல்லாவிட்டால் இமய மலையிலிருந்து கல் எடுத்து, அதைக் கங்கையில் நீராட்டிக் கொண்டு வரவேண்டும்,'' என்று சொன்னார்கள்.

பொதியத்தில் கல் எடுப்பது தனது வீரத்துக்கு அழகல்ல என்று எண்ணினன் சேரன். அதனால், இமயம் சென்று கல்லெடுக்க எண்ணினன். இமயமலை அருகில் அரசாட்சி செய்து வரும் வடநாட்டு மன்னர்கள் சிலை சமைக்கக் கல் தராவிட்டால், அவர்களுடன் போரிட்டு அவர்களை முறியடிக்க வேண்டும் என்றும் எண்ணினன். அதற்காகப் படையோடு செல்லத் தீர்மானித்தான்.

செங்குட்டுவனின் வீராவேசப் பேச்சைக் கேட்ட வில்லவன்கோதை என்னும் அமைச்சன், எழுந்து வணங்கி நின்று, பின்வருமாறு சொன்னான்: "மன்னவா பல்லாண்டு வாழ்க நின் ஆட்சி! முன் காலத்தில் உன்னோடு சோழரும் பாண்டியரும் பகைமை கொண்டு போரிட்டபோது, நீ அவர்களை எதிர்த்து வென்றாய். அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தாய். அவர்கள் தத்தம் கொடிகளையும் போர்க் களத்தில் போட்டு விட்டு ஓடினர். அது தவிர, கொங்கணர், கலிங்கர், கங்கர் முதலியோருடன் நீ செய்த போரில், உனது யானையை அனுப்பிப் பகைவர்களின் தலைகளைக் கொய்த காட்சி இன்னும் என் கண்களை விட்டு நீங்கவில்லை. உனது அன்னையின் படிவத்தைக் கொண்டு போய்க் கங்கையில் நீராட்டியபோது, அங்கிருந்த ஆரிய மன்னர்கள் ஆயிரம் பேரும் உன்னை எதிர்த்தார்கள்; அவர்களுடன் போரிட்டு வென்றாய். எனவே, அனைத்துலகும் உனது எல்லையாகிய பின்னர், உன்னைத் தடுப்பதற்கு எவருமே இல்லை. இப்போது பத்தினிக் கடவுளின் சிலை சமைப்பதற்காகவே இமயமலை செல்கிறாய். அதனால் இந்தச் செய்தியை உன் முத்திரை பொறித்த கடிதத்தின் மூலம் வடநாட்டரசர்களுக்குத் தெரிவிப்பது நல்லது," என்று சொன்னான்.

அதன் பின்னர் படைத் தளபதி அழும்பில் வேள் எழுந்தார். "பகை மன்னர்களின் ஒற்றர்கள் நமது நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களே இந்தச் செய்தியைத் தங்கள் மன்னர்களுக்குத் தெரிவித்து விடுவார்கள். ஆகையால் நாம் வடதிசைக்குப் புறப்படும் செய்தியை, நமது நாட்டிலேயே பறை சாற்றித் தெரிவித்து விடலாம்," என்று சொன்னார். மன்னன் அதற்குச் சம்மதித்தான். தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுத் தலைநகரான வஞ்சியை அடைந்தான். மன்னன் வடநாடு நோக்கிப் புறப்படும் செய்தி பறையறிவிக்கப்பட்டது.

"எங்கள் சேர மன்னன், பத்தினியின் சிலை சமைப்பதற்காக இமய மலையிலிருந்து கல் கொண்டுவரப் போகிறார். அதன் காரணமாக, அவர் வடநாட்டுக்குப் பயணம் செய்கிறார். அதனால் வடநாட்டிலுள்ள அரசர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் திறைகளைக் கொண்டு வந்து அவரைப் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்காமற் போனால், திறை செலுத்தும் வடதேய மன்னர்கள், சேர மன்னனின் கோபத்துக்கு ஆளாவார்கள்," என்று பறையறைவித்தார்கள்.

"சேரன் செங்குட்டுவன் தனது நவரத்தினக் கட்டிலிலே அமர்ந்திருந்தான். 'மன்னர் வாழ்க' என்று வாழ்த்தியபடியே அமைச்சர், சேனைத் தலைவர், சோதிடர் முதலியோர் அருகில் அமர்ந்திருந்தனர். அவர்கள் மன்னனிடம் இமயமலை செல்லும் காரணத்தைக் கேட்டனர்; சேர மன்னன் பதில் சொன்னான். இமயமலை சென்றிருந்த தாபதர்களிடம் வட நாட்டரசர்கள் தன்னைப் பழித்த சொற்களை, அந்தத் தாபதர்கள் வாயிலாகவே கேள்விப்பட்டிருக்கிறான், சேரன். தன்போன்ற மன்னனுக்கு அது இகழ்ச்சியைத் தருவதாக எண்ணினான். பத்தினிக்குச் சிலை அமைக்கக் கொண்டுவரும் அந்தக் கல்லை, அவ்வாறு அவமதித்துப் பேசிய மன்னர்களின் தலை முடியில் வைத்துத்தான் கொண்டுவரவேண்டும் என்றும் சேரன் எண்ணினான். அவ்வாறு தான் செய்யாவிட்டால், தான் தன் குடிமக்களுக்கு மிகவும் தீங்கு செய்தவன் என்றும் சொல்லிகொண்டான்.

வடதேசம் புறப்படுவதற்கு நல்ல நேரத்தைச் சோதிடர்கள் குறித்துக் கொடுத்தனர். அதன்படி சேரன் சேனையுடன் புறப்பட்டான். முரசுகள் ஒலித்தன, வீரர்கள் ஆர்ப்பரித்தனர்.

படைவீரர்களையும், அரசியல் அதிகாரிகளையும் நகர்ப்புறத்தில் உள்ள கோட்டையில் தங்கச் செய்துவிட்டுத் தான்

மாளிகைக்குச் சென்றான். அன்றிரவு தனது சேனைக்கு விருந்தளித்தான்.

மறுநாள் காலை, சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட முறைகளை அனுசரித்து, போருக்குப் புறப்பட்டபின் சேரன் வஞ்சி மாலையைத் தன் முடியில் சூடிக்கொண்டான். தன் குலக் கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டான். பட்டத்து யானையின்மீது ஏறி அமர்ந்தான். எல்லோரும் குடவர் கோமகனாகிய செங்குட்டுவன் வெற்றி பெறுவானாக, என்று வாழ்த்தினர். சிலர் ஆடகமாடம் என்ற கோயிலிலிருந்து திருமாலின் பிரசாதம் கொண்டுவந்திருந்தனர். அரசன் அத்திருமாலின் பிரசாதத்தை வாங்கித் தனது தோளில் அணிந்து கொண்டான்.

அரங்குகளிலிருந்து, நாடகப் பெண்கள் இரு கைகளையும் கூப்பி அரசனைத் தொழுது, வாயார வாழ்த்தினார்கள். மாகதர், சூதர், வேதாளிகர் என்பவர்கள் அரசனது பெருமை, வெற்றி முதலியவை தெரியும்படியாக வாழ்த்திக் கொண்டே வழி நடந்தனர். குதிரை விரர்களும், யானை வீரர்களும், காலாட்படையினரும் சேர மன்னனைத் தமது வாயார வாழ்த்தினார்கள்.

நால்வகைப் படையும் சூழக் கருவூரை விட்டுப் புறப்பட்ட சேர மன்னன், நீலகிரி மலையை அடைந்தான். மலைபடி வாரத்தில் அமைந்திருந்த பாடிவீட்டில் தங்கினான். அப்போது வடநாட்டு இமயமலையிலிருந்து தென்திசைக்குச் சென்றுகொண்டிருந்த முனிவர் சிலர் நீலகிரியில் தங்கினார்கள். அவர்கள் சேரனைக் கண்டு ஆசிர்வதித்தனர். அத்துடன், இமயமலைக்கு செல்கின்ற சேரன் அங்கிருக்கும் முனிவர்களுக்கு யாதொரு துன்பமும் ஏற்படாத விதமாய்ப் பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் சென்ற பின்னர் கொங்கணக் கூத்தர்களும் கருநாடக நாட்டவர்களும் கண்ணனை வாழ்த்திக் கொண்டே வந்தனர். அவர்கள் தத்தம் பெண்களுடன் பாடிக்கொண்டும் வந்தனர். தமது குலத்திற்கு ஏற்ற ஆடை அணிகளை அணிந்து வந்தனர். குடகு நாட்டுக்காரர்கள் கார்காலத்தைப் பற்றிய பாடலைப் பாடிக்கொண்டு வந்தனர். சேரன், அவர்களது ஆடல்பாடலைக் கண்டான்; கேட்டான், அகமகிழ்ந்தான். அவரவர்கள் திறமைக்குத் தக்கபடி; அவர்கள கனவிலும் எண்ணாத அளவுக்குப் பரிசில் கொடுத்து அனுப்பினான்.

அப்போது காவலாள் மன்னனிடம் வந்து, சஞ்சயன் முதலிய தூதர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னான். மன்னன் சஞ்சயனை வரச் சொன்னான். சஞ்சயன் என்பவன் சேர மன்னனின் நட்பரசனான நூற்றுவர் கன்னர் என்பவர்களால் அனுப்பப்பட்ட தூதன். அவன் பெருஞ் செல்வத்துடனும், நாடகப் பெண்களுடனும், நூல் வல்லவர்கள் பலருடனும் வந்தான். மன்னனைக் கண்டு, "மன்னர் மன்னரே! தாங்கள் இமயம் செல்வதை அறிந்த எங்களது அரசர், பத்தினிக் கல்லைத் தாமே எடுத்துவருவதாகச் சொன்னார்கள். தங்கள் எண்ணம் எப்படியோ?" என்று கேட்டான். அதைக் கேட்ட சேரன்........."சஞ்சயா! வட நாட்டரசர்களில் முக்கியமானவர்கள் என்று கருதப்படும் கனகனும், விசயனும் தங்களது நாவைப் பாதுகாக்காமல், தமிழ் வேந்தர்களின் ஆற்றல் அறியாத சில மன்னர்கள் கூடியிருந்த சமயத்தில், தமிழரசர்களை அவமதித்துப் பேசியிருக்கின்றனர். அதனால், அவர்களைத் தண்டிப்பதற்காகவும் இந்தச் சேனை கோபத்துடன் செல்கிறது. இதைக் கன்னர் நூற்றுவரிடம் தெரிவி. எங்களுடைய படை கங்கையைக் கடப்பதற்குரிய மாக்கலங்களைத் தயார் செய்துவைக்கச் சொல்" என்று கூறினான். சஞ்சயன் மன்னன் ஆணையைத் தலைமேல் தாங்கிச் சென்றான்.

சஞ்சயன் சென்றபின், பாண்டிய மன்னனிடத்திலிருந்து சந்தனம், முத்து முதலிய திறைப்பொருள்கள் வந்து சேர்ந்தன. சேரனும் அவ்வரசர்களுக்குத் தனது முத்திரையிட்ட ஓலைக் கடிதத்தை அனுப்பிவிட்டு, நீலகிரிப் பாடிவீட்டைவிட்டு இமயமலையை நோக்கிப் பயணம் செய்தான். அவனது சேனையும் கொதித்து எழுந்தது. சில நாட்களில் சேரன் கங்கைக்கரையை அடைந்தான். கன்னர் நூற்றுவர் தயார் செய்து வைத்திருந்த மரக்கலங்களின் உதவியால் சேரன் படைகளோடு கங்கையாற்றைக் கடந்தான். கன்னர் நூற்றுவரும் சேரனை எதிர்கொண்டு, நல்வரவேற்று, உபசரித்து வணங்கி நின்றனர். பிறகு செங்குட்டுவன் அவர்களது நாட்டைக் கடந்து, உத்தரகோசலையை அடைந்தான். போர்க்களம் வகுத்தான். தன் பெருஞ் சேனையுடன் பாசறையில் தங்கியிருந்தான்.

சேரன் செங்குட்டுவன் தம் நாட்டின்மேல் படையெடுத்துவரும் செய்தியை வட நாட்டு மன்னர்களான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்ரன், சிவேதன் முதலியோர் கேள்விப்பட்டனர். தமிழ் மன்னரின் ஆற்றலை ஒரு கை பார்ப்போம் என்று எண்ணினர்கள். அதனால்,கனகவிசயருடன் சேர்ந்து, சேரனைத் தாக்கினர். சேர மன்னன் அஞ்சாத நெஞ்சம் உள்ளவன். அவன் வட நாட்டு அரசர்க்கு அஞ்சவில்லை. யானைக் கூட்டத்தில் சிங்கம் பாய்வதுபோல் பாய்ந்தான். கடும் போர் செய்தான். அந்தப் போரில் கொடிகள் நெருங்கிப் பந்தல் இட்டதுபோல் இருந்ததனால் சூரியனது கிரணங்கள் மறைக்கப்பட்டன. பறைகள், சங்குகள், கொம்புகள், முரசுகள், பேரிகைகள் முதலான வாத்தியங்கள் ஒரே சமயத்தில் ஒலித்தன. அதனால் எட்டுத் திசைகளிலும் எதிரொலி ஏற்பட்டது. வட நாட்டு மன்னர்களின்

சேனை சிறிது நேரத்தில் நிலை குலைய ஆரம்பித்தது. வஞ்சி நகர் வீரர்கள் ஆவேசத்துடன் போர் செய்தனர். பல குதிரைகள் வெட்டப்பட்டன; பல வீரர்கள் கையிழந்தார்கள்; தலையிழந்தார்கள்; கால் இழந்தார்கள்; உயிர் இழந்தார்கள். இந்தப் பெரும் போரில் வட நாட்டரசர்களின் சேனை நிலை கலங்கி ஓடியது. அவ்வரசர்கள் மனங் கலங்கினார்கள். முடிவிலே சேர மன்னன் வெற்றி பெற்றான். கனகவிசயர்களும் நூறு தேர்வீரர்களும் சிக்கிக்கொண்டனர்.

தமிழ் மன்னன் வெற்றியடைந்ததைக் கண்ட பல பகைவர்கள் உருமாறிச் சென்று எதிர்த்தனர். சிலர் காவி உடை அணிந்து சாம்பலைப் பூசிச் சந்நியாசிகள்போல ஓடி மறைந்தனர். சிலர் மயிற்பீலியைக் கையில் வைத்துக்கொண்டு சமண முனிவர்கள்போல வேடமிட்டுக்கொண்டனர். பலர் வாத்தியங்களைத் தொங்கவிட்டுக்கொண்டு பாட்டுப் பாடும் பாணர்கள்போலவும், கூத்தர்கள்போலவும் வேடமணிந்தனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த,வேடங்களையணிந்துகொண்டு தப்பி மறைந்தனர்.

சேரமன்னன், தன் சேனையில் இறந்துவிட்ட வீரர்களுக்கு ஈமக்கடன்களைச் செய்து அவர்கள் நற்கதி அடையுமாறு இறைவனை வேண்டினான். மீதி வீரர்களுக்குப் பெரிய விருந்து வைத்தான். அவரவர் தகுதிக்கு ஏற்றவிதமாகப் பரிசுகள் கொடுத்து அவர்களை மகிழ்வித்தான். அவர்கள் எல்லோரும் மன்னனை வாழ்த்தினார்கள்.

ஆரிய அரசர்களை வெற்றி கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்த சேரனின் உள்ளம், அவர்களை வென்றபின் உவகை கொண்டது. அவனது முதல் எண்ணம் ஈடேறியது. இனி அடுத்துள்ள விருப்பம் இமயமலையிலிருந்து கல்லைக் கொண்டு வருவதாகும். அதனையும் உடனே முடிக்க எண்ணினான் சேரன். அமைச்சன் வில்லவன் கோதையை அழைத்தான். அவனிடம், இமயமலைச் சார

லில் வேள்வி இயற்றித் தவம்செய்து கொண்டிருக்கும் முனிவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் நேராதபடி பார்த்துக்கொண்டு, படிவம் செய்வதற்குரிய கல்லைக் கொண்டு வருக என்று ஆணையிட்டான். மன்னன் ஆணைப்படி வில்லவன் கோதை பெரிய படையுடன் இமயமலையை அடைந்தான். அங்கே தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களைக் கண்டான். அவர்களை வணங்கி, தான்வந்த காரியத்தைச் சொன்னான். அவர்கள் மன்னனை வாழ்த்தினார்கள். வில்லவன் கோதையை ஆசிர்வதித்தார்கள். அமைச்சன் பத்தினிக்கு உகந்த பாங்கான சிலையொன்றை அரும்பாடுபட்டுத் தேடி எடுத்தான். அதனைச் சேரனிடம் கொண்டுவந்து சேர்த்தான்.

14. நீர்ப்படை செய்தது

தேவாசுர யுத்தம் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது. இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதங்கள் நடந்தது. பாரத யுத்தம் பதினெட்டு நாட்கள் நடந்தது. செங்குட்டுவன் போர் பதினெட்டு நாழிகைக்குள் நடந்தது.

தமிழ் மன்னர்களின் வல்லமையை அறியாமல் போர் செய்த கனகவிசயர்களில் முடிமீது ஏற்றிக் கங்கையின் வடகரையை அடைந்தான். நான்மறையாளர் சொல்லிய நல்ல நேரத்தில் அந்தச் சிலையைக் கங்கையாற்றில் நீராட்டினர். அது முடிவுற்றபின், சேரன் சேனையோடு, கங்கையாற்றைக் கடந்து தென் கரையை அடைந்தான். அங்கே தனக்கென்று அமைக்கப்பட்ட பாடி வீட்டில் தனது சேனையோடு தங்கியிருந்தனர்.

சேர மன்னன் தனது வீரர்களுக்கெல்லாம் தங்கத்தால் செய்த மலர்களை, அவர்கள் பெற்ற வெற்றிக்கு அடை

யாளமாகக் கொடுத்து, வெற்றி வீரனாக அமர்ந்திருந்தான். அப்போது மாடலன் என்னும் மறையோன் அங்கு வந்தான். அவன் அரசனை வாழ்த்தி, "எனது அரசரே! மாதவி பாடிய கானல் வரிப் பாட்டு கனகவிசயர்களுடைய முடித்தலையை நெறித்தது. அது வியப்பிற்கு உரியதுதான்," என்று நயமாகச் சொன்னான். அதைக் கேட்ட சேரன், "நான்மறையாள, இங்கே இருக்கும் பகை மன்னர்களும் அறிந்துகொள்ள முடியாத விதமாக ஏதோ சொன்னாய், அதன் பொருள் என்ன? எல்லோருக்கும் விளங்கும்படியாகச் சொல்," என்றான்.

உடனே, மாடலன், "மன்னவரே! கடல் விளையாட்டை நாடிக் கோவலனும் மாதவியும் சென்றிருந்தார்கள். அப்போது மாதவி பாடிய சில வரிப் பாட்டுக்களைக் கேட்ட கோவலன் தவறாகப் பொருள் கொண்டுவிட்டான். அவளுக்குத் தன்மீது அன்பில்லை என்று எண்ணிக் கோபம் கொண்டான். அவளை விட்டுப் பிரிந்தான். பின்னர் ஊழ்வினை அவனைத் தள்ளினதாலே தன் மனைவி கண்ணகியுடன் புறப்பட்டு மதுரை நகரை அடைந்தான். அங்கே கோப்பெருந்தேவியின் காற்சிலம்பைத் திருடின கள்வன் என்று பாண்டியனால் எண்ணப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். அவன் மனைவி கண்ணகி, அரசன்முன் சென்று வழக்காடினாள். தன் கணவன் கள்வன் இல்லை என்பதை நிலைநாட்டினாள். தவறு செய்துவிட்ட மன்னன் உயிர் நீத்தான். பிறகு அவள் மதுரையை எரித்துவிட்டு உமது நாடு வந்து துறக்கம் அடைந்தாள். உமது நாட்டை அவள் அடைந்தாளாதலால் இப்போது இவ் வடநாட்டரசர் மணிமுடியில் ஏறி அமரும் வாய்ப்பும் பெற்றாள்;" என்று கூறினான்.

அவன் மேலும் மன்னனை நோக்கி, "சேரர் பெருமானே! நான் இங்கு வருவதற்குக் காரணம் உண்டு.

அதைக் கூறுகிறேன் கேட்டருளுங்கள். நான் குமரித் துறையில் நீராடித் திரும்பி வரும்போது, மதுரை நகருட் சென்றேன். அப்போது பாண்டியன் நீதி தவறிவிட்டான் என்றும், கோவலன் கொல்லப்பட்டான் என்றும் அந்த நகரத்து மக்கள் பேசிக்கொண்டார்கள். அந்தச் செய்தியை அறிந்த இடைச்சியர் தலைவியான மாதரி இடைத்தெருவில் உள்ள விதி மன்றத்திலிருந்து, "இடைக்குல மக்களே! கோவலன் குற்றவாளியல்ல! மன்னன்தான் தவறு செய்துவிட்டான். எளிதில் கிடைக்காத அடைக்கலங்களை நான் இழந்தேன். பிழை செய்யாத மன்னவனின் செங்கோலும் குடையும் கெட்டுப்போகும் காலமும் வந்ததே," என்று அழுது புலம்பி, நள்ளிரவில் தீயில் விழுந்து உயிர் நீத்தாள். கோவலன், கண்ணகி இருவரையும் அழைத்துவந்த கவுந்தியடிகள் மனம் வருந்தினார். தவறிழைத்த வேந்தன் இறந்துவிட்டதால் சாபம் கொடுக்காமல் விட்டுவிட்டார். ஆனாலும், உண்ணா விரதம் இருந்து உயிர் விட்டார். இவ்வாறு இருவர் இறந்ததையும் மதுரை நகரம் தீக்கு இரையானதையும் கேட்டறிந்தேன். அதன்பின் எனது நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தேன். மதுரையில் நடந்த நிகழ்ச்சிகளையும் என் துயரத்தையும் எனது நண்பர்கள் சிலரிடம் தெரிவித்தேன். அவை கோவலன் கண்ணகி இருவரது பெற்றோருக்கும் எட்டிவிட்டது.

கோவலன் தந்தையான மாசாத்துவான் தன் மகன் இறந்ததையும் மருமகள் துன்பத்தையும் மதுரையின் நிலையையும் அறிந்து மனம் வருந்தினான். தன் சொத்துக்கள் அனைத்தையும் தானம் செய்து துறவறம் மேற்கொண்டான். அவனது மனைவி, தன் மகனின் மரணத்தைக் கேட்டு மனம் பொறுக்காமல் நோயில் விழுந்து உயிர் விட்டாள். கண்ணகியின் தந்தையான மாநாய்கனும். தன் பொருளை ஏழை எளியவர்களுக்குத் தந்துவிட்டுத் துறவறம் பூண்டான். கண்

ணகியின் தாய் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் உயிரை விட்டாள். தன் காதலனுக்கு ஏற்பட்ட முடிவை எண்ணியெண்ணி வருந்திய மாதவி துறவறம் மேற்கொண்டாள். அவள் மகள் மணிமேகலையும் தருமோபதேசம் பெற்றுப் புத்த மதத்தில் சேர்ந்தாள். கோவலனும் கண்ணகியும் இறந்துபோனதை என் வாயால் கேட்டுச் சிலர் இறந்துபோனது கண்டு வருந்தினேன். அந்தப் பாவத்தைத் தொலைக்கக் கங்கையாற்றில் நீராடுவதற்கு வந்தேன். இதுதான் எனது வருகைக்குக் காரணம்! இதுவே, என் வரலாறு," என்று சொல்லி முடித்தான்.

மாடலனது பேச்சைக் கேட்ட மன்னன், "ஐயா! பாண்டியன் மாய்ந்தபின்னர் பாண்டிய நாட்டின் செய்தி என்ன?" எனக் கேட்டான். அதற்கு மாடலன், "அரசே! கொற்கை நகரத்தில் இளவரசனுக இருந்த வெற்றிவேற்செழியன் இப்போது மதுரையில் அரசாட்சி செய்துவருகிறுன். அவன் மதுரைக்கு நேர்ந்த விபத்தை எண்ணி வருந்தி, ஆயிரம் பொற்கொல்லரை வீர பத்தினிக்குப் பலியிட்டுத் தான் மதுரையைஅரசாண்டுவருகிருன்," என்றுன்.

மாடலன் கூறிய வரலாற்றையெல்லாம் கேட்டு மன்னன் சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது வானத்தில் பிறைச்சந்திரன் தெரிந்தது. அப்போது காலக்கணிதன், "பெருமானே! நாம் நமது ஊரைவிட்டு வந்து இன்ருேடு முப்பத்திரண்டு மாதங்கள் ஆகின்றன," என்று உணர்த்திஞன். அதைக் கேட்ட சேரன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து, தனியான இடத்தில் இருந்த பெரிய ஆசனத்தில் அமர்ந்தான். மாடலனை வரவழைத்தான். அவனை அருகே உட்காரவைத்து, "மறையவனே! சோழ நாட்டில் எனது மைத்துனனேடு பகைத்துக்கொண்ட சோழர் போரில் மடிந்தபிறகு, சோழ மன்னனது ஆட்சி நன்ருக நடைபெறு

கிறதா?" என்று வினவினான். மாடலன், 'சோழ நாடு சீரும் சிறப்பும் மிகுந்து விளங்குகிறது,' என்று பதில் சொன்னான்.

சேரன் மாடலன் கூறியதைக் கேட்டு மனம் மகிழ்ந்தான். அவன், தன் நிறையுள்ள ஐம்பது துலாபாரம் தங்கத்தை மாடலனுக்குப் பரிசாகத் தந்தான். பின்னர், தனக்குத் துணையாக வந்திருந்த ஆரிய மன்னர்களான கன்னர் நூற்றுவரையும் அவரவர் நாடுகளுக்குச் செல்லும்படி உத்தரவிட்டான். தமிழரசரின் தனி ஆற்றலை அறியாமல் அவமதித்துப் பேசியவர்களும், சந்நியாசி வேடம் பூண்டு தப்பி ஓட முயற்சித்தவர்களுமான கனகவிசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வரும்படி, தன் தூதர்களை அனுப்பினான்.

15. செங்குட்டுவன் திரும்பினான்

செங்குட்டுவன் வடநாட்டுப் பிரயாணம் செய்தபோது தன் தேவி வேண்மாளை வஞ்சி நகரிலேயே விட்டுச் சென்றான். அப் பத்தினி, தன் கணவனின் வருகையைப் பெருத்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பல மாதங்கள் ஆயின. அவள் மனக் கவலை அதிகமாயிற்று. அழகிய படுக்கையில் படுத்தாலும் தூக்கம் வருவதில்லை. ஏக்கத்திற்கு ஆளாகியிருந்தாள் அவள். நாளடைவில் அவளது உடல் மெலிய ஆரம்பித்து விட்டது. செவிலித் தாய்மார்கள் செங்குட்டுவனின் வடநாட்டு வெற்றியை உணர்ந்திருந்தார்கள். ஆதலால் அவர்கள் தம் அரசியை நோக்கி, "அம்மையே! நீங்கள் கவலைப்பட வேண்டாம்! நம் அரசர் வெற்றி மாலை சூடி வருகிறார்," என்று கூறினர். அவளது துயரத்தையும் கவலையையும்

மாற்றுவதற்காக, அரசனது போர்த்திறமையைப் பாராட்டிப் பாடல்களைப் பாடினார்கள்.

தினைப்புனக் காவலர்கள் மதுவை அருந்திக் காவலை மறந்து மதிமயங்கி இருக்கும்போது, யானைகள் கதிர் உண்ணுவதற்கு அது ஏற்ற நேரம் என்று அறிந்து புனத்துள் நுழைந்தன. அதைக்கண்ட மலைப் பெண்கள் பரண்மீதிலிருந்து," வட நாட்டிற்குச் சென்ற மன்னன் வெற்றி பெற்று மீளுகிறான்; வரும் வழியில் நிற்காதீர்கள்," என்று அழகாகப் பாட, யானைகள் இன்புற்று அப்படியே தூங்கவாரம்பித்தன உழவர்கள் தங்கள் காளைகளைப் பார்த்து," நம்மன்னர், வடவேந்தர்களை வென்று திரும்புகிறார்; காளைகளே! உழுது, நாட்டைப் பண்படுத்துங்கள்" என்று அரசனது வெற்றி தோன்றும்படி பாடினர். மன்னனது பசுக் கூட்டத்தை மேய்ப்பவர்கள், 'பசுக்களே! நம் மன்னர் நாளை வடநாட்டுப் பசுக்களோடு வருவார்; அவர் கொண்டுவரும் பசுக்களோடு நீங்களும் சேர்ந்து ஒற்றுமையாக வாழுங்கள்" என்று பொருள்படும்படி குழலூதினார்கள். கடற்கரையைச் சார்ந்துள்ள நிலத்தில் வாழுகின்ற பெண்கள், "நம் சேரர் பிரான் நம் மாதரசியை மகிழ்விக்க நாளை வருவான். அவனது வெற்றியை நினைத்துப் பாடுவோம் வருக," என்று பேசிக்கொண்டு பலராக ஒன்று கூடி ஆடிப் பாடினார்கள். இதையெல்லாம் கண்ட வேண்மாள் துக்கமற்றிருந்தாள்.

அப்போது கீழ்த்திசையிலே கதிரவன் தன் பொன் நிறக் கதிர்களைப் பரப்பிக்கொண்டு வந்தான். அதுபோது, செங்குட்டுவன் தனது பட்டத்து யானைமீது அமர்ந்து நாற்படையும் சூழ நகருக்குள் நுழைந்தான்.

16. நடுகல் அமைத்தது

சேரமன்னனைக் கண்ட அந்நகரப் பெண்கள், வாசனை மிகுந்த மலர்களை அவன் மீது தூவி மங்கல வாழ்த்துக்களைப் பாடினர். "எமது மன்னர் மன்னன் சேரன் செங்குட்டுவன் நீடுழி வாழ்க! அவனது செங்கோலும் குடிமக்களும் வாழ்க," என்று வாழ்த்தினர். நகர் முழுதும் மங்கல ஒலி எழுந்தது. வீரர்கள் அன்று அடைந்த களிப்புக்கு அளவே கிடையாது. புண்பட்ட வீரர்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றனர். அவர்களுடைய பத்தினிமார் அவர்கள் அடைந்த வெற்றியைப் பாராட்டிப் பேசி அவர்களது புண்களைத் தமது உபசாரத்தினால் ஆற்றினார்கள். அன்று, வஞ்சிமா நகரம் பொலிவுற்று விளங்கியது.

அரசன் அரண்மனையை அடைந்தான். அச்சமயம் அவனைக் காண்பதற்காக வேண்மாள் தன் தோழியர் தன்னைச் சூழ்ந்து வரச் சென்றாள். அரசனைக் கண்டாள்; அடிபணிந்தாள். மன்னன் ஆனந்தம் அடைந்தான்; அவளை வாரி எடுத்தான். முகமலர்ச்சியோடும் அகமலர்ச்சியோடும் பேசி அவளுடன் அரங்கத்தில் இனிது வீற்றிருந்தான்.

அப்போது கூத்தன் ஒருவன் வந்து அரசனடி பணிந்தான். "அரசே! சிவபெருமான் முப்புரத்தை எரித்த காலத்தில் உமையவளைத் தன் ஒரு பாகத்திலே வைத்துக் கொண்டு ஆடிய ஒருவகைக் கூத்தை ஆடுகின்றேன். அனுமதி தரவேண்டும்," என்றான்.

மன்னன் ஆடும்படி உத்தரவிட்டான். அந்தக் கூத்தன் வெகு நன்றாக ஆடினான். அரசனும் அரசியும் கண்டு இன்

புற்றனர். அந்தக் கூத்தனுக்கு வேண்டிய பரிசுகளைக் கொடுத்து அனுப்பினான் அரசன்.

அதன்பின் அரசன் அரங்கினை விட்டுச் சென்று ஓலக்க மண்டபத்தில் அமர்ந்திருந்தான். அப்போது நீலன் முதலிய ஒற்றர்களும் மாடலனும் வந்து சேர்ந்தனர். மன்னனை வணங்கி நின்றனர். நீலன் மன்னனைப் பார்த்து, " மன்னரே தங்கள் கட்டளைப்படி கனசவிசயரைக் கொண்டு சென்று சோழ மன்னனைக் கண்டோம். வடநாட்டுப் போர் விவரத்தைச் சொல்லிக், கனக விசயரையும் காட்டினோம். அதுபோது அந்த மன்னன் தனது சேனைத் தலைவனை நோக்கி, " போர்க்களத்தில் தப்பி ஓடிய மன்னனைச் சிறைப் பிடித்துக் கொண்டு வருவது சேர மன்னனுக்குப் பெருமை யைத் தராது," என்றான். பின்னர் சோழநாட்டை விட்டுப் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையை அடைந்தோம்; பாண்டியமன்னனைக் கண்டோம்; அவருக்கும் போர் முறை யை விவரித்தோம். கனக விசயரையும் காட்டினோம். அந்த மன்னன், "சேரனுக்கு இணையாகாமல், பயந்து, தவக் கோலம் கொண்ட அரசரை இவ்வாறு சிறைப்பிடித்து வந்தது முறையல்ல; சேரனுடைய செய்கை புதியதாய் இருக்கிறது," என்றான். இதுதான் நாங்கள் கொண்டுவந்த செய்தி" என்று சொல்லி முடித்தான்.

17. சேரனின் சினம்

சோழ பாண்டியர் சொற்களிலிருந்து அவர்கள் தன்னை அவமதித்துப் பேசினார்கள் என்பதைச் செங்குட்டுவன் அறிந்தான். அதனால், கடுங்கோபம் கொண்டான். தன் ஆசனத்தைவிட்டு எழுந்தான். அவனது சீற்றத்தைக் கண் டோர் அஞ்சினர். சோழ பாண்டியருக்கு இறுதிக்காலம்

வந்துவிட்டது போலும் என்று சந்தேகித்தனர். அரசனது கடைப்புருவம் நெற்றியை முட்டியது. கோபத்தால் உடல் துடித்தது. கைகளைத் தட்டினுன். " ஆ! இந்தச் சோழ பாண்டியருக்குக் கர்வம் எவ்வளவு இருக்கிறது? என்னு டைய தோள் வலுவையும், வாளின் வலுவையும் முழுதும் அறிந்திருந்தும், எதுவுமே அறியாதவர்கள் போலப் பேசி விட்டார்கள். இவர்களது செருக்கினை இப்பொழுதே அடக்குகிறேன்," என்று கூறித் தன் வாளை எடுக்க முயற்சித் தான்.

அரசனது அடங்காக் கோபத்தைக் கண்ட மாடலன் எழுந்து நின்று, " அரசே! தங்கள் கோபம் அடங்குவதாக. தங்களது பெருமையை அறியாதவர்கள் யார் இருக்கிருர் கள்? மிகுதியான யானைப்படைகள் உள்ள பகைவரின் வியலூரை அழித்தீர்கள். சோழர் குடியில் பிறந்த ஒன்பது பேரை ஒரே போரில் நேரிவாயிலில் வென்றீர்கள்! மரக் கலங்களைச் செலுத்திப் பகைவர்களை ஒழித்தீர்கள்! முன்பு ஆரிய மன்னர்களைக் கங்கைக் கரையில் தோற்கடித்தீர்கள்! இவ்விதம் பலவிதமான போரிலும் வெற்றிமாலை அணிந்தீர் கள். தாங்கள் ஐம்பது ஆண்டுகள் கழிந்து, வயோதிகப் பருவத்தை அடையும் நிலையில் இருக்கிறீர்கள். இதுவரை தாங்கள் மறக்கள வேள்விதான் செய்து வந்தீர்கள். ஆனல், அறக்கள வேள்வி செய்யவில்லை! தங்கள் முன்னேர்கள் சிறந்த மன்னர்களாக இருந்தார்கள். அவர்களெல்லாம் மறக்கள வேள்வியே செய்தார்கள். அதனுல்தான் அவர் களது பெயர்கள் உலகத்தில் அதிகமாகப் பரவவில்லை. ' அரும் பெரும் செயலைச் செய்து சிறப்பாக வாழ்ந்த மன்னர் களின் வழியிலே உதித்த தாங்கள், மறக்கள வேள்வியில் சிறந்து விளங்குவதைப் போலவே, அறக்கள வேள்வி யிலும் சிறந்து விளங்கவேண்டும். உயிருக்கு உறுதியைத் தரக்கூடியது அறக்கள வேள்வி ஒன்றுதான். ஆகவே

தாங்கள் அதனைச் செய்யவேண்டும். உலகத்தில் எதுவும் நிலை இல்லை! இளமை நிலை இல்லை; யாக்கை நிலை யில்லை. அறம் ஒன்று தான் நிலையானது. ஆதலால் தானம் செய்க; மோட்சத்தை அடைவதற்குரிய வேள்வி செய்வதையே தாங்கள் இனிமேல் முக்கிய பணியாக எண்ணவேண்டும். இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக் கிருப்பது நிச்சயம் இல்லை. ஆதலால், நாளை நாளை என்று நாளைப் போக்கவேண்டாம். மனித உடல் அழிவுள்ளது; நிலையில்லாதது. போக பாக்கியங்கள் தண்ணீரில் சுருண்டு ஓடி மறைகின்ற அலைகளுக்குச் சமமானவை. நமது உடல், நீரில் எழுதப்பட்ட எழுத்திற்குச் சமமானது. நீரில் எழுதும் எழுத்து எவ்விதம் அழிந்துபோகுமோ, அதுபோல இவ்வுடல் சீக்கிரமே அழிந்துவிடும்.

உங்களுக்கு நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அறக்களவேள்வியின் பயனைத்தான் எடுத்துக் கூறினேன். வீணுகச் சோழ பாண்டியரோடு சண்டை செய்து வெற்றி யடைவதில் என்ன பயன்? அந்த எண்ணத்தைத் தவிர்த்துவிடுங்கள்!" என்று கூறி முடித்தான்.

18. கனக விசயர் விடுதலை

மாடலனது அறிவுரை மன்னனது கோபத்தை மாற்றி யது. மன்னன், "உனது விருப்படியே செய்கிறேன்," என்று மாடலனிடம் சொல்லி யாகத்தில்வல்லவர்களை யாகம் செய்யு மாறு கட்டளையிட்டான். சிறைவைக்கப்பட்டிருந்த ஆரிய மன்னர்களை விடுவித்து நல்ல மாளிகை ஒன்றில் இருக்கச் செய்தான். தான் செய்யப்போகும் ராஜசூயயாகம் முடிந்த பின்னர் அவர்களை அவர்களது ஊருக்கு அனுப்புவதாகச் சொன்னுன். சிறைச்சாலையில் அடைபட்டவர்கள் எல்லோரையும் விடுவித்தான்.

அறநூலில் வல்ல அந்தணர் முதலானோர் பத்தினியின் உருவஞ் செதுக்கப்பெற்ற சிலையை ஆலயத்தில் வைத்தனர். அந்தச் சிலைக்கு அணிய வேண்டிய அணிகலன்களை அணிவித்தார்கள். வேள்விகளும் ஓமங்களும் நிகழ்ந்தன. திக்குத் தேவதைகளைக் கடைவாசலில் நிறுவினார்கள். பத்தினிக் கடவுளைப் பிரதிட்டை செய்து பெரிய விழாக் கொண்டாடினார்கள். அதுமுதல் சேரனுக்குக் கப்பம் கட்டும் மன்னர்கள் தங்கள் திறையைப் பத்தினியின் கோயிலிலேயே கொண்டுவந்து கொடுத்தார்கள்.

19. வாழ்த்து

இது இவ்வாறிருக்க, கோவலன் கொலை செய்யப் பட்டதையும், கண்ணகி துயர் எய்தியதையும் அவள் மன்னனின் முன்பு வழக்குரைத்ததையும், பாண்டிய மன்னன் உயிர் துறந்ததையும் மாடலன் மூலம் அறிந்த மாசாத்துவான் துறவறம் பூண்டான். அவன் மனைவி உயிர் துறந்தாள். கண்ணகியின் செவிலித்தாயும், தோழி தேவந்தியும் மிகவும் வருந்தினர். மதுரைக்குச் சென்று கண்ணகியைக் காணலாம் என்று புறப்பட்டனர்; மதுரையை அடைந்தனர். மதுரை தீக்கிரையாக்கப்பட்ட செய்தி அறிந்து மாதரியின் மகளாகிய ஐயையிடம் சென்றார்கள். அதன் பின்னர் நால்வரும் மதுரை நகரைவிட்டுப் புறப்பட்டார்கள். திருச்செங்குன்றிற்குச் சென்றார்கள். அங்கே செங்குட்டுவன், பத்தினிக் கடவுளுக்கு ஆலயம் எடுத்து விழா நடத்திக்கொண்டிருந்தான். அவர்கள் செங்குட்டுவ மன்னனைக் கண்டார்கள். தமது வரலாற்றைக் கூறினார்கள். கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், மாதரியும் இறந்த செய்தியை விவரித்தார்கள். மாசாத்துவானும் மாநாய்கனும் துறவறம் மேற்கொண்ட வரலாற்றை

யும், மாதவியின் மகள் துறவு மேற்கொண்ட செய்தியையும் வீரபத்தினியின் சந்நிதியின் முன்பு விவரமாகச் சொன்னார்கள். பிறகு அவர்கள் ஐயையைச் சுட்டிக்காட்டி, "மாபத்தினி! உன்னை அடைக்கலமாகக் கொண்டு உன்னைப் பாது காத்து, நீ அடைந்த துயரம் கேட்டுத் தாங்காமல் உயிர் விட்ட மாதரியின் மகள் இவள். நாங்கள் யாவரும் உன்னைக்கண்டு தரிசிக்க வந்தோம்," என்று கூறிப் புலம்பி நின்றார்கள்.

அவ்வாறு, அழுது புலம்பிக் கொண்டிருந்தபோது, ஆகாயத்தில் ஓர் உருவம் தோன்றியது. அது, சிலம்பு, மேகலை, வளையல்கள், வயிரத்தோடு முதலிய நகைகள் அணிந்திருந்தது. அதைக்கண்ட செங்குட்டுவ மன்னன் அதிசயம் அடைந்தான். அவ்வளவில் அந்தத் தெய்வம் தன்னுருவை நன்ருகக் காண்பித்தது. தன் தோழியர்களை நோக்கி, "தோழிகளே! என் கணவனைக் கொலை செய்வித்த பாண்டிய மன்னன் குற்றம் உள்ளவன் இல்லை. விதி வசத்தால் இம்மாதிரி எல்லாம் நிகழ்ந்து விட்டன. எனது மானிட உடலைவிட்டு, தேவஉடலை நான் பெறுவதற்கு அவன் காரணமாக இருந்ததால் நான் அவன் மகள். முருகனது திருக்குன்ருகிய இந்த திருச்செங்குன்றில், நான் விளையாட விரும்பியிருக்கிறேன். அதனால், இதைவிட்டு நான் அகலமாட்டேன். நீங்களும் முன்போல என்னுடன் விளையாட வாருங்கள்!" என்று கூறினாள்.

அந்த அற்புதமான நிகழ்ச்சியைக்கண்ட வஞ்சிநாட்டுப் பெண்கள் கண்ணகியைப் பலவாறு புகழ்ந்தார்கள். பாடல்களாகப் பாடினார்கள். இறுதியில், கண்ணகி, 'செங்குட்டுவன் நீடூழி வாழ்க" என்று கூறி மறைந்தாள்.

20. மணிமேகலை யார்?

கண்ணகியின் உருவம் மறைந்த பிறகு சேரன் செங்குட்டுவன் தேவந்தியை நோக்கி, "மணிமேகலை என்று சொன்னாயே? அது யார்? அவளுடைய வரலாறு என்ன?" என்று கேட்டான். தேவந்தி சேரனை நோக்கி, "அரசரே, மணிமேகலை என்பவள் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். அவள் யாவரும் பார்த்து அதிசயிக்கும்படி யான பேரழகுடன் விளங்கினாள். மாதவி அவளைச் செல்லமாக வளர்த்து வந்தாள். கோவலன் கொல்லப்பட்ட செய்தி எட்டியதும் மாதவி உலக இன்பத்தை வெறுத்துத் துறவு பூண்டாள்; அவளது தாய் சித்திராபதி அவளுக்கு அநேக புத்திமதியைக் கூறினாள். நாடகப் பெண்களின் தொழிலை நடத்திக் கொண்டிருக்கும்படி வேண்டினாள். மாதவி மறுத்துவிட்டாள். புத்தமதத்தில் சேர்ந்தாள். தன் மகள் மணிமேகலையின் கூந்தலையும் களையச் செய்து, பிக்குணியாக்கிவிட்டாள். சிறந்த அழகியான மணிமேகலை பிக்குணியாகிய செய்தியைக் கேட்டு, சோழமன்னனும், குடிமக்களும் மனம் வருத்தப்பட்டார்கள். பின்னர் மணிமேகலை பௌத்த மதப் பெரியவரான அறவண அடிகள் என்பவரிடம் தர்மோபதேசம் பெற்றுச் சுகமாக வாழ்கிறாள். இதுதான், மணிமேகலையின் வரலாறு என்று சொல்லி முடித்தாள்.

அப்போது, அவள்மீது தெய்வ ஆவேசம் வந்தது. கைகளை உதறினாள்; கால்களை நீட்டினாள்; தலையை அசைத்து அசைத்து ஆட ஆரம்பித்தாள். மன்னனின் பக்கத்திலிருந்த மாடலனை நோக்கி, "மாடலா! நான்தான் பாசண்டச் சாத்தன் என்ற தெய்வம். இப்போது தேவந்தி பென்ற இவள்மீது ஆவேசித்திருக்கிறேன். கண்ணகியின்

பிரதிட்டையைப் பார்க்கவந்த பெண்களுள் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்கள் இருவரும், திருவநங்தை யில் அமர்ந்த திருமாலுக்கு அருச்சனை செய்வாரைச் சேர்ந்த குடும்பி ஒருவரின் மகளும் வந்திருக்கின்றனர். மங்கலாதேவியின் கோயிலுக்கு அருகில் உள்ள மலை யில் தடாகங்கள் பல உள்ளன. அவற்றின் நடுவே ஒரு சுனையிருக்கிறது. அந்தச் சுனையில் நீராடியவர்கள் தனது முந்திய பிறவியை உணர்வார்கள். அதனுல் அந்தப் புண் ணிய தீர்த்தத்தைக் கொண்டுவந்தேன். அப்போது மங்கலாதேவியைத் தரிசித்து நின்றுகொண்டிருந்த உன் னைக் கண்டேன், அந்தத் தீர்த்தத்தை உன்னிடமே கொடுத்தேன். அது இப்போதும் உன்னிடத்திலிருக்கிறது. அந்த நீரின் தெய்வத்தன்மை சந்திர சூரியர் உள்ளவரை குறையாது. அந்த நீரை நான் சொன்ன மூன்று சிறுமி களின்மீதும் தெளித்தால் அவர்கள் தமது முன்பிறப்பை உணர்வார்கள்'' என்றது.

தெய்வம் சொன்னதைக் கேட்ட மன்னன் பெருமிதத் துடன் மாடலனின் முகத்தைப் பார்த்தான்! மாடலனும் குறிப்பறிந்து கொண்டான். தெய்வம் கூறியபடியே செய் தான். உடனே அந்தச் சிறுமியர் தனித்தனியே புலம்ப ஆரம்பித்தார்கள். முதலாவது சிறுமி, "நான் பெற்ற மகளே! உன் கணவன் ஒழுக்கம் தவறியவனுக இருந்தான். அதனுல் நான் மிகவும் வாட்டம் அடைந்திருந்தேன். உனது கண வன் வந்ததும், எனக்குத் தெரிவிக்காமல், நீ அவனுடனே மதுரைக்குச் சென்றுவிட்டாய். உற்ருர் உறவினர் இல்லாத மதுரையில், கணவனை இழந்து கைம் பெண்ணுக ஆகி விட் டாயே! என் அருமை மகளே! எனது பெருந்துன்பத்தை நீக்க வருவாயாக," என்று புலம்பினுள்.

இரண்டாம் பெண், "அப்பா! நான் பெற்ற மகனே! நீ உன் அருமை மனைவியை அடியோடு மறந்துவிட்டாய்.

நாடகக் காரியிடம் நாட்டம் கொண்டாய்; மனைவியை நாடி வந்தாய். ஒருவரும் அறியாமல் நடுநிசியில் அவளைத் தனியே அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றுவிட்டாய்! வீண் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையானாய். அது கேட்டு என் நெஞ்சம் வருந்துகிறது! அப்பா மகனே! எழுந்து வந்து பேசமாட்டாயா ?'' என்று புலம்பினாள்.

மூன்றாம் பெண், '' இளவலே! உன்னையும் உன் மனையாட்டியையும் கவுந்தியடிகள் என்னிடம் அடைக்கலமாகத் தந்தாரே! உங்கள் இருவரையும் கண்டு, ஆனந்தம் கொண்டேன். நான் வைகை ஆற்றுக்கு நீராடச் சென்றிருந்த போது நீ அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேள்விப் பட்டேன். உடனே வீட்டுக்கு வந்து பார்த்தேன். உன்னைக் காணவில்லை. என் அருமைப் பிள்ளையே! எங்கே ஒளிந்தாயோ!'' என்று கூறி அரற்றினாள்.

சிறுமியர் புலம்பியதைக் கேட்ட சேர மன்னன் வியப்புற்றான்; மாடலனை நோக்கினான். மாடலன் குறிப்பறிந்து, ''மன்னரே! முதலில் புலம்பிய பெண், முன் பிறவியில் கண்ணகியின் தாயாக இருந்தவள். இரண்டாம் சிறுமி கோவலனின் தாயாக இருந்தவள். மூன்றாம் சிறுமி, இடைச்சியர் தலைவி மாதரி ஆவாள். இம் மூவரும் கோவலன் கண்ணகி இருவர்மேலும் கொண்ட அளவுகடந்த அன்பினால் உயிர் விட்டவர்கள். இப்போது இந்தப் பிறவியை எடுத்திருக்கிறார்கள். கோவலனது தாயும், கண்ணகியின் தாயும் தங்களது பிள்ளைகளின்மேல் வைத்த ஆசையால் மோட்சமடையவில்லை. வஞ்சியில் உள்ள அரட்டன் செட்டிக்கு இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். மாதரி, கண்ணகி கோவலன் இருவர்மேல் வைத்த அன்பால் பக்தி மிகுந்த நற்குடியில் பிறந்தாள். இதனால் முன்பிறவியில் அவரவர்கள் செய்த கருமங்களுக்கு ஏற்றவாறு பயன் அடைகிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது. சேரவேந்தனே! தாங்கள் சிறந்த பேறு

படைத்தீர். காண்பதற்கு அரிய நுண்ணிய விஷயங்களை யெல்லாம் உணர்ந்தீர்கள். தாங்கள் ஆற்று மணலைவிட அதிகநாள் வாழ்வீர்களாக," என்று கூறி வாழ்த்தினன்.

இந்த வரலாற்றைக் கேட்ட சேரன் செங்குட்டுவன் வியப்பும் களிப்பும் கொண்டான். பத்தினியின் கோயி லுக்கு வேண்டிய அளவு நிலங்களை விட்டான். நாள் தோறும் குறைவில்லாமல் சிறப்பாகப் பூசை நடக்கும்படி ஏற்பாடுகள் செய்தான். வேண்டிய அளவு ஆடை ஆபரணங்களை அம்மனுக்குத் தந்தான். அதன்பின் பத்தி னித் தெய்வத்தை மூன்று முறை வலம் வந்து வணங்கி நின்ருன். அப்போது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆரிய மன்னரும் அங்கே குழுமியிருந்தனர். அவர்கள் வீரபத்தினியைப் பணிந்து, அம்மையே! சேரர் பெருமக னுக்குக் காட்சி தந்ததைப்போல எங்கள் நாட்டிற்கும் எழுந் தருளி எங்களுக்கும் காட்சி தரவேண்டும் என்று வேண் டிக் கொண்டார்கள். அப்போது, ' அப்படியே வரம் தந்தேன் ' என்றெரு குரல் வானத்தில் கேட்டது.

அதன் பின்னர் சேரமன்னர்களுடன் தனது யாக சாலைக்குச் சென்ருன். அதன் பிறகு கண்ணகி கோவிலுக் குள் சேரமன்னனின் தம்பி இளங்கோவடிகள் சென்ருர். தாம் சென்ற வரலாற்றை அவர் அழகாக எழுதியிருக்கிருர்.

சிலப்புச் செல்வியின் வரலாற்றைச் சுவைபட எழுதி யிருக்கிருர், உலக மக்களுக்குப் பல நல்லுரைகளை உணர்த்தியிருக்கிருர்.

"மக்களே! துன்பத்தையும் துயரத்தையும் நீக்குங்கள். தெய்வத்தை அறிந்து கொள்ளுங்கள்; தெய்வத்தை அறிந்தவர்களைப் பேணுங்கள்; பொய் கூருதீர்கள். புறம் பேசும் பேச்சையும் ஒழியுங்கள். புலால் உண்பதை நீக்குங்கள்! உயிர்ப்பலி செய்யாதீர்கள். செய்நன்றியை

மறக்காதீர்கள்! தீய நட்பை ஒழியுங்கள்! பொய்ச் சாட்சி சொல்லப் போகாதீர்கள்! தவறிப் போனவர்களையும் அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றுங்கள். இல்லறத்தை நடத்தி இன்பம் எய்துங்கள். கள், களவு, காமம் பொய் பயனில்லாத வார்த்தை ஆகியவற்றைத் தவிருங்கள். அவ்வாறு வாழ்ந்தால் வளமான நில உலகில் சிறப்பாக வாழலாம்" என்று கூறுகிறார்.

சிலம்புச் செல்வியின் வாழ்க்கை மண்ணகத்து மக்களுக்கு நீதி போதிக்கட்டும்.

மாதவி மகள்

காவிரிப்பூம் பட்டினம் சோழநாட்டின் தலை நகராக விளங்கிய பெருமையுடையது. அங்கே, சித்திராபதி என்றொரு பெண்மணி இருந்தாள். சித்திராபதி கணிகையர் குலத்திலே பிறந்தவள். இளமைப் பருவத்தில் மிகவும் அழகுடன் விளங்கினாள். அவளுக்குப் பணத்தில் ஆசை மிகவும் அதிகம். ஏராளமான பொருள் சேர்க்கவேண்டும் என்று அவள் விரும்பினாள். பணமும் அவள் நினைத்தது போலவே நிறையச் சேர்ந்தது. அவள் பணக்காரியாகிப் பலரும் பொறாமைப் படும்படி வாழ்ந்தாள்.

அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது மிகவும் அழகான தோற்றத்துடன் விளங்கியது. அதன் அழகிலே சித்திராபதி மிகவும் மகிழ்ச்சியடைந்தாள் அக்குழந்தையை மிகவும் அன்பாக வளர்த்து வந்தாள். அக்குழந்தையின் பெயர் மாதவி.

கணிகையர் குலத்தினர் ஆடல் பாடல்களில் பயிற்சியுடையவர்கள். ஆடியும் பாடியும் பிறரை அவர்கள் மகிழ்விப்பார்கள் அதனால், அவர்கட்குப் பொன்னும் பொருளும் கணக்கின்றி வந்து சேரும். அவர்கள் ஆடலைக்கண்டு மகிழும் செல்வர்கள் அவர்கட்குப் பல பரிசுகளை வழங்குவார்கள், ஆடற்கலையில் தேர்ச்சி பெற்ற பெண்களின் புகழும் பெருகும்,

தன் குல வழக்கப்படி மாதவிக்கும் ஆடல் பாடல்களைக் கற்பிக்க வேண்டும் என்று சித்திராபதி எண்ணினாள். மாதவிக்கு ஐந்து வயது தொடங்கியதும் தன் மகளின் புத்திக் கூர்மையைக் கண்டு சித்திராபதி மிகவும் அகமகிழ்ந்தாள்.

அவளுக்கு நல்ல முறையில் ஆடல் பாடல்களைக் கற்பிக்கத் தகுந்த ஆசிரியரைத் தேடினாள். அத்தகைய ஆசிரியரும் கிடைத்தார்; மாதவியின் பயிற்சியும் தொடங்கிற்று.

மாதவி மிகவும் சுறுசுறுப்பான சிறுமி. எதனையும் எளிதில் கற்றுக்கொள்ளக் கூடியவள். அதனால், ஆசிரியர் கற்பித்ததை விரைவில் கற்றுக்கொண்டு வந்தாள். திறமையான மாணவரைக் கண்டால் ஆசிரியர்கட்குப் பெரிதும் மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பு. அவ்வாறே, மாதவியின் ஆசிரியரும் தம் மாணவியிடம் மிகவும் அன்பு உடையவரானார். மாதவிக்கு ஆடற்கலையின் நுட்பங்களையெல்லாம் போதித்தார். பாடல் துறையின் பண் வகைகளையெல்லாம் அறிவுறுத்தினார். ஆசிரியரின் போதனைகள் மாதவியின் உள்ளத்தில் நன்றாகப் பதிந்தன. அவள் மிக விரைவாகக் கலையிலே தேர்ச்சிபெற்று விளங்கினாள்.

மாதவிக்குப் பன்னிரண்டாம் வயது வந்தது. அப்போது அவள் ஆடற்கலையில் இணையற்ற திறனுடையவளாக விளங்கினாள். பாடல்வல்ல இசையரசியாக இலங்கினாள். மாதவியின் அழகும் அவள் வயதைப்போலவே வளர்ந்தது.

அக்காலத்தில் கவித்திறமையை அரங்கேற்றுவதற்கு அரச சபையே உரிய இடமாகத் திகழ்ந்தது. தாம் கற்ற கவித்திறமையை அரசவையிற்காட்டி அரசனிடம் சிறப்புப் பெறுவதையே அனைவரும் விரும்பினர். புலவர்கள் தங்கள் புலமை விளங்க அரசனைப் பாடிப் பரிசு பெறுவர். கலைஞர்கள் தத்தம் கலை நுணுக்கங்களை மன்னன் சபையிலேகாட்டி மதிப்புப் பெறுவர்.

அப்போது, காவிரிப்பூம் பட்டினத்திலே இருந்து அரசாண்ட சோழமன்னன் சிறந்த கல்விமான். அவன் சபையிலே மாதவியின் நடன அரங்கேற்றத்தை நடத்த வேண்டுமென்பது சித்திராபதியின் ஆசை. அரசனிடம் சென்று

அவள் தன் கருத்தை வெளியிட்டாள். அவ்வரசனும் மகிழ்வுடன் அநுமதி கொடுத்தான். ஆடல் நடைபெறுவதற்குரிய நாளும் குறிக்கப்பட்டது.

குறித்த நாளில், மாதவி, அரச சபையிலே வந்து அருமையாக நடனம் செய்தாள். அவள் ஆட்டத்தின் அழகினைச் சபையினர் வியந்து பாராட்டினர். அவள் ஆட்டத்தில் மனத்தைப் பறிகொடுத்தவராக அனைவரும் மெய்ம்மறந்திருந்தனர். ஆடல் நின்றதுந்தான் அவர்கள் உணர்வு பெற்றனர். மாதவியின் இசை ஞானத்தையும், நாட்டிய மேன்மையையும் கண்டுகளித்த சோழ மன்னன், மாதவிக்குத் தனது பசும்பொன் மாலையையும், ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன்னையும் பரிசாகக் கொடுத்தான். சித்திராபதி பெரிதும் மகிழ்ந்தாள். மன்னன் தந்த மாலையை வயந்தமாலை என்னுந் தோழியிடங் கொடுத்தாள். "நகரத்தின் பெரிய தெருவில் இதனை விலை கூறி வா. ஆயிரம் பொற் கழஞ்சு கொடுத்து இதனை வாங்குபவர், மாதவியின் கணவனாகும் உரிமையுடையர் என்றுங்கூறு" என்று கூறினாள்.

வயந்தமாலை, மாலையைக் கடைத்தெருவில் விலை கூறிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் கோவலன் எதிர்பாராதவிதமாக அங்கே வந்தான். அவன், வயந்தமாலை மாலை விற்பதைக் கண்டான். அந்த மாலையைக் கண்டதும் அவனுக்கு மாதவியின் நினைவு வந்தது. ஏற்கனவே மாதவியின் ஆடல் பாடல்களில் தனது மனதைப் பறிகொடுத்திருந்தான். எனவே, அவளது அன்பைப் பெறுவதற்காக, மாலையின் அதிக விலையைக் கூடப் பொருட் படுத்தவில்லை. ஆயிரம் பொற்கழஞ்சு கொடுத்து அந்த மாலையை வாங்கினான். வயந்தமாலை, அவனை, மாதவியின் வீட்டுக்கு அழைத்துச்சென்றாள். கோவலனைக் கண்ட மாதவி மனமகிழ்ந்தாள்; அவனை அன்புடன் வரவேற்றாள். கோவலனும் அவளது

அன்புக்கு அடிமையானான். மாதவியிடமே தங்கிவிட்டான். அவர்கள் இருவரும் அன்புடன் வாழ்ந்தார்கள்.

மணிமேகலையின் தோற்றம்

கோவலனும் மாதவியும் அன்பாக வாழ்க்கை நடத்தி வரும்போது, மாதவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குக் கோவலன் தன் குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரை வைத்து, மணிமேகலை என்றழைத்தான். அந்தக் குழந்தையிடம் அவன் மிகவும் அன்பு செலுத்தினான். அக்குழந்தை, தனது இணையற்ற அழகாலும் முகப் பொலிவாலும் பார்த்தவர்களை எல்லாம் வயப்படுத்தியது. மாதவியும், அவளது தாயான சித்திராபதியும் குழந்தையைக் கண்டு மகிழ்ந்தார்கள். அதனைச் செல்வமாக வளர்த்தார்கள்.

மாதவி, தன் குலச் செயல்களில் வெறுப்புக் கொண்டவள். ஒருவனையே மணந்து ஒழுக்கத்தோடு வாழ வேண்டும் என்பதுதான் அவள் எண்ணம். பொருளைவிட ஒழுக்கம்தான் சிறந்தது என்பது, அவளது முடிபு. அதனால், தன் மகளைத் தூய நெறியிலே வளர்த்து வந்தாள். அப்போதைக்கப்போது, தன் மகளுக்கு நல்ல பொருள்களைப் போதித்து வந்தாள். மனத்தைத் தூய பாதையில் செலுத்தத் தூண்டினாள். ஏற்கனவே, நற்குணங்களுள்ள மணிமேகலை, தன் தாயின் கண்டிப்பினால் மேலும் மேன்மையடைந்தாள். அவளது கல்வியறிவு நாளுக்கு நாள் வளர்ந்தது. பல நூல்களைக் கற்றாள். அவளிடம் அறிவும் பண்பும் குடிகொண்டன. பெற்றவர்களும் மற்றவர்களும் பேரானந்தம் அடைந்தனர்.

கோவலன் பிரிவு

அக் காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் ஒவ்வொரு வருடமும் இந்திர விழாக் கொண்டாடுவார்கள். அந்த விழா மிகச் சிறப்பாக நடக்கும். அவ்விழாவின் கடைசிநாளில் மக்கள் கடலில் குளிப்பார்கள்.

மற்றவர்களைப் போலவே, கோவலனும் மாதவியும் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினுர்கள். அதன்பின் கடற்கரைக்குச் சென்ருர்கள். அங்கே, மாதவி, யாழ் எடுத்துச் சென்றிருந்தாள். கோவலன் அதை எடுத்து வாசித்தான். அவன் பாடிய பாடல் மாதவிக்குத் தவருன கருத்தைத் தந்தது. கோவலன், வேறு யாரோ ஒரு பெண்ணிடம் அன்பு கொண்டு விட்டதாக மாதவி எண்ணினுள். யாழை அவனிடமிருந்து வாங்கினுள்; தானும் பாடினுள். அது கேட்ட கோவலன் மாதவியைச் சந்தேகப்பட்டான். அவள் வேறு யாரோ ஒருவனிடம் அன்பு கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டான். அந்த இடத்தை விட்டு உடனே சென்று விட்டான். நேரே கண்ணகியை நாடி வந்தான்.

கோவலனைக் கண்ட கண்ணகி அதிசயப்பட்டாள். தன் கணவனின் வருகைகண்டு பூரித்தாள். கோவலன் அன்று இரவே அவளையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குச் செல்லத் தீர்மானித்தான். அங்குச் சென்று, ஏதாவது வியாபாரம் செய்து மேன்மைபடையலாம் என்று எண்ணினுன். நள்ளிரவில், ஒருவருக்குந் தெரியாமல், இருவரும் மதுரைக்குப் புறப்பட்டார்கள்.

மதுரைக்குச் செல்லும் வழியில் கவுந்தியம்மையைக் கண்டார்கள். அவரும், இவர்களுடன் மதுரைக்குச் செல்லத் தீர்மானித்தார். மூவரும் பேசிக்கொண்டே நெடுந்தூரம் நடந்தனர். சில இடங்களில் களைப்பாற்றிக் கொண்டார்கள். சில நாட்களில் மதுரையை அடைந்தார்கள்.

அங்கே, மாதரி என்னும் இடைச்சியின் வீட்டில், கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலம் தந்துவிட்டுக் கவுந்தியம்மை சென்றுவிட்டார்.

கண்ணகியின் காற்சிலம்பில் ஒன்றைப் பெற்றுக்கொண்டான் கோவலன், அதை விற்றுவர வெளியே புறப்பட்டான். வழியில், பொற்கொல்லன் ஒருவனைச் சந்தித்தான். அவனது சதியால், கோவலன் திருடன் என்று பாண்டிய மன்னனால் எண்ணப்பட்டான். அவனைக் கொலை செய்தான் மன்னன். அதை அறிந்த கண்ணகி அழுது புலம்பினாள். தன் கணவன் கள்வனில்லை என்று நிரூபித்தாள். தன் தவறை உணர்ந்த பாண்டிய மன்னன் உயிர் துறந்தான். அவனையடுத்துப் பாண்டிமாதேவியும் உயிர் விட்டாள். கண்ணகி மதுரை நகரைத் தீக்கிரையாக்கினாள்.

மாதவியின் துறவு

இந்தச் செய்திகளெல்லாம் மாதவிக்குத் தெரிந்தன. அவள் மனம் துடித்தது. விம்மி விம்மி அழுதாள். அவளுக்கு வாழ்க்கையிலேயே வெறுப்புத் தோன்றிவிட்டது. கோவல்ன் தனக்குக் கொடுத்த பொருள்களை எல்லாம் தானம் செய்தாள்; துறவு பூண்டாள். தன் மகள் மணிமேகலையுடன் பௌத்த மடம் சேர்ந்தாள். அங்கே நடக்கும் அறவுரைகளிலே அவள் மனம் சென்றது. மணிமேகலையும் அதில் ஈடுபட்டாள்.

காவிரிப்பூம் பட்டினத்திலே, வழக்கம் போல் இந்திர விழா சிறப்பாக நடைபெற வேண்டும் என்று பறையறிவித்தார்கள். வழக்கப்படி, இந்திர விழாவுக்குச் செல்ல வேண்டிய மாதவியும், மணிமேகலையும் இம் முறை செல்லவில்லை. அதைக் கண்ட சித்திராபதி, வயந்த மாலையை அழைத்தாள்: "மாதவி விழாவுக்கு வராததால் மக்கள் பழிச் சொல் சொல்கிறார்கள்: இதைப் போய் மாதவியிடம்

சொல்லி வா'' என்று அவளை அனுப்பினாள். வயந்தமாலை, மாதவியும் மணிமேகலையும் இருக்கும் மலர் மண்டபத்தை நாடிச் சென்றாள். மாதவியைக் கண்டாள்; அவளது மேனி வாடியிருக்க கண்டாள். உள்ளம் வருந்தினாள். "மாதவி, இந்திர விழாவுக்கு ஆட வராததால் மக்கள் பழிச்சொல் பேசுகிறார்கள்; நீ வருவதற் கென்ன?'' என்றாள். அதைக் கேட்ட மாதவி அவளிடம் பின்வருமாறு சொன்னாள்:

"அன்புள்ள தோழியே! என் காதலனாகிய கோவலன் கொலை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டேன். இருந்தும் என் உயிரைப் போக்கிக் கொள்ளாமல் இருந்துவிட்டேன். உலகத்தில் மூன்று வகைப் பத்தினிப் பெண்கள் இருக்கிறார்கள். தன் கணவன் இறந்தவுடன் மனைவியின் உயிரும் தானே பிரிந்துவிடும்; இது முதல் வகை. சிலர் கணவன் மடிந்தவுடனே, தாமும் நெருப்பிலே விழுந்து உயிர் விடுவார்கள்; இது இரண்டாம் வகை. மூன்றும் வகைப் பத்தினிப் பெண்கள், தம் கணவனோடு மறுமையிலும் சேர்ந்து வாழ்வதற்காக நோன்பு இயற்றுவார்கள். இம் மூன்று வகையிலும் சேராமல், தனித்துச் சிறப்பாக நின்றாள் கண்ணகி. தன் கணவனை அநியாயமாகக் கொலை செய்த, மன்னனை உணரச் செய்தாள். அவனது நகரை எரித்தாள். அத்தகைய மாபெரும் பத்தினியின் மகள் மணிமேகலையாவாள். அதனால், மணிமேகலையைத் தவநெறியிலே செலுத்தத்தான் என்னால் முடியும். தீய நெறியில் அவளைச் செலுத்தமாட்டேன்.

"இது தவிர, நான் அறவழி செல்லும் அறவண அடிகளைக் கண்டேன். அவரிடம் அறவுரை கேட்டேன். அவர் எனக்கு ஐந்துவகைச் சீலத்தை விளக்கினார். இனி நான் இந்திர விழாவிற்கு ஆட வரமாட்டேன். மணிமேகலையும் வரமாட்டாள். நமது தோழிமார்களுக்கும், என் தாயாருக்கும் இதைத் தெரிவித்துவிடு'' என்று, சொல்லி முடித்தாள்.

மாதவியின் உரையைக் கேட்ட வயந்தமாலை மனம் வருந்தினாள். அரிய பொருளைக் கடலிலே போட்டு விட்டதாக எண்ணித் துயர்ப்பட்டாள். தன் தலைவி சித்திராபதியை நாடிச் சென்றாள்.

மணிமேகலை உபவனம் செல்லல்

மாதவி, வயந்தமாலையிடம் சொன்ன நிகழ்ச்சிகளை மணிமேகலையும் கேட்டுக் கொண்டிருந்தாள். தன் தந்தைக்கும், தாயாகிய கண்ணகிக்கும் நேர்ந்த துன்பத்தைத் தெரிந்து கொண்டாள். அவள் கண்களிலிருந்து நீர் பெருகியது. அந்தக் கண்ணீர், அவள் தொடுத்துக் கொண்டிருந்த மலர் மாலையை நனைத்து விட்டது. அதைக் கண்ட மாதவி, அவளது கண்ணீரைத் துடைத்தாள். மணிமேகலையை நோக்கி, "அன்புள்ள குழந்தையே! உன் கண்ணீரால் இந்த மாலையின் புனிதத்தன்மை கெட்டுவிட்டது. இதைப் புத்த பெருமானுக்கு அணிவிக்கக் கூடாது. நீ இப்பொழுதே சென்று புதிய மலர்களைப் பறித்துவா!" என்று கூறினாள். மணிமேகலை, சம்மதித்துப் புறப்பட்டாள். அவள் அருகிலே இருந்த சுதமதி, அவளைத் தனியே அனுப்பக் கூடாது என்று சொல்லிவிட்டாள். கன்னிப் பெண்கள் தனிமையில் மலர் பறிக்கச் சென்றால் தீங்கு ஏற்படும் என்று விளக்கினாள். எனவே, தானும் மணிமேகலையுடன் மலர்பறிக்கச் செல்வதாகச் சொன்னாள்.

மணிமேகலையும் சுதமதியும் மலர் பறிக்க, வீதி வழியே சென்றார்கள். மணிமேகலையைப் பார்த்த மக்கள் பலவிதமாகப் பேசினார்கள்.

"இந்த பெண் யார்? இவ்வளவு அழகுள்ள பெண்ணை இதுவரை பார்த்ததே இல்லையே? இவள் எவ்வளவு அடக்க

மாகச் செல்கிருள்? அழகு நிறைந்த இந்தப் பெண், இவ்வளவு சிறிய வயதிலேயே ஏன் துறவு பூண்டாள்? இவளுக்குப் பெற்ருேர்கள் இருக்கிருர்களா? இல்லையா?'' என்றெல்லாம் பேசினுர்கள். இவை ஒன்றையும் மணிமேகலை பொருட்படுத்தவில்லை.

அக் காவிரிப்பூம்பட்டினத்தில் உபவனம் என்ருெரு பூங்கா இருந்தது. அது சிறப்பு மிகுந்த சோலை. கடற்கரையைப் போல அதுவும் ஒரு பொது இடமாக விளங்கியது. சிலர், வேடிக்கை விளையாட்டுகளைக் காண அங்கே செல்வார்கள். சிலர், தின்பண்டங்கள் செய்து அங்கே கொண்டு சென்று உண்பார்கள். சிலர், அங்கே சென்று புதுப்புது நூல்களைப் படிப்பார்கள். இன்னும் சிலர் ஓவியம் தீட்டுவார்கள். மற்றும் சிலர், மாலைகளைக் கட்டி மகிழ்வார்கள். பலர், பாமாலை பாடிப் பரவசப்படுவார்கள். மனத்திலே எவ்வளவு கவலை இருந்தாலும். அங்கே சென்ருல் நீங்கிவிடும்.

அங்கே ஒரு பளிங்கு மண்டபம் இருந்தது. அது எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியது. அந்தச் சோலைக்குச் செல்பவர்கள், பளிங்கு மண்டபத்தைப் பார்க்காமல் திரும்பமாட்டார்கள். அதற்குள்ளே இருப்பவர்கள் எவ்வளவு சத்தம்போட்டுப் பாடினுலும் வெளியே இருப்பவர்களுக்குச் சிறிதும் கேட்காது. உருவம் மட்டும் வெளியே தெரியும். அந்த மண்டபத்தில் தாமரைப் பீடம் ஒன்று இருந்தது. அது மாணிக்கம்போல் ஒளி வீசியது. அரும்புகளை அந்தப் பீடத்தில் வைத்தவுடன், அவை அழகாக மலர்ந்துவிடும். சில பேர், தாம் வணங்கும் தெய்வத்தை எண்ணி, அந்தப் பீடத்தில் மலர் வைப்பர். அவை இறைவனின் திருவடிகளை அடையும். ஒருவித எண்ணமும் இல்லாமல் வைக்கும் மலர்கள் அங்கேயே தங்கிவிடும்.

உபவனத்தில் உதயகுமரன்

அத்தகைய உபவனத்திற்கு மணிமேகலையும் சுதமதியும் சென்றனர். அங்கே இருந்த பொருள்கள் எல்லாம் அவர்களுக்கு ஆனந்தம் தந்தன. புத்தம் புதிய மலர்களைப் பறித்துக் குடலையில் நிறைத்தனர். மலர் பறித்து முடிந்தவுடன் அந்த வனத்தைச் சுற்றிப் பார்க்க எண்ணினர்கள். தடாகங்களில் தாமரை, அல்லி முதலிய மலர்கள் மலர்ந்திருந்தன. தாமரைகளில் அன்னப் பறவைகள் அமர்ந்திருந்தன. தேனீக்கள் மலர்களில் உள்ள தேனை உண்டன, உண்ட களிப்பிலே இசைபாட ஆரம்பித்தன. மயில்கள் ஒரு புறத்தில் ஆடின. மற்ருெரு புறம் குயில்கள் பாடின. இலைகளும் மலர்களும் வானவில்லைப் போல, மரங்களை அழகு படுத்தின. கனிந்த பழத்திலிருந்து தேன் பெருகியது. மலர்கள் எங்கும் உதிர்ந்தன. அதனுல், நடப்பவர்களின் கால்கள் கற்களிலிருந்து காப்பாற்றப்பட்டன. மணிமேகலையும் சுதமதியும் அவற்றைப் பார்த்து மகிழ்ந்தார்கள். ஆனுல், அதிக நேரம் அவர்கள் அந்த இன்பத்திலே இருக்க முடியவில்லை; அதற்குத் தடையாக ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது.

அந்நாட்டுச் சோழ மன்னனுக்கு உதய குமரன் என்னும் மகன் ஒருவன் இருந்தான். அவன் மணிமேகலையின் அழகில் மயங்கிப் போயிருந்தான். அவளை மணம் செய்து கொள்ளவேண்டும் என்று எண்ணினுன். அவள் பௌத்த மடத்தில் வாழ்ந்து வருவது அவனுக்குத் தெரியும். அவள் எப்பொழுது வெளியே வருவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான். மணிமேகலை அன்று உபவனத்திற்கு வந்த செய்தியை எட்டிகுமரன் என்பவனுல் தெரிந்து கொண்டான். உடனே தனது தேரில் ஏறி உபவனம் வந்தான். அவனது தேரின் மணியோசை மணிமேகலையின் காதில் விழுந்தது. உதயகுமரன்தான் வந்திருக்கிறுன் என்ப

தைத் தெரிந்துகொண்டாள். அவளுக்குப் பயம் ஏற்பட்டது. அவனால் தனக்குக் கெடுதி நேருமோ என்று அஞ்சினாள். அவளது நா எழவில்லை, தடுமாறினாள். சுதமதியை அழைத்து "அன்புள்ள தோழியே! நான் உதய குமரனின் தேரோசையைக் கேட்டேன். நாம் இங்கு வந்ததைத் தெரிந்துதான் அவன் இங்கே வந்திருக்கிறான் போலும். நாம் பெண்களாயிற்றே! அவனிடமிருந்து எப்படித் தப்புவது? இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வது?" என்று கேட்டாள். சுதமதிக்கு ஒரு யோசனை உதித்தது. உடனே மணிமேகலையைப் பளிங்கு அறைக்குள் விட்டாள். கதவை அடைத்துக் கொள்ளச் செய்தாள். தான் சிறிது தொலைவில் நின்றாள். அச்சமயத்திலே உதய குமரன் அங்கு வந்து சேர்ந்தான். சுற்றிலும் பார்த்தான். மணிமேகலையைக் காணவில்லை. சுதமதி மட்டும் இருப்பதைக் கண்டான். எட்டிகுமரன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்று எண்ணினான், பின்பு, சுதமதி மணிமேகலையை. ஒளித்து வைத்திருப்பாள் என்று முடிவு கட்டினான். சுதமதியை அண்டி, " மணிமேகலையும் நீயும் வந்தது எனக்குத் தெரியும்! அவள் எங்கே சென்றாள்? நீ மட்டும் தனியே இருப்பதற்குக் காரணம் என்ன? அவள் என்னை மணந்து கொள்வாளா?" என்று வரிசையாகக் கேள்விகளைக் கேட்டான்.

சுதமதி, அவன் சொன்ன சொற்கள் அனைத்தையும் பொறுமையாகக் கேட்டாள். அவளுக்கு, என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. பின்னர், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "நீர் மன்னரின் மைந்தர்; உயர்ந்த குலத்தில் தோன்றியவர்: கல்வி அறிவு உடையவர். உமக்குத் தெரியாதது இல்லை. உமக்கு ஏற்ற ஒருத்தியை மணம் செய்து கொள்வதுதான் உத்தமம். இல் வாழ்க்கையில் விருப்பமில்லாத ஒருத்தியை வற்புறுத்துவதால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. மேலும், இந்த உடலும் உலகமும்

அழிந்துபோகக்கூடியவை. இளமை நிலைக்காதது" என்று எடுத்துச் சொன்னாள். உதயகுமரன் அதைக்கேட்க வில்லை. அவன் எண்ணம் மணிமேகலையைக்காண்பதிலேயே இருந்தது. தனது கண்களைச் சுழற்றினான். அருகிலிருந்த பளிங்கு அறையில் மணிமேகலையின் உருவம் தெரிந்தது. அந்த அறையின் வாயிலைக் கண்டு பிடிக்க முயன்றான்; முடியவில்லை. பின்னர், சுதமதியிடம், "சுதமதியே! மணிமேகலை அழகானவள் என்று பலர் கூறினார்கள். அவர்கள் கூறியதைவிட அவள் அழகாக இருக்கிறாள். அவளுக்கு என்னைப்போலச் சிறந்தவன் ஒருவன் மணாளனாகக் கிடைக்கமாட்டான். அவள் எனக்கு வாழ்க்கைப்பட்டால் அரசியாக வாழலாம். இதை விட மேலான ஒன்று வேறென்ன இருக்கமுடியும்? இவள் ஏன் தனது காலத்தை வீணாக்குகிறாள்? நீ தான் இவளுக்குப் புத்திசொல்ல வேண்டும்! எப்படியாவது அவள் என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி செய்ய வேண்டும்" என்று சொன்னான்.

அதைக் கேட்ட சுதமதி, "ஐயா! என் தலைவி மணிமேகலை, திருமணத்தை வெறுக்கிறாள். உலகத்திற்குத் தொண்டு செய்யவேண்டும் என்பது அவளது எண்ணம். உயர்ந்த எண்ணம், உயர்ந்த செயல்கள் உடையவள் உண்மைக்குப் புறம்பாக அவள் நடக்கமாட்டாள். தவநெறியில் வாழ எண்ணம் கொண்டவள். குற்றம் செய்தவர்களைச் சபிக்கும் திறமையும் அவளுக்கிருக்கிறது. உம்மிடத்திலும் கூட அவளது நல்ல மனம் செல்லாது. உம்முயற்சி வீண்தான். ஆதலால் அவள் மீது வைத்த ஆசையை விட்டு விடுவதுதான் மேல்" என்று சொன்னாள்.

உதயகுமரன் அதைக் கேட்கவில்லை. தாசி குலத்தில் பிறந்தவள் கற்புடையவளாக இருக்க முடியாது என்று வாதாடினான். சுதமதியை அழைத்து, "சுதமதி! மணிமேகலை

செய்வதெல்லாம் ஏமாற்று வேலை! அவள் எத்தனை நாள்தான் துறவியாக இருக்கிருள் பார்ப்போம்! கட்டுக் கதைகளை எல்லாம் நான் நம்பமாட்டேன். இன்னும் சில நாட்கள் பொறுத்திருப்பேன். நீ அவளுக்கு எப்படியாவது புத்தி புகட்டு. இளவரசன் எண்ணினால் ஆகாத செயல் உண்டா? உன்னால் முடியாவிட்டால் சொல்! சித்திரா பதியைக்கொண்டு அவளைத் திருமணம் செய்து கொள்ளு கிறேன்" என்று சொல்லிவிட்டுத்,தான் வந்த வழியே சென்று விட்டான்.

மணி பல்லவத் தீவு

மணிமேகலை பளிங்கு மண்டபத்திலிருந்து வெளியே வந்தாள். சுதமதியிடம், "அன்புள்ள தோழியே! உதய குமரன் என்னை எவ்வளவு இழிவாகப் பேசினன்? அப்படி யிருந்தும், எதனாலோ அவன்மேல் எனக்கு அன்பு ஏற்படு கிறதே! அதுதான் எனக்கு அதிசயமாக இருக்கிறது" என்று சொன்னாள்.

அவள் வெளியே வந்தது மாலைப்பொழுது! சிறிது நேரத்தில் முழுமதி வந்துவிட்டது. இந்திர விழாவைக் காண வந்த மணிமேகலா தெய்வம் அந்தப் பூங்காவிற்கு வந்தது. அவர்களுக்குத் தெரிந்த ஒரு பெண்ணின் உருவம்கொண்டு அவர்கள் முன் வந்து நின்றது. அவர்களை அழைத்து, "நீங் கள் ஏன் இங்கே நிற்கிறீர்கள்" என்று கேட்டது. சுதமதி, உதய குமரன் வந்த செய்தியை ஆதியோடந்தமாகச் சொன் னாள். அதைக் கேட்ட மணிமேகலா தெய்வம், "அவன் உபவனத்திற்கு வெளியே நின்று கொண்டிருக்கிறான். அத னால் நீங்கள் இப்போது வெளியே போகக் கூடாது. பக்கத் திலே இருக்கும் சக்கரவாளக் கோட்டத்திலே இந்த இர வைக் கழியுங்கள். அங்கே உங்களுக்கு ஒரு துன்பமும்

ஏற்படாது" என்று சொல்லியது. அதைக் கேட்டுக்கொண் டிருக்கும் போதே, சுதமதி தன்னையறியாமல் தூக்கத்தில் ஆழ்ந்தாள். உடனே மணிமேகலா தெய்வம் தனது மந்திர சக்தியால் மணிமேகலையை மயக்கமடையச் செய்தது. அவளை மணிபல்லவத் தீவுக்குக் கொண்டு சென்றது. அன்று இரவே, உதய குமரனின் கனவில் தோன்றி அவனுக் குச் சில நீதிகளை உரைத்தது. அதன்பின் சுதமதி தூங்கிக் கொண்டிருந்த உபவனத்திற்குச் சென்றது. அவளை எழுப்பி, "நான் மணிமேகலா தெய்வம்; இந்திர விழாக் காண வந் தேன். மணிமேகலைக்குப் புத்த பெருமானின் அறநெறியிற் செல்லும் காலம் வந்துவிட்டது. அதனால், நான் அவளை எடுத்துச்சென்று மணிபல்லவத்தில் வைத்தேன். அவள் தனது பழம் பிறப்பை உணர்ந்து, ஏழாவது நாளில் இங்கு வருவாள். அவள் இங்கு திரும்பும் நாளில் பற்பல அற் புதங்கள் நிகழும். நான் வந்ததையும், மணிமேகலை நல்ல வழியிற் சென்றதையும் மாதவிக்குச் சொல்லுக" என்று சொல்லி மறைந்தது. சுதமதி இரவு முழுதும் சக்கரவாளக் கோட்டத்தில் இருந்தாள். காலையில்தான் வெளியே வந் தாள். மாதவியைக் கண்டாள். முதல் நாள் இரவில் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னாள். மாதவி தன் மகளின் பிரிவால் வாடினாள்.

மணிபல்லவத் தீவில் கொண்டு விடப்பட்ட மணிமேகலை கண் விழித்தாள். அப்போது சூரியன் உதயமானான். அங்கே பவளமும் முத்தும் பரவிக் கிடந்தன. அந்த இடமே அவ ளுக்குப் புதிதாகத் தோன்றியது. சுதமதியைத் தேடினாள். அவள் இல்லை. தனியாக இருந்த மணிமேகலைக்கு அச்சம் ஏற்பட்டது. வருத்தத்துடன், 'சுதமதி! நீ, என்னைத் தனியே விட்டுச்சென்றது நியாயம? என்னைத் தவிக்க விட எண்ணி விளையாடுகிருயா? எனக்குப் பயமாக இருக் கிறது! வந்து விடு" என்று கத்தினாள். தன் குரலைத்தான்

கேட்டாள் மணிமேகலை; சுதமதியின் குரலைக் கேட்க வில்லை.

மணிமேகலை தனது பெற்றோரை நினைத்துக்கொண் டாள். அந்தத் துயரத்திலே அழுதுகொண்டே சிறிது தூரம் சென்றாள். தெய்வத்தன்மை பொருந்திய புத்த பீடிகை ஒன்று அவள் முன் தோன்றியது. அதைக் கண்டாள் மணி மேகலை. அவளை அறியாமலே அவளது கைகள் தலைமேல் குவிந்தன. பக்தி சுரந்தது. அந்தப் பீடிகையை மூன்று முறை சுற்றி வந்து வணங்கினாள். அது அவளுடைய முந் திய பிறப்பை உணர்த்தியது. "மணிமேகலை! நீ முந்திய பிறவியில் இரவிவன்மனுக்கும் அமுதபதிக்கும் பெண்ணாகப் பிறந்தாய். உனது பெயர் இலக்குமி. நீ இராகுலன் என் பவனை மணந்தாய். அவன் திட்டிவிடன் என்பவனால் உயி ரிழந்தான். மற்றைய செய்திகளை மணிமேகலா தெய்வம் சொல்லும்" என்று புத்த பீடிகை உணர்த்தியது.

அதன் பின்னர், மணிமேகலா தெய்வம் அங்குத்தோன்றி யது. அது, மணிமேகலையை நோக்கி, "முற்பிறவியில் உதய குமரன் உனக்குக் கணவனாக இருந்தான். அதனாலேதான் உனக்கு அவனிடம் அன்பு சென்றது. அந்த ஆசையை ஒழிக்கவே நான் உன்னை இந்தத் தீவுக்கு அழைத்து வந் தேன்" என்று தெரிவித்தது. இறுதியில், அந்தத் தெய்வம், மணிமேகலைக்கு, வேண்டியபோது நினைத்த உருவத்தை அடைய ஒரு மந்திரமும், ஆகாய வழியாகச் செல்ல ஒரு மந்திரமும், பசியைத் தொலைக்க ஒரு மந்திரமும், ஆக மூன்று மந்திரங்களைச் சொல்லி மறைந்தது.

அமுத சுரபியை அடைதல்

மணிமேகலை தனக்கு ஏற்பட்ட நன்மைகளையெல்லாம் எண்ணிப்பார்த்தாள். அவை கனவா, நனவா என்ற சந்தே

கம் ஏற்பட்டுவிட்டது. தனது பெற்ருேரின் புண்ணியம்தான் அதற்குக் காரணம் என்று நினைத்தாள். அவர்களைத் துதித்தாள். சிறிது தூரம நடந்து சென்ருள், அங்கே, ஒரு பூஞ்சோலை இருந்தது. அதனுள்ளே நுழைந்தாள். அங்கு இயற்கை அழகுகள் காணப்பட்டன. பச்சைப்புல் தரை எங்கும் பரந்திருந்தது. கடலிலிருந்து நெருப்புப் பந்து எழுவதுபோல் சூரியன் எழுந்தான். காய்களும் கனிகளும் பொலபொலவென உதிர்ந்தன. குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. மணிமேகலை, இயற்கை அழகில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அவள் முன்னுல் தீவ திலகை என்னும் பெண் தோன்றிஞள். அவள், மணிமேகலையைப் பார்த்து, 'யார்' என்று வினவிஞள். மணிமேகலை தனது வரலாற்றைச் சொன்ஞள். மணிமேகலா தெய்வம் தன்னை அத்திவிற்கு அழைத்து வந்த செய்தியையும் சொன்ஞள். தீவதிலகையை நோக்கி 'நீ யார்' என்று வினவிஞள் மணிமேகலை.

"நான் இந்திரன் ஏவலால் அனுப்பப்பட்டவள். இங்குள்ள புத்த பீடிகையைக் காத்து வருகிறேன். என் பெயர் தீவதிலகை. புத்த நெறியில் செல்பவர்கள் தான் இப் பீடிகையைக் காண முடியும். அப்படிக் கண்டவர்கள் தமது பழம் பிறப்பை உணருவார்கள். நீ, அவ்வாறு உணர்ந்தமையால் சிறந்தவள். இந்தப் பீடிகைக்கு எதிரே கோமுகி என்னும் பொய்கை இருக்கிறது. அதனுள்ளே அமுத சுரபி என்னும் அட்சய பாத்திரம் இருக்கிறது. அது ஆண்டுதோறும் வைகாசி மாதம் பௌர்ணமியன்று தோன்றும். இன்று அந்த நாள் தான்! அந்தப் பாத்திரம் தோன்றவேண்டிய நேரமும் இப்பொழுதுதான். இப்பொழுது அது உனது கையில் வந்து சேரும்போலிருக்கிறது. அதில், ஒருமுறை இடப்படுகிற உணவு எப்பொழுதும் குறையவே குறையாது. எடுக்க எடுக்க வளர்ந்துகொண்டே இருக்கும். அதன் முழு வரலாற்

றையும் அறவண அடிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்" என்று சொன்னாள். அது கேட்ட மணிமேகலை பீடிகையைத் தொழுதாள். கோமுகியை வலஞ்செய்து வந்து நின்றாள். உடனே, அந்தப் பாத்திரம் பொய்கையிலிருந்து வெளியே வந்தது. மணிமேகலையின் கையை அடைந்தது. அவள் அளவில்லாத மகிழ்ச்சி யடைந்தாள். புத்த தேவரைப் பலவாறு துதித்தாள். அப்போது மணிமேகலைக்குத் தீவதிலகை பசியின் கொடுமையை எடுத்துரைத்தாள். அத்துடன் அந்தப் பசிப்பிணியை நீக்குவோரது பெருமையையும் எடுத்துச் சொன்னாள். அதைக் கேட்ட மணிமேகலை, ஏழை எளியவரின் பசியைத் தீர்க்க, எந்தவித இன்னல் வந்தாலும் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னாள். பின்னர் பீடிகையைத் தொழுதாள். பாத்திரத்தைக் கையிலேந்தினாள். ஆகாயத்தின் வழியே கிளம்பினாள். காவிரிப் பூம்பட்டினம் சேர்ந்தாள். தன்னைக் காணாமல் வாடிய தன் தாய் மாதவியையும், சுதமதியையும் கண்டாள். அவர்களுடைய முற்பிறவியையும் அவர்களுக்குச் சொன்னாள். அட்சய பாத்திரத்தின் தன்மையை எடுத்துரைத்தாள். அவர்கள் இருவரும் அது கேட்டு அதிசயப்பட்டார்கள். அதன்பின் அவர்கள் மூவரும் அறவண அடிகளிடம் சென்றார்கள். அவர் அப்பாத்திரத்தின் பண்பினை அவர்களுக்கு விளக்கினார். அந்தப் பாத்திரத்தின் சொந்தக்காரனான ஆபுத்திரனின் வரலாற்றை அறவண அடிகள் விரிவாகச் சொன்னார்.

ஆதிரை அன்னமிடல்

அங்கிருந்து வந்த மணிமேகலை பிக்குணிக் கோலம் தாங்கினாள். அவளது கைகள் பாத்திரத்தைத் தாங்கின. அவள் வீதி வழியே நடந்தாள். பலர் அவளை இன்னாரென்றே தெரிந்துகொள்ளவில்லை. அவளைத் தெரிந்து

கொண்டவர்கள் மயங்கி நின்றார்கள். "இவள் எதற்காக இந்த வேடம் பூண்டாள்? இவளுக்கு இந்தப் பாத்திரம் எவ்வாறு கிடைத்தது? யார் கொடுத்திருப்பார்கள்? இதில் பிச்சை யெடுத்துச் சாப்பிடப்போகிறாளா? இவளுக்கு எதற்காக இந்த வேதனை? இவளது தாயிடம் எவ்வளவு பொருள் இருக்கிறது! பல தலைமுறைக்கு அவளது செல்வம் பயன் படுமே! மேலும், இவளை இளவரசன் காதலித்திருக்கிறானே! அவனை மணந்துகொண்டால் இவள் இளவரசியாக வாழலாமே! மாதவியின் மனமும் இதில் ஏன் ஈடுபடவில்லை? ஒரு வேளை அவளுக்குத் தன் மகளின் வழி நல்ல வழியாகப் படுகிறதோ! ஏனென்றால், அவளுமல்லவா துறவுக் கோலம் பூண்டிருக்கிறாள்! அவளது உடலோ தெய்வக் காரியங்களைச் செய்கிறது. நாவோ புத்த பிரானின் வாய்மொழிகளைச் சொல்கிறது. செவியோ, அறச் சொற்களையே கேட்கிறது. மனமோ கருணைக் கடலை எண்ணி நிற்கிறது. அந்த வழியில்தானே தன் மகளையும் பழக்கியிருப்பாள்! இந்தச் சிறு வயதுப் பெண் நல்ல வழியையே தேடிக்கொண்டாள்; இனி நடப்பதைப் பார்க்கலாம்" என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

அமுத சுரபியுடன் சென்ற மணிமேகலை, "இந்தப் பாத்திரம் அரியது. இது, ஏழை மக்களின் வயிற்றை நிரப்புகிற உணவுச் சத்திரம், பசிப்பிணியைப் போக்கும் பெட்டகம். இதில் முதலிலே யாரிடமிருந்தாவது அன்னத்தை அடையவேண்டும். அந்த அன்னம் கற்புள்ள பெண்ணொருத்தியால் விரும்பித்தரப்பட வேண்டும்! அத்தகைய பெண்ணை எங்கே போய்த் தேடுவது" என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

அவ்வூரில் காய சண்டிகை என்ற ஒரு பெண் இருந்தாள். முனிவர் ஒருவர் இட்ட சாபத்தினால் அவளை யானைத் தீ என்னும் நோய் பற்றியது. அது, எவ்வளவு உண்டாலும்

பசியடங்காத ஒரு நோய். அது அவளைப் பன்னிரண்டு ஆண்டுகள் வாட்டியது. அந்த முனிவர் காய சண்டிகைக்கு, "ஒரு சமயம் மணிமேகலை என்பவள் அமுத சுரபியிலிருந்து உனக்கு ஒரு பிடி சாதம் கொடுப்பாள். அதை உண்டால் உனது நோய் நீங்கும்" என்று சொல்லியிருந்தார். மணிமேகலையைக் கண்டதும் அவளுக்கு முனிவரின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. மணிமேகலையின் சொற்களைக் கேட்டதும், மகிழ்ந்தாள். அந்தப பாத்திரத்தில் ஆதிரை அன்னம் இட்டால் நல்லது என்று எண்ணினாள். மணிமேகலையின் அருகில் வந்தாள். ஆதிரையின் வரலாற்றைச் சொன்னாள். "ஆதிரை என்பவள் கற்பிற் சிறந்தவள். அவளது கணவன் வியாபாரம் செய்வதற்காக வெளிநாட்டுக்குப் புறப்பட்டான். அவன் ஏறிச்சென்ற கபபல் கவிழ்ந்துவிட்டது. பிரயாணிகள் எல்லோரும் கடலில் மூழ்கி இறந்துவிட்டார்கள். அவர்களுடன் தன் கணவனும் இறந்துவிட்டான் என்று ஆதிரை நினைத்தாள். அதனால், தீக்குளித்து உயிர் விடத் தீர்மானித்தாள். உடனே அசரீரி 'மகளே உனது கணவன் சாகவில்லை! நாகர் லோகததிலே சுகமாக இருக்கிறான். இன்னும் சில நாட்களில் திரும்புவான். நீ கவலைப் படவேண்டாம்' எனச் சொல்லியது. தீயும அவளைச் சுடவில்லை. அவள் அணிந்திருந்த மாலையும் கருகவில்லை. எல்லோரும் அவளைக் 'கற்புத் திலகம்' என்று கொண்டாடினார்கள். அசரீரி வாக்கின்படியே ஆதிரையின் கணவன் திரும்பி வந்தான். பின்னர், இருவரும இன்பமாகக் காலம் கழித்தனர்."

காய சண்டிகை சொல்லி முடித்ததும் மணிமேகலை, ஆதிரையின் இல்லத்தை நோக்கிச் சென்றாள். மணிமேகலை வாய்திறந்து எதுவும் பேசவில்லை. பாத்திரத்தை மட்டும் ஏந்திக்கொண்டு நின்றாள். அவளது மனத்தில் இருந்தது ஆதிரைக்குத் தெரிந்துவிட்டது. அவள், உடனே ஒரு பிடி சாதம் கொண்டுவந்து அமுத சுரபியில் இட்டாள். "இது

மேலும் மேலும் வளரவேண்டும்" என்று மனத்தில் நினைத்தாள். மணிமேகலை புறப்பட்டாள். அவளது கை காய சண்டிகைக்கு ஒரு பிடிசாதம் அள்ளிக் கொடுத்தது. அவ்வளவுதான்! கொடுத்ததும் அவளைப் பற்றியிருந்த யானைத் தீ அவளை விட்டு நீங்கியது.

பல ஏழைகள் மணிமேகலையைச் சுற்றிக் கொண்டார்கள். அவள் அவர்களுக்கு அமுதினை அள்ளி அள்ளிக் கொடுத்தாள். எவ்வளவு பேருக்குக் கொடுத்த போதிலும் உணவு குறையவில்லை; பெருகிக்கொண்டே வந்தது. பலர் உண்டு பசி யாறினர். பசி தீர்ந்தவர்கள் முகத்தில் மகிழ்ச்சி பெருகியது.

காய சண்டிகை மணிமேகலையை உலக அறவிக்குச் செல்லும்படி சொல்லிவிட்டு தன் ஊரை நாடிச் சென்று விட்டாள். மணிமேகலை அவளது சொற்படி உலக அறவி சென்றாள். அதை மும்முறை வலம்வந்து பணிந்தாள். ஏழைகள் எல்லோருக்கும் உணவளித்தாள். அந்த இடத்திலே இதன் காரணமாக ஆரவாரம் ஏற்பட்டது.

உதயகுமரன் அம்பலம் சென்றது

மணிமேகலை பிக்குணிக் கோலத்துடன் பாத்திரம் ஏந்திப் பிச்சை யெடுத்த செய்தி சித்திராபதிக்கு எட்டியது. அதைக் கேட்ட அவள், உள்ளம் கொதித்தாள். மனம் கலங்கினாள். "மணிமேகலையின் இந்தச் செயலை ஒழிப்பேன்", என்று சொல்லி எழுந்தாள். தன் அருகில் இருந்த நாடகப் பெண்களை நோக்கி, "கோவலன் இறந்தது கேட்டு மாதவி துறவு பூண்டது தவறு. அது நகைக்கத் தக்கது. நாம் கணவன்மாருடன் இறக்கும் பத்தினிப் பெண்கள் அல்லவே! துறவுக்கோலம் பூண்டது நமது குலவழக்கமல்ல. மணிமேகலை துறவு பூண்டதை நான் மாற்றுவேன். அவளைப்

பல நாளாக விரும்பியிருக்கும் உதய குமரனைக் கொண்டு அவனை அழைத்து வருவேன்'' என்று சபதம் செய்தாள்.

உதயகுமரன் இருக்கும் இடத்தைத் தேடிச் சித்திராபதி புறப்பட்டாள். அவன் பளிங்கு மண்டபத்திலே இருந்தான்.

உபவனத்திலிருந்து சென்ற உதயகுமரனுக்கு மணி மேகலையின் நினைவு அடிக்கடி வந்துகொண்டிருந்தது. அவளது துறவுக் கோலம் அவனுக்கு வியப்பைத் தந்தது. அவளது இயல்பை எண்ணிப் பார்த்தான். மணிமேகலா தெய்வமும் சுதமதியும் அவளைப் பற்றிக் கூறியதை நினைத் தான். அவனுக்கு மணிமேகலையிடம் உண்மையிலேயே மதிப்பு ஏற்பட்டது. " அவள் உண்மையிலேயே துறவியாகத் தான் இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அவள் எந்த ஆடவனையும் விரும்பாமல் இருக்க முடியுமா? எந்தக் குலத்திலே பிறந்தவளுக்கு எப்படிப்பட்ட குணம் அமை கிறது? அவளது தாய் துக்கத்தினால் உலகை வெறுத்தாள்; துறவு பூண்டாள். இவள் சின்னஞ் சிறிய வயதிலேயே துறவு மேற்கொண்டு விட்டாள். இனி நாம் அவளது அருகிலே செல்லக் கூடாது! நெஞ்சமே! நீ அவளைச் சிறிதும் நினைக்கக் கூடாது! இன்று முதல் மறந்துபோ!" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

அந்த நேரத்திலே சித்திராபதி வந்தாள். மணிமேகலை உலக அறவியை அடைந்திருக்கிருள் என்று சொன்னாள். அவன், தான் முன்பு மணிமேகலையைச் சந்தித்ததையும், அவளது மனப்பண்பையும் விரிவாய்ச் சொன்னான். அவளது துறவின் பெருமையையும் விளக்கினான். பணத்தாசை கொண்ட அந்தக் கிழவி உதயகுமரனின் சொல்லைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. மென் மேலும், உதயகுமரனைத் தன் பக்கம் இழுக்கப் பார்த்தாள். நயமான சொற்களைச் சொன்னாள். அவனைத் தன் வயப்படுத்தினாள். இறுதியில் சித்திராபதியின் சொல்லுக்கு உதயகுமரன் இணங்கி விட்

டான். அவன் மணிமேகலையிடம் கொண்டிருந்த தூய எண்ணம் சிதறி ஓடியது. அவளை எப்படியாவது அடைய வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் எழுந்தது. உடனே எழுந்தான்; உலக அறிவினை அடைந்தான். அந்தச் சமயத்தில் மணிமேகலை ஏழைகளுக்கு உணவளித்துக் கொண்டிருந்தாள். அதன் காரணமாக அவளது முகம் மலர்ந்தது. அவளது மனம் வேறெதிலும் செல்லவில்லை. உதயகுமரன் தன் அருகில் நிற்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை. இந்த நிலையை உதயகுமரன் கண்டான். அவளுக்குத் தீங்கு செய்ய அவன் மனம் ஒப்பவில்லை. அதனால் அவன், மணிமேகலையை நோக்கி, "நீ இந்த தரும காரியம் செய்வதற்குக் காரண மென்ன?" என்று கேட்டான்.

உதய குமரனைக் கண்டவுடன் மணிமேகலை திடுக்கிட்டாள். அவன் தனக்கு ஏதாவது தீங்கு செய்வான் என்றெண்ணிப் பயந்தாள். இருந்தாலும் அவள் சிறிது தைரியம் அடைந்தாள். உதயகுமரனை வணங்கி, "உலகத்தில் தரும காரியங்கள் அழியாமல் இருக்கும். ஏனையவை அழிந்துவிடும். அறத்தினால்தான் இன்பம் ஏற்படும். உலக ஆசைகள் நமக்குக் கெடுதியைக் கொடுக்கும். ஆதலால், நான் இந்தத் தருமத்தைச் செய்து கொண்டிருக்கிறேன்," என்று சொன்னாள்.

அவனிடமிருந்து தப்பிக்க வழியைத் தேடினாள். வேற்றுருக் கொள்வதுதான் வழியெனத்தென்பட்டது அவளுக்கு. உடனே கோயிலினுள் சென்றாள். சம்பாபதியை வணங்கினாள். மணிமேகலா தெய்வம் தனக்களித்திருந்த மந்திரத்தை ஓதினாள். காய சண்டிகையின் வடிவம் கொண்டாள். அமுத சுரபியைக் கையிலேந்தியபடி வெளியே வந்தாள். அவள் அவ்வாறு வந்ததை உதயகுமரன் அறிந்துகொள்ளவில்லை. உள்ளே சென்ற மணிமேகலை சம்பாபதியின் கோயிலினுள்ளே ஒளிந்து கொண்டாள் என்று நினைத்தான்.

கோயிலினுள்ளே சென்று சம்பாபதியை வணங்கினன் "பிச்சைப் பாத்திரத்தைக் காய சண்டிகையின் கையிலே கொடுத்துவிட்டு, தான் ஒளிந்துகொண்ட மணிமேகலையை இங்கே எப்படித் தேடுவேன்? நீ அவளை எனக்குக் காட்ட வில்லையென்றால், பல நாளானாலும் சரி, இந்த இடத்தை விட்டுப் போகமாட்டேன்! மணிமேகலையை இங்கே விட்டு விட்டு, நான் மட்டும் தனியே போகமாட்டேன். உனது திருவடியை வணங்குகிறேன்" என்று சபதம் செய்தான்.

சிறைக்கோட்டம் அறக்கோட்டமானது

உதயகுமரன் சம்பாதியை வணங்கிச் சபதம் செய்த போது, அங்கிருந்த தெய்வங்களில் ஒன்று, "கடவுள் முன் சத்தியம் செய்தது தவறு. பட்டினி கிடந்தாலும் உனக்குப் பயன் கிடைக்காது. நீ வந்த காரியம் தவறானது. மனத்திலே மாசை வைத்துக்கொண்டு தவம் இயற்றுவது நல்லதல்ல. அதனால் நீ திரும்பச் செல்வதே நல்லது" என்று உரைத் தது. இந்தச் சொற்கள் அவன் மனத்தை வருத்தின. மணி மேகலையின் செயல்கள் அவனுக்கு வியப்பைத் தந்தன. என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. பெரு மூச்சு விட்டான். "அவளை எப்படியாவது கண்டுபிடித்து விடவேண்டும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண் டான். அரண்மனையை அடைந்தான்.

மணிமேகலை காய சண்டிகையின் உருவத்திலேயே நடமாடினாள். பல இடங்களுக்கும் சென்றாள். பசித்தவர் களுக்கு அன்னமிட்டாள். அவள் போகும் வழியில் ஒரு சிறைக் கூடம் இருந்தது. சிறையில் உள்ள மக்கள் துன் பத்தால் வாடினர். போதாததற்கு பசித்துன்பமும் அவர்களை வாட்டியது. அவர்களைக் கண்டதும் மணிமேகலை இரக்கப் பட்டாள். அமுத சுரபியிலிருந்து உணவை, அள்ளி

அள்ளி, பசியுள்ளவர்களுக்குத் தந்தாள். அவர்கள் இதனால் மகிழ்ச்சி யடைந்தார்கள். எல்லோரும் மணிமேகலையை வாழ்த்தினார்கள். இந்தச் செய்தி மன்னனுக்குத் தெரிந்தது. மணிமேகலையை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அவ்விதமே, மணிமேகலை அழைத்துச் செல்லப்பட்டாள். அரசன், காயசண்டிகை வடிவத்தில் இருக்கும் மணிமேகலையைப் பார்த்தான். அவளது இளமையும் அழகும் தரும குணமும் அவனுக்கு வியப்பைத் தந்தன. அவன் மணிமேகலையை நோக்கி, "பெண்ணே! நீ யார்? உனக்கு இந்தப் பாத்திரம் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டான். மணிமேகலை, மன்னனுக்குத் தன் உண்மைப் பெயரைச் சொல்லவில்லை. அவள், "மன்னரே! நீர் வாழ்க! நான் ஒரு விந்தையான பெண்! நான் தற்போது வேறு உருவம் கொண்டிருக்கிறேன். இந்தப் பாத்திரத்தை எனக்கு ஒரு தெய்வம் தந்தது. இது தெய்வத்தன்மை பொருந்தியது. யானைத் தீ என்ற தீராப் பசி நோயைத் தீர்த்தது இது. இதிலிருந்து உணவு எடுத்தால் குறைவதில்லை. எடுக்க எடுக்கப் பெருகிக் கொண்டேயிருக்கும். ஏழை எளியவரின் பசியை இப்பாத்திரம் போக்கிவிடும்" என்று அதன் பெருமைகளையெல்லாம் எடுத்துக் கூறினாள். அரசன் ஆச்சரியப்பட்டான். மணிமேகலையை நோக்கி, அவள் என்ன விரும்புகிறாள் என்று கேட்டான். அதற்கு மணிமேகலை, 'சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கினால் போதும்" என்று சொன்னாள். மன்னனுக்கு மணிமேகலையிடத்தில் மிக்க அன்பு ஏற்பட்டுவிட்டது. அதனால், மறுநாளே சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்கினான். அங்கே பல அறச் செயல்கள் நடைபெற்றன. சான்றோர்கள் மணிமேகலையைப் புகழ்ந்தனர்.

உதயகுமரன் கொலை செய்யப்படல்

உதயகுமரன், நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் கேள்விப் பட்டான். "கோவிலுக்குச் சென்ற மணிமேகலை என்ன ஆனாள்? அவளுடைய பிச்சைப் பாத்திரம் காய சண்டிகைக்கு எப்படிக் கிடைத்தது? மணிமேகலைதான் காய சண்டிகை வடிவத்தில் இருக்கிறாளா? அவளுக்கு வேற்றுருவம் எடுக்கும் வித்தைகூடத் தெரியுமா? அப்படியானால், அவள் இன்னும் என்னென்ன வித்தைகள் தெரிந்து வைத்திருக்கிறாளோ! உண்மையை அறிய வழி என்ன? இப்போதே உலக அறவிக்குச் செல்லலாம். அங்கே சென்றால் உண்மை தெரிந்துவிடும்'' என்று எண்ணி, அவன் உலக அறவிக்குச் சென்றான்.

முன்னே கூறிய காயசண்டிகையின் கணவன் ஒரு வித்தியாதரன். காஞ்சனன் என்பது அவன் பெயர். அவனும் அவளும் வந்துகொண்டிருந்த போதுதான் காய சண்டிகை ஒரு முனிவரின் சாபத்துக்கு ஆளானாள். அதனால் காயசண்டிகையை அங்கேயே விட்டு விட்டுத் தன் நாடு சென்றான். பன்னிரண்டு வருடம் கழித்து, சாபம் விமோசனம் ஆகியிருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். பன்னிரண்டு வருடங்கள் முடிந்தும், காயசண்டிகை அவனிடம் வந்து சேரவில்லை. அதனால், அவள் என்ன ஆனாள் என்று பார்க்கக் காவிரிப்பூம்பட்டினம் வந்தான். எங்கெங்கோ தேடினான். அவள் கிடைக்கவில்லை. கடைசியில் உலக அறவிக்கு வந்தான்.

அப்போது மணிமேகலை காய சண்டிகையின் வடிவத்திலே இருந்தாள். தனது அட்சயபாத்திரத்தின் மூலம் ஆருயிர் மருந்தை ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்ட காஞ்சனன், தன் மனைவி என்று எண்ணிக்கொண்டான். அவளருகே சென்

ருன். அவனை நோக்கி, "யானைத் தீ என்னும் நோய் எப்படி நீங்கியது? உனக்கு ஏது இந்தப் பாத்திரம்? இது தெய்வப் பாத்திரம்போல் தெரிகிறதே! இந்தச் சிறிய பாத்திரமா இத்தனை பேருக்கு உணவு கொடுத்தது" என்று பல கேள்விகளைக் கேட்டான். காஞ்சனன் எண்ணத்தை மணிமேகலை அறிந்து கொண்டாள். ஆனால், அப்போது அவனிடம் உண்மையைச் சொல்லப் பயந்தாள். காரணம், உதயகுமரன் அப்போது அவளது அருகிலே நின்றுகொண்டிருந்தான். உண்மையை அவன் அறிந்தால், தனக்குக் கேடு ஏற்படும் என்று நினைத்தாள்.

உடனே உதயகுமரனின் அருகில் சென்றாள். அவனுக்கு இளமையின் அழிவை எடுத்துச் சொல்ல நினைத்தாள். அந்த நேரத்தில் இயல்பாகவே அந்தப் பக்கத்தில் வந்த வயதான கிழவியைச் சுட்டிக்காட்டி, "அழகான கருங் கூந்தல் தன் நிறத்தை இழந்து, தூய வெண் நிறம் ஆகிவிட்டது. அவளுடைய வில் போன்ற புருவத்தின் விதமே இப்போது மாறிவிட்டது. ஒளி பொருந்திய அவளது கண்களில் இப்போது கண்ணீர்தான் உதிர்கிறது. அவளது கோவையிதழின் நிறமே கொள்ளை போய்விட்டது! அழகான அவளது விரல்கள் கூட அழகிழந்துவிட்டன. தோல்வற்றிப் போயிருக்கும் அவளது உடலைப் பாரும். நாம் மனிதர்கள்; நமக்குப் பகுத்தறிவு இருக்கிறது. நன்மை தீமையைப் பாகுபடுத்தி, நல்லனவற்றையே செய்யவேண்டும். மிருகங்களைப் போல் நடந்துகொள்ளக் கூடாது. நீரோ, மன்னனின் மகன்! கல்வியறிவு முழுவதும், பெற்றிருக்கிறீர்! அப்படிப் பட்டவர் அற்ப ஆசைகளை ஒழித்துவிடுவதுதான் சிறந்தது. எனவே எந்தச் செயலையும் ஆராய்ந்து செய்யுங்கள்" என்று சொன்னாள்.

காஞ்சனன் இந்தச் சொற்களைக் கேட்டான். அவனுக்குக் கோபம் அதிகரித்தது. "நமது மனைவியாகிய இவள்

நம்மைப் பார்க்கவில்லை. வேற்று ஆடவனிடம் அன்பாகப் பேசுகிறாள். அவனையே இவள் விரும்புகிறாள் போலிருக்கிறது. அதனால்தான் நம்மை அசட்டை செய்து இங்கேயே தங்கி விட்டாள்! நாமும் இங்கேயே தங்கவேண்டும். மேற்கொண்டு என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அவனை ஒழித்து விடுவதுதான் நல்லது'' என்று முடிவு கட்டினான். ஓரிடத்தில் மறைந்திருந்தான்.

மணிமேகலை சொன்ன நல்வார்த்தைகள் எதுவும் உதயகுமரனின் காதில் விழவில்லை. காயசண்டிகையின் வடிவத்தில் இருந்த மணிமேகலையை அவன் அறிந்து கொண்டான். இரவில் வரத் தீர்மானித்தான்.

இருவருடைய எண்ணங்களையும் மணிமேகலை அறிந்து கொள்ளவில்லை. தனது அவமதிப்பினால் காஞ்சனன் வெறுப்புக்கொண்டு விட்டான் என்று நினைத்தாள். தனது அறவுரையால் உதயகுமரன் திருந்திவிட்டான் என்றும் எண்ணினாள். இந்த எண்ணம் அவள் மனத்திற்கு ஆறுதல் தந்தது. இனிமேல் தான் பயமின்றி ஏழைகளின் பசியைத் தீர்க்கலாம் என்று முடிவு கட்டினாள்.

உதயகுமரன், தான் எண்ணியபடியே அங்கு நள்ளிரவில் வந்தான். ஒளிந்திருந்த காஞ்சனன், அவன் வந்ததைக் கண்டு விட்டான். காய சண்டிகையை நாடித்தான் அவன் வந்திருக்கிறான் என்று நிச்சயம் செய்து கொண்டான். அவனுக்குக் கோபம் மூண்டது. கொஞ்சமும் தாமதிக்கவில்லை. அவன் மன்னன் மகன் என்ற செய்தி அவனுக்குத்தெரியாது. விரைந்து சென்றான்; உதயகுமரனைத் தன் வாளால் வெட்டித் தள்ளினான். உதய குமரனின் உடல் இரண்டு துண்டாயிற்று; அவன் மாண்டுமடிந்தான்

தன் மனைவி காயசண்டிகையுடன் தன் நாடு செல்லத் தீர்மானித்தான். அந்த வேடத்துடனிருந்த மணிமேகலையின் அருகில் சென்றான். அப்போது அங்கிருந்த கந்திற்பாவை

என்ற தெய்வம் அவனை அழைத்தது. அவனிடம், "நீ அவளருகில் செல்லாதே! அவள் உன் மனைவி காயசண்டிகையல்ல! அவள், மணிமேகலையாவாள். உதய குமரனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே இந்த வடிவத்தை அவள் தாங்கிக்கொண்டாள். உனது மனைவி காயசண்டிகை இறந்துவிட்டாள். இமயமலைக்குப் போகின்ற பாதையில் அவளை விந்தா கடிகை என்ற அரக்கி விழுங்கிவிட்டாள். உன்னால் கொலை செய்யப்பட்ட இந்த வாலிபன் மன்னனின் மகனாவான். சிறிதும் யோசித்துப் பார்க்காமல் இந்தச் செயலைச் செய்துவிட்டாய். இதனால் வரும் துன்பம் உன்னைத் தொடர்ந்துதான் தீரும்" என்று சொல்லியது. அதைக் கேட்ட காஞ்சனன் மிகவும் வருந்தினான். தன் நகரத்தை நோக்கி நடந்தான்.

கந்திற்பாவை சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த மணிமேகலை அதிசயப்பட்டாள். உதயகுமரனின் பரிதாப நிலை கண்டு மனம் வருந்தினாள். சென்ற பிறவியில் அவன் தனது கணவனாக இருந்தான் என்ற எண்ணம் அவளுக்கு மேலும் வருத்தத்தைத் தந்தது. புலம்பினாள்; உதய குமரனின் மேலே விழப்போனாள். அப்போது கந்திற்பாவை அவளைத் தடுத்து நிறுத்தியது. அவளுக்கு அறிவுரை கூறியது. மணிமேகலை தெளிவு பெற்றாள். கந்திற் பாவையை நோக்கிச் சில கேள்விகள் கேட்டாள். அது இவளது பழம் பிறப்பை உணர்த்தியது. அதைக் கேட்டுத் தெளிவு கொண்டாள். தனது வருங்காலத்தைப்பற்றிக் கேட்டாள். அந்தத் தெய்வமும் பின்னால் நடக்க விருக்கும் நிகழ்ச்சிகளையும் சொல்லியது. மணிமேகலை காஞ்சிப்பதி சேர்வாளென்றும் அங்கே பல அற்புதங்கள் நேருமென்றும் சொல்லியது.

பொழுது விடிந்தது; சம்பாபதியின் கோயிலுக்குச் சென்றவர்கள் உதய குமரன் வெட்டுண்டு இறந்து கிடப்பதைக் கண்டார்கள். அங்கிருந்த முனிவர்களுக்குத் தெரிவித்

தார்கள். முனிவர்கள் மன்னனிடம் சென்ருர்கள். செய்தியை நேரடியாகச் சொல்லாமல் பழைய கதைகளை நினைவூட்டி அதன் மூலம் சொல்ல ஆரம்பித்தார்கள். இறுதியில் உண்மையை மன்னனுக்குத் தெரிவித்தார்கள். மணிமேகலையின் மேல் உதயகுமரன் கொண்டிருந்த மையலையும், அதனுல் அவன் கொலை செய்யப்பட நேர்ந்ததையும் விளக்கமாகச் சொன்னுர்கள். மன்னன், தன் புதல்வன் மடிந்ததை எண்ணிக் கூட வருந்தவில்லை. அவன் தீச் செயலில் இறங்கியதை நினைத்துத்தான் வருந்தினன். தன் மகன் சோழ குலத்துக்கே மாருத பழியை ஏற்படுத்தி விட்டதாக எண்ணினன். ‘அத்தகைய ஈனத்தனம் உள்ளவனை, உலகத்தார் தெரிந்து கொள்வதற்கு முன் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லுங்கள்’ என்று கட்டளையிட்டான். அவனது துயரம் அதிகரித்தது. அதற்கு மாற்றுத் தேடினன். மணிமேகலையின்மீது பாய்ந்தது கோபம். உடனே, “மணிமேகலையைச் சிறையில் அடையுங்கள்” என்று கட்டளை பிறப்பித்தான். காவலாளர்கள் அவன் சொன்ன இரண்டு வேலைகளையும் உடனே செய்து முடித்தார்கள்.

இராசமாதேவியின் சூழ்ச்சி

தனது மகன் கொலை செய்யப்பட்டதை இராசமாதேவி அறிந்தாள், மிகவும் துன்பப் பட்டாள். அவளது துன்பத்தை எவராலும் நீக்க முடியவில்லை. தன் மகன் செய்தது தவருன செயல் என்பது அவளுக்குத் தெரியாமல் இல்லை. ஆனுலும், அவன்மீது அவள் கொண்டிருந்த அன்பு, அந்தத் தவறை மறைத்தது. அவளது கோபம் மணிமேகலையிடம் திரும்பியது. “தாசிப்பெண்ணுக்குக் கற்பு ஒரு கேடா? எனது மகனை அவள் மணந்து கொண்டால் தாழ்வா வந்துவிடும்? அவளும் அவளது துறவும்! என் மகன் உயிருக்கு உலை வைத்து விட்டாள்! அவளை எளிதில் விடக்கூடாது! சித்திர

வதை செய்யவேண்டும்! அப்போதுதான் என் மனம் நிம்மதி அடையும்!" என்றெல்லாம் நினைத்தாள். உறுதியும் கொண்டாள்.

பின்னர் இராசமாதேவி மன்னனிடம் சென்றாள். மன்னனை அழைத்து, "என் தலைவரே! மணிமேகலை தவத்தில் சிறந்தவள். அவள் தரும காரியங்களில் ஈடுபட்டிருக்கிறாள். அவளால் பலபேர் தம் பசியை ஒழித்திருக்கிறார்கள். அத்தகைய சிறப்புப் பொருந்திய ஒருத்தியை உதயகுமரன் விரும்பியது தவறுதான். அந்தத் தகாத எண்ணம்தான் அவனைக் கொன்றுவிட்டது. அத்தகைய ஒருவனுக்காக நாம் வருந்தவேண்டாம். அப்படி வருந்துவதால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. ஒரு குற்றமும் செய்யாத மணிமேகலையைச் சிறையில் போட்டது தவறுதான், அவளை வெளியிலே விடுவதுதான் நல்லது. அவள் தனது இச்சைப்படி தரும காரியங்கள் செய்யட்டும். அல்லது அவள் என்னுடன் வேண்டுமானாலும் இருக்கட்டும்" என்று, மனதில் ஒன்றும் வெளியில் ஒன்றும் வைத்துப்பேசினாள். இராசமாதேவியின் வஞ்சகத்தை மன்னன் அறிந்துகொள்ளவில்லை. அவன் மணிமேகலையைச் சிறையினின்றும் விடுவித்தான். இராசமாதேவியுடன் வாழும்படி கட்டளையிட்டான்.

மணிமேகலை அரசியிடம் வந்தாள். அவளும் அரசியின் வஞ்சனையை அறிந்துகொள்ளவில்லை. ஒருநாள் இராசமாதேவி, மணிமேகலைக்குச் சோறு படைத்தாள். அப்போது, அந்தச் சோற்றில் கிறுக்குத்தனம் ஏற்படும் மருந்தைக் கலந்துவிட்டாள். அதை மணிமேகலை உண்டால், பைத்தியம் பிடித்து அலைவாள் என்று இராசமாதேவி எண்ணினாள். ஆனால், அந்த மருந்து மணிமேகலையை ஒன்றும் செய்யவில்லை.

அது பலிக்காமல் போகவே, இராசமாதேவி இன்னொரு வழியைக் கையாண்டாள். மணிமேகலை தங்கியிருந்த அங்

தப்புரத்திற்கு ஓர் ஆண் மகனை அனுப்பினாள். மணிமேகலை தன்னை விரும்பினாள் என்று அவன் சொல்லும்படியாக ஏற்பாடு செய்தாள். அவன் அப்படியே மணிமேகலையின் அருகில் சென்றான். அரசியின் வஞ்சகத்தைத் தெரிந்து கொண்ட மணிமேகலை தான் ஆண் வேடம் எடுத்துக் கொண்டாள். வந்த இளைஞன் கண்டு அஞ்சினான். நடுங்கி ஓடினான்.

அரசி கடைசியாக இன்னொரு வழியைக் கையாண்டாள். மணிமேகலையை ஓர் இருட்டறைக்குள் வைத்து அடைத்தாள். அவள் நோய்வாய்ப் பட்டுவிட்டாள் என்று சொன்னாள். இருட்டறையில் இருந்த மணிமேகலைக்கு ஆகாரம் கொடுக்கவில்லை. அவள் பட்டினியால் இறந்துவிட வேண்டும் என்பதுதான் அரசியின் எண்ணம். மணிமேகலை, அதிலும் தப்பித்துவிட்டாள். மணிமேகலா தெய்வம் அவளுக்குக் கற்றுக்கொடுத்த மந்திரத்தில் ஒன்றை நினைத்தாள்; பசியே அவளுக்கு ஏற்படவில்லை.

இதைக் கண்டதும் இராசமாதேவி நடுங்கி விட்டாள். அவளுக்கு அச்சம் ஏற்பட்டுவிட்டது. மணிமேகலையின் தன்மையை எண்ணி அதிசயப்பட்டாள். அவள் தெய்வத் தன்மை பொருந்தியவளோ என்று எண்ணினாள். அவளுக்குத் தான் துன்பங்கள் தந்ததை எண்ணி வருந்தினாள். அவ்வளவு துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு தன்னை ஒரு வார்த்தை கூடச் சொல்லாத மணிமேகலையின் உள்ளப் பண்பை எண்ணி வியந்தாள். அவளிடம் மன்னிப்புக் கேட்க நினைத்தாள். அவ்வாறே மணிமேகலையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். அவளைப் பலமுறை வணங்கினாள்.

அரசி செய்த குற்றங்களை, மணிமேகலை குற்றமாகக் கருதவில்லை. அரசி அறியாமல் செயதாள் என்று எண்ணினாள். அரசிக்கு அநேக நல்லுரைகளைச் சொன்னாள், மணி

மேகலையின் அன்பு மொழிகளால் அரசியின் புண்பட்ட மனம் ஆறுதல் அடைந்தது. அவள் நல்லறிவும் பெற்ருள். மணி மேகலையைத் தெய்வமென்று வணங்கினுள்.

ஆபுத்திரனுடு அடைந்தது

உதய குமரன் இறந்ததும், மணிமேகலை சிறைப்பட்டதும் சித்திராபதிக்குத் தெரிந்தன. அவள் மணிமேகலையைத் தன்னிடம் வைத்துக்கொள்ளவேண்டும் என்றே மீண்டும் எண்ணினுள். இராசமாதேவியிடம் சென்ருள்; மணிமேகலையைத் தன்னிடம் விட்டுவிடுமாறு வேண்டினுள். சித்திராபதி தீய தொழிலில் பணம் தேடுவதை அரசி ஏற்கனவே அறிந்திருந்தாள். அதனுல் அரசி, "மணிமேகலை உத்தமமானவள்; அவள் உனது விருப்பத்துக்குப் பயன்படமாட்டாள். அவளை நீ அழைப்பதில் பயனே கிடையாது" என்று சொல்லி, சித்திராபதியை அனுப்பிவிட்டாள்.

மணிமேகலை சிறைப்பட்டதைக் கேட்ட மாதவி துன்பப் பட்டாள். "அன்புள்ள மகளே! உனக்கும் இந்தத்துன்பம் வரவேண்டுமா? நமக்கு இதுவரை வந்த துன்பங்கள் போதாதா? நீ ஒரு சிறு எறும்புக்குக் கூடத் துன்பம் செய்ய மாட்டாயே! அப்படிப்பட்ட நீயா, உதய குமரனைக் கொன்றிருப்பாய்! உன்னை விசாரியாமலேயே சிறையில் அடைத்து விட்டார்களா? உன்னை நான் எப்படி மீட்பேன்?" என்று கதறினுள். பின்னர் சுதமதியுடன் அறவண அடிகளை நாடிச் சென்ருள். அவருடைய துணையுடன் அரசியிடம் வந்தாள். அடிகளை, அரசி உட்பட அங்கிருந்தோர் அனைவரும் வணங்கினுர்கள். அவர், அவர்களுக்கு நல்லுபதேசம் செய்தார். மணிமேகலையின் துறவற மாண்பை விளக்கிச்சொன்னுர்.

பின்னர் அறவண அடிகள் சென்று விட்டார். மணி மேகலை இராசமாதேவியை நோக்கி, "நான் இனி இந்த

நகரத்தில் இருக்க மாட்டேன்! இனி இங்கிருந்தால் எல்லோரும் என்னைக் குறை கூறுவார்கள். உதயகுமரனின் சாவுக்குக் காரணமானவள் என்று பழித்துரைப்பார்கள். அதனால், நான் இப்பொழுதே ஆபுத்திரனுடைய நாட்டுக்குச் செல்லுகிறேன். பின்னர் அங்கிருந்து மணிபல்லவம் சேருவேன். அப்படியே பல நாடு சென்று வழக்கம்போல நான் தருமம் செய்து கொண்டிருப்பேன். என்னைப்பற்றி நீங்கள் கவலை கொள்ளவேண்டாம்" என்று சொல்லி, ஆகாய வழியே சென்றாள்.

மணிமேகலை புண்ணியராசன் நகரத்தை அடைந்தாள். அங்கிருந்த ஒரு சோலை அவளது மனதைக் கவர்ந்தது. அச்சோலையின் வனப்பைக் கண்டு அதிசயித்தாள். அது யாருடைய சோலை என்று, அங்கிருந்த முனிவர்களைக் கேட்டாள். அவர்கள், அந்நகரின் பெயர் நாகபுரம் என்றும், அதை ஆளும் மன்னன் புண்ணியராசன் ஆவான் என்றும் சொன்னார்கள். புண்ணியராசன் பிறந்த நாளிலிருந்து மழை பொய்க்கவில்லை என்றும் சொன்னார்கள்.

அந்தச் சமயத்தில் புண்ணியராசன் தனது மனைவியோடு அங்கு வந்து சேர்ந்தான். தரும சாவகர் என்னும் முனிவர் அவர்களுக்குத் தருமோபதேசம் செய்துகொண்டிருந்தார். அம்மன்னன் மணிமேகலையைக் கண்டான். முனிவரை நோக்கி, "இந்தப் பெண் யார்! இவள் கையிலே ஏன் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி நிற்கிறாள்? இவள் எங்கிருந்து வந்திருப்பாள்?" என்று கேட்டான்.

முனிவர் மன்னனை நோக்கி, "இவள் காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்தவள். இவளது பெருமை அங்கே உள்ள அறவண அடிகள் கூறக் கேட்டிருக்கிறேன். இளமையிலேயே துறவு பூண்ட இவளுக்கு ஈடு இணையுள்ளவர்கள் கிடையாது. இவள் தெய்வத் தன்மை பொருந்தியவள்" என மணிமேகலையின் மாண்புகளை எடுத்துச் சொன்னார்.

மணிமேகலை வைத்திருக்கும் அமுத சுரபி ஆபுத்திரன் என்பவனிடமிருந்தது என்று பார்த்தோம். அவன் தரும குணமுடையவன். ஏழைகளுக்கு உணவு தருவதையே தன் குறிக்கோளாகக் கொண்டவன். ஒரு காலத்தில் நாடு மிகவும் வளம் பெற்றுவிட்டது. பசிக்கிறது என்று சொல்ல ஆள் இல்லாமல் போய்விட்டார்கள். அவனைத்தேடி ஒருவர் கூட வரவில்லை. அவன் மனம் மிகவும் வருந்தியது. அன்ன தானம் செய்யாமல் வாழ்கின்ற வாழ்க்கை அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அமுத சுரபியைக் கோமுகியில் எறிந்துவிட்டான். பட்டினி கிடந்து உயிர் விட்டான். அந்த ஆபுத்திரன் தான் புண்ணியராசனாகப் பிறந்திருந்தான். இந்த வரலாறு மணிமேகலைக்கு நன்கு தெரியும். அதனால் அவள் புண்ணிய ராசனை வணங்கி, "அரசே! சென்ற பிறவியில் இந்தப் பாத்திரம் தங்களிடம் இருந்தது. இப்போது என் கையில் இருக்கிறது. தங்களுக்குப் பழைய நிகழ்ச்சிகள் மறந்துவிட்டது போலும். உங்களது முந்திய பிறப்பின் நலங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், தாங்கள் மணிபல்லவம் போகவேண்டும். அங்கே உள்ள புத்த பீடிகை உங்கள் வரலாற்றைத் தெரிவிக்கும்" என்று சொன்னாள்.

சில நாட்களில் மணிமேகலை மணிபல்லவம் சென்றாள். புண்ணிய ராசனும் உடன் சென்றான். புத்த பீடிகையைத் தொழுதான். தன் பழம் பிறப்பின் உண்மையைத் தெரிந்துகொண்டான். தீவதிலகை மணிமேகலையைக் கண்டாள். காவிரிப்பூம் பட்டினம் கடலால் அழிந்துவிட்டது, என்ற செய்தியைச் சொன்னாள். அதுகேட்டு மணிமேகலை மிகவும் வாடினாள். தீவதிலகை, காவிரிப்பூம் பட்டினம் அழிந்ததற்குக் காரணம் சொன்னாள். சோழநாட்டு மன்னனின் மகனை அவனது தாய் ஒரு கப்பலில் ஏற்றிச் சோழ நாட்டுக்கு அனுப்பினாளாம். அந்தக் கப்பல் கடலிலே

கவிழ்ந்து விட்டதாம். செய்தி அறிந்த மன்னன் சித்தம் கலங்கினனும். புதல்வனை இழந்த துயரத்திலே புத்தி தடுமாறி விட்டானும். கடற் கரையிலேயே சுற்றித்திரிந்தானும். அதனுல் இந்திரவிழா நடத்த வேண்டியதை மறந்துவிட்டானும். மணிமேகலா தெய்வம் அதைப் பொறுத்துக் கொள்ளவில்லையாம். "இந்த நகரத்தைக் கடல் அழிக்கட்டும்" என்று சபித்துவிட்டதாம். அதன்படி கடல் நகரத்தை அழித்துவிட்டதாம். ஆனுல், மாதவியும் சுதமதியும் அறவண அடிகளோடு வஞ்சி நகரத்திலே சுகமாக இருக்கிருர்களாம். அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லையாம். அதைக் கேள்விப்பட்ட உடனே மணிமேகலை வஞ்சி நகரத்தை நோக்கிச் சென்ருள். புண்ணிய ராசன் தன் நாடு திரும்பினன்.

மணிமேகலையின் மாண்பு

மணிமேகலை வஞ்சி நகரை அடைந்தாள். அங்கே மாதவியையும் சுதமதியையும் கண்டாள். அவர்களுடன் ஆனந்தமாக இருந்தாள். கற்புக்கரசியான கண்ணகியின் கோவிலுக்குச் சென்ருள். அவளைத் தரிசித்தாள். அந்த நகரிலேயே தங்கினள். பௌத்த மதக் கோட்பாடுகளை அறிஞர்கள் மூலம் தெரிந்து கொண்டாள்.

ஒரு நாள் வீதி வழியே சென்று கொண்டிருந்தாள். அப்போது ஒரு பௌத்த தவப் பள்ளியில் மாசாத்துவான் தவம் செய்து கொண்டிருந்தான். அவனைக் கண்டு வணங்கினள். தனது வரலாற்றைச் சொன்னள். அவனும், தன் மகனும் மருமகளும் பெற்ற துன்பத்தைக் கேட்டு, தான் துறவு மேற் கொண்டதாகச் சொன்னன். ஊர் ஊராக அலைந்து கடைசியில் வஞ்சி நகர் வந்தானும். அங்கிருந்து, சொந்த ஊருக்குப் புறப்பட எண்ணியபோது, முனிவர்கள் தடுத்தார்களாம். காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழியும் என்று சொன்னர்

ளாம். அதனுல்தான் அவன் வஞ்சியிலேயே தங்கி விட்டானும். தன் வரலாற்றைச் சொல்லி முடித்தான் மாசாத்துவான். காஞ்சி நகரிலே மக்கள் பசியால் துன்பப் படுகிறுர்கள் என்றும் அதை மணிமேகலை தீர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான்.


உடனே மணிமேகலை காஞ்சி நகர் நோக்கிப் பறந்தாள். அந்த நகரத்திலே மழையே இல்லை. மக்கள் பஞ்சத்தால் வாடினுர்கள். பசியால் வருந்தினுர்கள். பல பேர் உயிர் விட்டார்கள்.

காஞ்சி நகர் சென்ற மணிமேகலை, அந் நகரத்து அரசனைக்கண்டாள். அவனது விருப்பத்தைக்கேட்டாள். அவளது பெருந் தன்மையை ஏற்கனவே அந்த மன்னன் அறிந்திருந்தான். அவன் அவ்வூர்ச் சோலையில் புத்த பீடிகை ஒன்றை அமைத்திருந்தான். மணிமேகலை பீடிகையைத் தொழுதாள். "பசியால் வாடும் மக்களே! வாருங்கள்! உங்களுக்கு உணவு இங்கே இருக்கிறது! வயிருர உண்ணலாம் வாருங்கள்" என்று அழைத்தாள். அந்தச் சத்தம் பசியுள்ளவர்களின் காதுகளில் விழுந்தன. முதலில் அதை அவர்கள் நம்பவில்லை. யாரோ ஏமாற்று வித்தைக்காரர்கள் தமது நாட்டுக்கு வந்து ஏமாற்றுவதாக எண்ணினுர்கள். "வாருங்கள்" என்ற ஒலி அதிகரித்தது. ஓசை தொடர்ந்து கேட்டது. மக்கள், சத்தம் வந்த திக்கை நோக்கிச் சென்றுர்கள். அங்கே நடந்த காட்சியைக் கண்டார்கள்; அதிசயப்பட்டார்கள். அருத பசியை ஒவ்வொருவரும் ஆற்றிக் கொண்டிருந்தார்கள்; தீராத பசியைத் தீர்த்துக் கொண்டிருந்தார்கள். கூட்டம் பெருகிக்கொண்டே சென்றது. கூட்டத்தைக் கண்டு மணிமேகலையின் மனம் நோகவில்லை; தளரவுமில்லை. ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியோடு உணவு தந்தாள். அவளை எல்லோரும் தரும தேவதை என்று சொன்னுர்கள். பசிப்பிணி உள்ளவர்களின் பிணி நீங்கியது.

அவர்கள் உள்ளமெல்லாம் மகிழ்ந்தன. "மணிமேகலை வாழ்க! மணிமேகலை வாழ்க" என்று வாழ்த்தொலி எழுப்பினர்கள்.

அந்தச் சமயத்தில் அறவண அடிகள், மாதவி, சுதமதி ஆகிய மூவரும் அங்கே வந்தனர். மணிமேகலை அறவண அடிகளைக் கண்டு வணங்கினள். அவரிடம் அறவுரை கேட்டாள். அந்த நகரத்திலேயே தங்கி விட்டாள். பிறப்பை அழித்துக்கொள்ள நோன்பிருந்தாள். நோன்பின் மூலம் நன்னிலை அடைந்தாள்.

முற்றும்



தோ. ந. வீரராகவன்

புத்தர் வாழ்வில் நிகழ்ந்த மனம் உருக்கும் நிகழ்ச்சிகளை, மனித ஜாதியின் வாழ்வுக்கும், வளத்துக்கும் நல்லறிவு புகட்டும் காட்சிகளை ஆசிரியர் வீரராகவன் அவர்கள் கருத்தும் வனப்பும் நிறைந்த செழிப்பான தமிழில் சொற்சித்திரமாக தீட்டியிருக்கிறார்.

விலை ரூபாய் ஒன்றரை

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்

Jacket Printed at Commercial Printing & Publishing House, Madras-1